ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
(விபரங்கள் 21-ம் பக்கம்)

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 4 07 – 13 ஜனவரி 1999 முழக்கம்: 208

Gnanam Center




ஐரோப்பா எங்கும் எமது கிளை ஸ்தாபனங்கள் ஆரம்பமாகியுள்ளன. விபரங்கள் உள்ளே

## தலைமன்னார்
# டோரா பீரங்கிப்படகு வெடித்துச் சிதறியது
# மன்னார் கடலில் பலத்த சமர்

(04.01.1999)

இன்று அதிகாலை மன்னார் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் சிறீலங்கா கடற்படையினருக்கும் இடையே கடற்சமர் இடம்பெற்றுள்ளது.

நேற்று நள்ளிரவு தலைமன்னார் கடற்படைத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த டோரா பீரங்கிப்படகு வெடித்துச் சிதறியுள்ளது. இக் குண்டுவெடிப்பிற்கான காரணத்தை ஈழமுரசினால் உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும் தலைமன்னார் கடற்படைத் தளத்தினுள் கடற்புலிகளே ஊடுருவ தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள் என மன்னார் வட்டாரங்கள் செய்தி தருகின்றன.

இக் குண்டு வெடிப்பை உறுதிப்படுத்தியுள்ள சிறீலங்கா கடற்படை அதிகாரிகள், தமது பீரங்கிப்படகில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கி ஒன்று தற்செயலாக வெடித்ததினாலத்தான் குண்டுவெடிப்பு ஏற்பட்டு பீரங்கிப்படகு சேதமடைந்தது என கூறியுள்ளனர்.

இதேவேளை மன்னார் கடற்

(☞ 2ம் பக்கம்)

## மாரிகால பாதுகாப்புக்கே மாங்குளத்தை புலிகள் கைவிட்டனர் - சண்டே டைம்ஸ்

(04.01.99)

வன்னி ஏ-9 நெடுஞ்சாலையில் மாங்குளம் பகுதியை புலிகள் விட்டுக் கொடுத்தமைக்கான உண்மையான காரணம் அங்கு அமைக்கப்பட்டிருந்த புலிகளின் பாதுகாப்பு நிலைகள் மாரிகாலத்தில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தக்கூடியதே என்பதனாலேயே என 'சண்டே டைம்ஸ்' இராணுவ விமர்சகர் சமித தெரிவித்துள்ளார். ஆனால் கிளிநொச்சி உயர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அது மாரிகாலத்தில் பாதுகாப்பானது எனவேதான் அதனை புலிகள்



தந்திரமாக கைப்பற்றினர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெயசிக்குறுப் படைகள் வவுனியா - ஆனையிறவு பாதையை கைப்பற்றினால் அதனைப் பாதுகாக்க ஒவ்வொரு 50 மீற்றர் இடைவெளியில் ஒரு பதுங்குகுழியை அமைக்கவேண்டும். ஒரு பதுங்குகுழிக்கு 5 படையினர் தேவைப்படுவர். இதற்கு 16,000 படையினர் தேவைப்படுவர். இதற்கு உதவியாக மேலும் 16,000 படையினர் வீதியெங்கும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தால்தான் புலிகளின் தாக்குதலிலிருந்து தப்பிக்கலாம் எனச் சுட்டிக்காட்டிய ஆய்வாளர் கிளிநொச்சியுடன் ஒப்பிடுகையில் மாங்குளம் ஒரு சந்திபோன்ற நகரமே எனக் கூறியுள்ளார்.

## 'நாமிருப்பால்தான் ஜனநாயக அரசியல் உயிர்வாழ்கிறது'
### - ஆனந்தசங்கரி -

(04.01.1999)

"நாமிருப்பதால்தான் ஜனநாயக அரசியல் உயிர்வாழ்கிறது"

இது தமிழர் விடுதலை கூட்டணியின் உபதலைவர் வி.ஆனந்தசங்கரி அவர்கள் இன்று ஈழமுரசிடம் சொன்ன வார்த்தைகள்.


கூட்டணியின் யாழ். மாவட்ட செயலாளர் பொன் மதிமுகராசா அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து கொழும்பிலிருந்து வெளியாகும் ஐலன்ட் (The Island) ஆங்கிலப் பத்திரிகையில் விடுதலைப் புலிகள் மீது இக் கொலைக்கான கண்டனத்தை ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்தார். (03 ஞாயிறு பதிப்பு முன்பக்க செய்தி)

பொன். மதிமுகராசாவின் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிக்கை ஏதும் விடாத நிலையில் ஆனந்தசங்கரி எவ்வாறு விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டை தெரிவித்திருக்கிறார்? அதற்கு ஆதாரம் என்ன என்பதை தெளிவாக்கும் நோக்குடன் ஈழமுரசு அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதே மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

இனவாதத்தை கக்கும் ஐலண்ட் பத்திரிகைக்கு கண்டனம் தெரிவிக்க வாயைத்திறந்த ஆனந்தசங்கரி ஈழமுரசிற்கு ஏன் கருத்துத் தெரிவிக்க மறுக்கிறார்?

ஏற்கனவே சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் தென்னா பிரிக்கப்பேட்டி தொடர்பாக தான் தெரிவித்த கருத்திற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் ஈழமுரசு ஊடாக பகிரங்கச் சவால் விடுத்தமை தொடர்பாகவும், தமது (கூட்டணி) அரசியலுடன் (!!?) குமார் போன்றவர்களின் அரசியலை கணக்கிலெடுத்து குமாரின் அரசியல் வரலாறு தெரியாமல் ஈழமுரசு செய்தி பிரசுரித்து விட்டது என்பதும் ஆனந்தசங்கரி அவர்களுக்கு கோபம்.

(☞ 2ம் பக்கம்)





01.01.1999
ஈரோ
ஐரோப்பாவின் புதிய நாணய வரவு

## பலியான சிப்பாய்களின் எண்ணிக்கை முப்பதாக உயர்வு

(04.01.1999)

சிறீலங்கா இராணுவத்தினர் 'தரசர' என்னும் குறியீட்டுப் பெயருடன் கிரானிலிருந்து தொப்பிக்கல காட்டுப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவ நடவடிக்கை ஒன்று புலிபாய்ந்தகல் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் இடை மறித்துத் தாக்குதலை மேற்கொண்டதால் பலத்த இழப்புகளைச் சந்தித்ததுடன், தனது நடவடிக்கையையும் முடிவிற்குக்கொண்டுவந்துள்ளது.

கடந்த 31ம் திகதி அதிகாலை வேளையில் கிரான் பால இராணுவ முகாமிலிருந்து துருப்புக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றனர். முகாமிலிருந்து சுமார் 1 1/2 கிலோமீற்றர் மேற்கேயுள்ள புலிபாய்ந்த கல் சந்தியை நண்பகல் அளவில் இராணுவ அணிகள் சென்றடைந்தன. பின்னர் இரு பிரிவுகளாக பிரிந்த இராணுவ அணிகள் பெண்டுகள்சேனை நோக்கியும் மியன்ரன்குளம் வீதியூடாகவும் நகர முயற்சித்தன. இவ்வேளை இராணுவ அணிகளை எதிர்பார்த்து நிலையெடுத்துக் காத்திருந்த விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் இராணுவத் தரப்பு மீது கடுமையான தாக்குதல்களை நடாத்தினர். சுமார் 3 மணி நேரத்திற்கு மேலாக இத் தாக்குதல் நீடித்தன. விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படைப்

(☞ 2ம் பக்கம்)

## வன்னியில் புலிகளின் சர்வதேசத் தொலைபேசி

வன்னியில் விடுதலைப்புலிகள் சர்வதேசத் தொலைபேசி சேவையினை மக்களுக்கென ஆரம்பித்துள்ளனர். புதுக்குடியிருப்புப் பகுதியில் இச்சேவை நடாத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் வன்னி மக்கள் இச்சேவையினால் சர்வதேச நாடுகளில் வசிக்கும் தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இத்

(☞ 2ம் பக்கம்)

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது

Kumars Shop
S. A. R. L.

80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.

90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் இதயமாய் முழங்குவது ஈழமுரசு

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

*நிர்வாகி:*
ப. வேலுப்பிள்ளை

*நிறுவக ஆசிரியர்:*
அமரர் க. கஜேந்திரன்

*ஆசிரியர்:*
பி.சிவகுரு



தபால் தொடர்புகளுக்கு:

EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 0796350216

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804


(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நாமிருப்பதால்தான்...

தான் சொல்லலாததையெல்லாம் சொன்னதாக பிரசுரிப்பதே பத்திரிகைகளின் வேலை என கொழும்பு தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளின் பட்டியல் ஒன்றையும் அடுக்கிறார் ஆனந்த சங்கரி.

குமார் போன்றவர்களின் கருத்தினை தூக்கிப்பிடிக்கும் பத்திரிகைகள். தமிழரசு விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான்து எனவும் குறிப்பிடுகிறார்.

அடிக்கடி 'என்ன இலாபத்திற்காகவா நாங்கள் இங்கே இருக்கிறோம்'? இதை ஈழமுரசும் உணர்ந்துகொள்ள வேண்டும் என தெரிவிக்கும் ஆனந்த சங்கரி தாம் அரசியலில் இருப்பதால்தான் சிறிதளவாவது 'ஜனநாயக அரசியல் உயிர்வாழ்கிறது எனவும் அழுத்திக் கூறி, தாம் நால்வர் இல்லாவிட்டால் அழிவுதான் எனவும் குறிப்பிடுகிறார். (யார் அந்த நால்வர், ஆனந்தசங்கரி, சிவசிதம்பரம், நீலன் திருச்செல்வம், இரா. சம்பந்தன்?)

விடுதலைப் புலிகள் பொன். மதிமுகராசாவின் கொலைக்கு உரிமை கோராத நிலையில் ஐலன்ட் ப்த்திரிகையில் புலிகளுக்கு கண்டனம் தெரிவித்தது பற்றி ஈழமுரசு வினவ,

நான் இன்றுதான் யாழ்ப் பாணத்தில் இருந்து திரும்பினேன். 'ஐலன்டில்' தான் சொன்னது பற்றி என்ன வந்தது என்பது தெரியாது என்றார்.

(இவ்வேளை ஈழமுரசு, ஐலன்டில் அவர் தெரிவித்திருந்த கருத்தினை அவரிடமே தெரிவிக்கிறது)

'If those responsible for Mr. Mathimugarajah's death had seen his wife and two children after the Killing, they would have preferred to bite their cyanide capsules rather than carry out such orders of the LTTE hierarchy', *Ananda Sangari said.*

இப்படியான கருத்தினை தான் தெரிவிக்கவில்லை. 'ஐலன்ட்' காரங்கள் மாத்திப் போட்டுட்டாங்கள் ஆனால் அதுபற்றி கருத்தும் தெரிவிக்கமாட்டேன் என்றவர், உங்களுக்கு (ஈழமுரசுக்கு) தான் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றனவே ஏன் எம் மீதுதான் குறியாக இருக்கிறீர்கள் எனவும் எரிச்சல்பட்டு விட்டு 'தான் கருத்தேதும் தெரிவிக்க விரும்பவில்லை என போடும்படி'யும் கூறி முடித்தார்.

**நெஞ்சில் கரவுடையர் -**
**கரப்பர்**
**கரவிலார் நெஞ்சத்தவர்'**
**(அவ்வையாரின்**
**நாலடியாரிலிருந்து)**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பலியான...

பிரிவினர் இராணுவ அணிகள் மீது கடுமையான பீரங்கித் தாக்குதல்களை நடாத்தினர். இதே வேளை கிரான்பால முகாம் மீதும் விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினர். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத படையினர் தமது இராணுவ நடவடிக்கையை இடைநிறுத்திவிட்டு பலியான சிப்பாய்களையும் காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு பின்வாங்கினர்.

மட்டக்களப்பிலிருந்து கிடைத்த செய்திகளின்படி இத் தாக்குதலில் குறைந்தது 30 சிப்பாய்கள் பலியாகியும் 40-ற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்ட சிப்பாய்களில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட சடலங்களில் நான்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இராணுவத் தரப்பிடம் ஒப்படைக்கப் பட்டது. காயமடைந்த படையினர் வாழைச்சேனை, பொலநறுவை, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னியில்...

தொலைபேசிச் சேவைபற்றி கொழும்புப் பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டுள்ளன. 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வாரஏடு இதபற்றி செய்தி வெளியிடுகையில் செய்மதி ஊடாக புலிகளின் தொலைபேசி சேவை இயங்குகிறது எனவும் வெளிநாட்டிற்கான அழைப் பொன்றிற்கு 750 ரூபாய்கள் மட்டுமே மக்கள் செலுத்துகிறார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## தலைமன்னார்...

பரப்பில் இன்று அதிகாலை பலத்த சமர் இடம்பெற்றுள்ளது. மன்னார் கடற்பரப்பில் பயணம்செய்த 6 கடற்புலி படகுகளை தமது படையினர் இடைமறித்து தாக்கியதாக சிறீலங்கா கடற்படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர். இதன் போது இரண்டு கடற்புலி படகுகள் மூழ்கடிக்கப்பட்டு இரண்டு படகுகள் சேதமாக்கப் பட்டதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

மன்னார் கடற்பரப்பினுள் கற்பிட்டி பகுதியில் இருந்து உள்நுழைந்த படகுகளே தாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஒரு கடற்படையினன் காயமுற்றதாக மட்டும் அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். இத் தாக்குதல் தொடர்பான எதுவித உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களையும் புலிகளின்குரல் வானொலி இன்று வெளியிடவில்லை.

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்: 11.04.1929



விண்ணுலகில்: 06.01.1998

## திரு. சுப்பிரமணியம் மார்க்கண்டு

*(மானிப்பாயை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகரை நீண்டகால வசிப்பிடமாகக் கொண்டவர்)*

**சென்றனையோ ஐயா!**
**வாழ்ந்த நாள் போதுமென்று**
**எமையெல்லாம் தவிக்கவிட்டு**
**இவ்வுலகம் தனை நீத்து**
**இறைவனடி சேர்ந்தீரோ!**
**ஆண்டொன்று சென்றாலும்**
**ஆறாத்துயருடனே வாழ்கின்றோம்**
**இனிவருமா நாம் சேர்ந்திருந்த காலம்.**
**எந்தையே எந்தோ உமையிழந்து**
**நிர்க்கதியாய் நிற்கின்றோம்!**

நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்பு மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

தகவல்: மா.பாஸ்கரன் - 01 70 20 01876
Cornichon Str- 29A, 76829 Landau, Germany.

Pub

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்கள்**

## திரு. சரவணமுத்து பரராஜசிங்கம்

(இளைப்பாறிய தொலைத் தொடர்பாளர்)

அன்னையின் மடியில்: 04.09.1941 - இறைவனடியில்: 25.12.1995

## திருமதி சிவஇன்பநாயகி பரராஜசிங்கம்

அன்னையின் மடியில்: 04.12.1941 - இறைவனடியில்: 04.11.1995

அன்பின் உருவாய் பண்பின் உறைவிடமாய் பாசமுள்ள பெற்றோராய், கடமை மிகு தாய் தந்தையாய் எமை வாழ வைத்த தெய்வங்களே, நீங்கள் விண்ணுலகம் தனில் ஒருவர் பின் ஒருவராய் விரைந்ததேனோ!

**ஆண்டு மூன்று ஒடி மறைந்திடினும் அப்பா அம்மா உங்கள் அன்பும் பண்பும் சிரிப்பும் என்றென்றும் மனதைவிட்டு நீங்காது.**

*இதயக் கூடுகளின் உள்ளே மனனம் செய்யப்பட்ட உங்கள் நினைவுகளை மரணத்தால் எப்படி அழிக்க முடியும் சொல்லுங்கள்...!*

*பிள்ளைகள்: ரதி, கண்ணன், தீபன்*

- ப.பரந்தாமன், W.C. Vegen -87, 9014 TROMSO, Norway.
Phone : 77 67 67 42/ 916 87 519

Pub


# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனை ஆலிம்நகர் பௌத்தருக்கு உரியது முஸ்லீம்களை வெளியேற உத்தரவு

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள ஒலுவில் ஆலிம் சேனைப் பகுதியில் வசிக்கும் முஸ்லீம் மக்கள் உடனடியாக அவ்விடங்களைவிட்டு வெளியேறவேண்டும் என சிறீலங்காவின் அக்கரைப்பற்று பொலிசார் கடந்த 28ம் திகதி அறிவித்ததுடன், 5 முஸ்லீம்களையும் கைதுசெய்துகொண்டு சென்றுள்ளனர். இந்த இடங்களில் சிங்கள மக்களின் புனித சின்னங்கள் இருப்பதாகவும் முஸ்லீம் மக்கள் அதற்குக் குந்தகம் செய்ய முயல்வார்கள் எனவும் பொலிசில் சிங்களவர்கள் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை பொலிசாரால் எடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான முஸ்லீம்கள் இப் பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கை செய்து வருவதால் அறுவடைகாலம் முடியும்வரையாவது இப் பகுதியில் தங்கியிருக்க அனுமதிக்குமாறு பொலிசாரிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் அதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. மேற்படி முஸ்லீம் மக்கள் கடந்த 40 வருடங்களிற்கு மேலாக இப் பகுதியில் பயிர்செய்து வருபவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

# யாழ்.பாரதி வீதியில் புதிய காவலரண்

யாழ். கண்டி வீதியின் பாரதி வீதிச் சந்தியில் சிறீலங்காப் படையினரின் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாகவும் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நகருக்குள் வரும் வாகனங்களும் நகரிலிருந்து வெளிச் செல்லும் வாகனங்களும், இச் சோதனைச் சாவடியின் முன்னாள் கடுமையாகச் சோதனையிடப்படுகின்றன. இதேநேரம் ஆரியகுளம் சந்தியிலும் இராசாவின் தோட்டப் பகுதியூடாக வருபவர்களையும் சோதனையிட புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை பண்டத்தரிப்பு, விளான் வீதியில் அமைக்கப்பட்டிருந்த சிறீலங்காப் படையினரின் பாரிய சோதனை நிலையம் மூடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாகவே இச் சோதனைநிலையம் மூடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# தேர்தல் வேளையில் புலிகள் ஊடுருவலாமாம்

வடமேல் மாகாணத்தில் நடாத்தப்படவுள்ள மாகாண சபைத் தேர்தல் வேளையில் புலிகள் அப்பகுதியில் ஊடுருவி தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என அச்சமடையும் சிறீலங்காப் பொலிசார் குருநாகல், குளியாப்பிட்டி, சிலாபம், நிக்கவரெட்டியா ஆகிய பகுதிகளில் விசேட கண்காணிப்புகளையும் தேடுதல்களையும் மேற்கொண்டுவருகின்றன. தேர்தலை முன்னிட்டு பிரச்சாரங்களில் ஈடுபட சந்திரிகாவும், ஏனைய அமைச்சர்களும் இப் பகுதிக்கு வரவிருப்பதால் இச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடாத்தக்கூடும் எனத் தெரிவித்த வடமேல்மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்கள் ஏதும் தெரிந்தால் உடனடியாக பொலிசாருக்கு அறியத்தருமாறும் பிரச்சாரம் செய்து வருகின்றார்.

# உறவினர் வீட்டிற்குச் சென்ற இரு சகோதரிகளும் எங்கே?

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவாஜினி (23), சுப்பிரமணியம் தர்மினி(20) ஆகிய சகோதரிகள் கடந்த 22ம் திகதி கட்டப்பிராயில் உள்ள தமது உறவினர் வீட்டிற்குச் சென்றவேளை காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் சிறீலங்காப்படையினராலோ அல்லது தமிழ் குழுக்களினாலோ கடத்திச் செல்லப்பட்டிருக்கலாமென இவரது உறவினர்கள் அச்சமடைந்துள்ளனர். இதுவரை இவ்விருவர் பற்றிய செய்திகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக பாலியல் வல்லுறவுகளும், படுகொலைகளும் அதிகளவில் பெறுவதால் இவர்களின் நிலைகுறித்து பெரிதும் அஞ்சப்படுகிறது.

# நுவரெலியா இந்து புனித நகர் திட்டம் இடை நிறுத்தம் அமைச்சர் அவசர அறிவிப்பு

நுவரெலியாவில் அமைக்கப்படவிருந்த சீதை ராமர் ஆலயம், புனித நகர் திட்டப் பணிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் அமைச்சர் தர்மசிறீ சேனநாயக்கா அறிவித்துள்ளார். சிங்கள அமைப்புக்கள் பௌத்த பிக்குகள் ஆகியோர் மேற்படி திட்டத்திற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இத் திட்டத்தை இடைநிறுத்திய சிறீலங்கா அமைச்சர், இவ்விடயத்தை சிறீலங்கா ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்த பின்னரே மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிங்களவர்களின் காணிகளை முஸ்லீம்கள் சுரண்டுவதாகக்கூறி அம்பாறை மாவட்ட பௌத்தகாங்கிரஸ் என்னும் அமைப்பு அம்பாறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளது.

# புலிகள் மோட்டார் தாக்குதல்

அம்பாறை - பதுளைவீதிச் சந்தியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய மோட்டார் தாக்குதலில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன், அதிரடிப்படையினர் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் சுமார் 3 மணி நேரமாக இம்முகாம்மீது தொடர்ச்சியான மோட்டார் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

# வேட்டி சால்வையை அணிந்த இளைஞரே மதிமுகராசாவைச் சுட்டார்

நல்லூரில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர்விடுதலைக் கூட்டணி யாழ்.மாவட்டச் செயலாளர் மதிமுகராசாவின் கொலை பற்றி நேரடியாகக் கண்ட ஒருவர் தகவல் தெரிவிக்கையில், வேட்டி சால்வை அணிந்தவாறு கூட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர் ஒருவரே சம்பவ நேரத்திற்குச் சில நிமிடங்களிற்கு முன்னர் மதிமுகராசாவை அழைத்துச் சென்றதாகவும் அதன் பின்னர் வெடிச்சத்தம் கேட்டதாகவும் தெரிவித்தனர். விழா மண்டபத்தில் இருந்து மேற்படி இளைஞரினால் அழைத்துச் செல்லப்பட்ட மதிமுகராசா வீதியைக் கடந்து வாகனமொன்றின் அருகாமையில் பேசிக்கொண்டிருந்தவேளையே வெடிச்சத்தம் கேட்டதாகவும் அவர் தெரிவித்தார். இதனால் மதிமுகராசாவின்மீது தாக்குதலை நடாத்தியவர் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட ஒருவரே எனவும் அவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் வன்முறைகள் 60 ஆக உயர்வு

சிறீலங்கா அரசின் வடமேல் மாகாணத் தேர்தலையொட்டி அப்பகுதியில் நாளுக்குநாள் தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இதுவரை 60 இற்கும் மேற்பட்ட வன்முறைகள் நடைபெற்றுள்ளன. குருநாகல், புத்தளம் ஆகிய பிரதேசங்களில் ஐ.தே.கட்சி, பொ.ஐ.ஐ. முன்னணி ஆகியவற்றின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் ஒருவர்மீது ஒருவர், மாறி மாறி தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். கட்சி அலுவலகங்களைத் தாக்குதல், ஆட்கடத்தல் என்பனவும் பரவலாக இடம்பெற்று வருகின்றன. 10 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

10வது ஆண்டில் காலடிபதிக்கும்
இமாலயாவின்
தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்
100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே
உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....
கடுகதி பார்சல் சேவை
பிரியாணி * கொத்துறொட்டி * இடியப்பப்பிரியாணி * தண்டூரி வகைகள் * நாண் * சீஸ்நாண் * சப்பாத்தி * சமுசா * றோள்ஸ் * சோறு - கறி
இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51
றெஸ்ரோறன் இமாலயா
9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

சாந்தினி உணவகம்
14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
Tel: 01 42 09 37 99
காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு
காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு
மகிழ்ந்திட நாடவேண்டியது
சாந்தினி உணவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரமுகர்களை காக்கவைத்த சந்திரிகா

இந்தியாவிற்கு உத்தியோக பூர்வமாக விஜயத்தினை மேற்கொண்ட சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தான் அங்கு கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளின்போது தாமதமாக வருகை தந்து இந்தியத் தலைவர்களை மணிக்கணக்காகக் காக்கவைத்திருக்கின்றார். இவ்வாறு 'த பயணியர்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது. இவரின் தாமதத்தை இந்தியப் பிரதமர், பிரதி ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் குஜ்ரால், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோர் மிக மௌனமாக பொறுத்துக்கொண்டனர். இந்திய வர்த்தக கைத்தொழில் துறையைச் சேர்ந்த முக்கிய வர்த்தகத் தனவந்தர்கள், சமயத் தலைவர்கள், செய்தியாளர்கள் ஆகியோரும் சிறீலங்கா ஜனாதிபதியினால் காக்கவைக்கப்பட்டனர் எனவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதி ஜனாதிபதி கிருஷ்ணகன்ட், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோர் ஏற்கனவே நேரம் குறிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேளையில் சந்திரிகாவை சந்திக்கச் சென்றபோதிலும் அங்கு அவர் இருக்கவில்லை. ஆயினும் மறுநாள் சந்திப்பிற்கான நேரம் குறித்துக்கொடுக்கப்பட்டது. மறுநாளும் அமைச்சர் அத்வானி சென்றபொழுது அப்போதும் சந்திரிகா அங்கு இருக்கவில்லை. சோனியாவை சந்திக்க சந்திரிகா அப்போது சென்றிருந்தார். இவ்வாறு இரு தடவைகள் அத்வானி சந்திரிகாவினால் காக்கவைக்கப்பட்டுள்ள அதேவேளை, பிரதமர் வாஜ்பாய் சுமார் 20 நிமிடங்கள் சந்திரிகாவால் காக்கவைக்கப்பட்டதையடுத்து அவர் சற்று சினமடைந்து காணப்பட்டதாகவும் 'த பயணியர்' மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்திய வர்த்தக தலைவர்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிய போசன விருந்திற்கு சுமார் ஒரு மணிநேரம் தாமதமாகவே சந்திரிகா சென்றிருந்தார். சந்திரிகாவின் வருகைக்காக 250 இந்திய வர்த்தக தனவந்தர்கள் ஒரு மணிநேரம் காத்திருந்தனர்.

## வன்னியில் பெருமழை நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்வு

வன்னியில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக அங்கு பெரும் அவல நிலை எழுந்துள்ளது. பெருமழை காரணமாக நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளன. இப் பிரதேசத்திலுள்ள குளங்கள் நிரம்பி வழிவதனாலும் வீதிகளில் வெள்ள நீர் மேவிப் பாய்வதனாலும் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வட்டக்கச்சி, புளியம்பொக்கணை, அக்கராயன்குளம், துணுக்காய், புதுக்குடியிருப்பு, முள்ளியவளைவீதி, மன்னார் பூநகரி வீதி ஆகிய பகுதிகளே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வவுனிக்குள அணைக்கட்டு ஊடாக செய்யப்படும் வாகனப் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டுள்ளது. குளத்தில் நீர் மட்டம் 25 அடியாக உயர்ந்துள்ளதால் அணைக்கட்டு உடையும் அபாயமும் தோன்றியுள்ளது. இடம் பெயர்ந்த குடும்பங்கள் பொது இடங்களிலும், கோயில்களிலும் தங்கியுள்ளன. மொத்தமாக ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும், மேலும் பலர் இடம்பெயர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பருத்திக்குளம், இளமருதங்குளம், பனிச்சங்குளம், கறுவல் புளியங்குளம் ஆகியன உடைப்பெடுத்ததன் காரணமாக கிராமங்களுக்குள் வெள்ளநீர் புகுந்து, நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன.

## அம்பாறை 'ரெலிக்கொம்' கட்டடத்தில் குண்டுவெடிப்பு


அம்பாறை தொலைத்தொடர்பு நிலையத்தில் கடந்த செவ்வாயன்று *(29.12.98)* நள்ளிரவு பாரிய குண்டுவெடிப்பொன்று இடம்பெற்றுள்ளது. இக்குண்டுவெடிப்புக் காரணமாக நிலையக் கட்டடம் பலத்த சேதமடைந்துள்ளது.

அம்பாறைப் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இருக்கும் இத்தொலைபேசி தொடர்பு நிலையத்தில் நள்ளிரவிற்குச் சற்று முன்னர் பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடித்துள்ளது. குண்டுவெடித்த சத்தத்தைக்கேட்டதும் அம்பாறைப் பொலிசார் பீதி காரணமாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். விடுதலைப் புலிகள் தான் பொலிஸ் நிலையத்தை தாக்க வருகின்றார்கள் என்ற அச்சமும் அவர்களிடம் அவ்வேளை நிலவியுள்ளது. ஆயினும் இராணுவத்தினர் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு வந்து வெடிக்காத நிலையில் இருந்த இன்னொரு குண்டினை மீட்டுள்ளனர். இக்குண்டுவெடிப்புக் காரணமாக தொலைபேசித் தொடர்புகள் பாதிப்படைந்துள்ளன.

## காங்கேசன்துறை சீமெந்து ஆலை ஊழியர்கள் பத்துப்பேர் தற்கொலை

வறுமை காரணமாக காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் முன்னர் கடமையாற்றிய பத்து ஊழியர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சிறீலங்காவின் கைத்தொழில், பொது ஊழியர் சங்கச் செயலாளர் ஏச்.ஏ. வில்பேட் பெரேரா தெரிவித்துள்ளார். ஈழப்போர் -2 ஆரம்பமானதை அடுத்து 1996ம் ஆண்டு காங்கேசன்துறை சீமெந்து ஆலை இராணுவத்தினரால் மூடப்பட்டது. இதனால் இங்கு கடமையாற்றிய 400 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு மாதம் 1200 ரூபா மாத்திரமே சம்பளத்தின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டது. இதனால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட ஊழியர்கள் 10 பேர் விரக்தியுற்ற நிலையில் தற்கொலை செய்துள்ளனர். பலர் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ் ஊழியர்களின் இந்த இன்னல் நிலை குறித்து ஜனாதிபதிக்கும் தொழில் அமைச்சருக்கும் பலமுறை அறிவிக்கப்பட்டபோதும் எவ்வித பலனும் ஏற்படவில்லை எனவும் வில்பேட் பெரேரா தெரிவித்துள்ளார்.

# 14ம் ஆண்டு வீரவணக்கம்



**கப்டன் பண்டிதர்**

**சின்னத்துரை ரவீந்திரன்**

*(வல்வெட்டித்துறை)*

புலிகளின் ஆவரங்கால் முகாமை முற்றுகையிட்டு சிறீலங்கா இராணுவம் தாக்கியபோது இன்னும் நான்கு போராளிகளுடன் வீரச்சாவு.

**வீரப்பிறப்பு: 25.12.1959**

**வீரமரணம்: 09.01.1985**



**கரும் இருள் கவிந்த நிசப்தப் பொழுதுகளின்**
**உயிர் உலுக்கி எழுந்தது வெடியோசை!**
**அச்சுவேலி மண்ணை சுற்றி நின்று**
**சிங்களவன் அன்று தீர்த்த வெடிகளுக்கு**
**இன்னும் அதிர்வு உண்டு!**
**'பண்டிதர்' வீரச்சாவடைந்து ஆண்டு பல கடந்தும்**
**நின்று வலிக்கின்ற துயர் அடங்கமுடிவதில்லை.**
**உற்ற தோழருடன்**
**களத்தில் வீழ்ந்த காலம் தூரம்**
**விதைப்பதற்கு வளமான செம்மண் பூமியில்**
**உதிரம் சிந்தி உயிர் விதைத்த புலிகள்**
**இன்று...**
**விருட்சமாகி வேர்விட்டு நிற்கின்றனர்!!**

நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக உடன்பாடு இலாபமடைவது யார்?

இருதரப்பு திட்டமிட்டபடி இந்திய—சிறீலங்கா வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுவிட்டது. இவ் உடன்பாடு மூலமாக டெல்லியும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் (கொழும்பு) தலைமைத்துவமும் தமக்கிடையேயான தொடர்புகளை பலப்படுத்த முனைந்துள்ளபோதிலும் ஒப்பந்தம் மூலமாக இலாபமடைந்தது எந்தத்தரப்பு...?

மைதான்.

ஆனால் தமிழக மீனவர்களும், கச்சதீவு மீட்புப் போராட்டமும் இந்தியாவின் இக் கரிசனைக்கு பக்க விளைவுகளை கொடுப்பதுடன் ஒரு முள்ளாகவே தொடர்ந்தும் உறுத்தும் தன்மையினை இரு நாடுகளுக்கும் கொடுக்கும் சக்தியைக்கொண்டிருக்கின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான சூரிய நாராயணன் மேற் குறிப்பிட்ட

ரனி பெர்னான்டோ இராஜப்பு என்பவர் தனது சகோதரன் கடலில் காணாமல் போனமையை (சிறீலங்காக் கடற் படையினரின் ஊடுருவல் பகுதியினுள்) குறிப்பிட்டுவிட்டு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனரான வைத்தியர் ராமதாசினைத் தவிர

அதாவது இவ்வாறான நிலைகள் எதை காட்டுகின்றனவென்றால் தமிழக மீனவ சமூகத்தின் பால் பாட்டாளி மக்கள் கட்சி கொண்டிருக்கும் கரிசனையைப் போன்று தமிழகத்தின் பிரதான கட்சிகளும் தம்மை மீனவ சமூகத்தின் சார்பு நிலையினராக

## கொழும்பு இராணுவ ஆய்வாளர் தராகியின் கட்டுரையைத் தழுவி...

யாரும் இவ்வாறான பிரச்சினைகளை கவனத்தில் எடுப்பதில்லை என குறைப்படுகின்றார்.

இப்போது வி.ஐ.எஸ் ஜெயபாலனின் வாதம் சரியாகின்றது. தமிழகத்தின் பிரதான கட்சிகள் டெல்லியின் அழுத்தம் காரண

காட்டிக்கொள்வதையேயாகும். தேசியவாத கொள்கையுடைய கட்சிகள் தமிழக மீனவர்களின் மனக்குறை தொடர்பாக டெல்லி கொண்டிருக்கும் கொள்கைக்கு எதிராக தொடர்ந்தும் வாதாடுகின்றார்கள்.

கின்றர். தளபதி வழங்கிய உறுதிமொழி மீறப்பட்டதாகக் கூறி இராமேஸ்வரம் கடற்படைத் தளத்தின் முன்பாக மீனவர்கள் போராட்டம் நடாத்துகின்றனர்.

இவ்வேளை சில சிப்பாய்கள் தமது தளத்திலிருந்து துப்பாக்கிகளுடன் வெளியே வந்து போராட்டக்காரர்களை சுட்டுத் தள்ளப்போவதாக எச்சரிக்கின்றனர். அதாவது இந்தியக் குடி மக்கள் ஒருவருக்கும் பேச்சுரிமையின் அடிப்படையில் அரசியலமைப்பின் கீழ் இவ்வாறான போராட்டங்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்ட நிலையில் சிப்பாய்களின் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

போராட்டம் வன்முறையானதாகவோ அன்றி சட்ட விரோதமானதாகவோ இருந்தால் கடற்படையினர் பொலிசாரை அழைத்து போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு கேட்டிருக்கவேண்டும்.

கடற்படையினருக்கு போராட்டக்காரர்களை மிரட்டுவதற்கு எவ்விதமான அதிகாரமும் கிடையாது. இது சட்டவிரோதமானது.

கடற்படையினரின் அச்சுறுத்தலை அடுத்து அச்சம்கொண்ட

**டெல்லியின் கொள்கை வகுப்பாளர்கள் இவரது எதிர்வுகூறலை நிராகரிக்கிறார்கள். எதிர்காலத்தில் தமிழகத்தின் பிரதான கட்சிகள் ஒருபோதும் தமிழ் தேசிய சார்பு நிலையோடு விளையாட முற்பட மாட்டாது என்றும் சுட்டிக் காட்டுகிறார்கள்.**

ஜே.ஆர் ஜெயவர்த்தனா காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தின் மூலமாக இந்தியத்தரப்பு தனது வர்த்தக நோக்கங்களையும் ஒப்பந்தத்தின் 'அறுவடை' பலாபலன்களில் ஒரு முக்கிய குறிக்கோளாக கொண்டிருந்தமை என்னவோ உண்மைதான்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகளும் அவ் உறவுகள் கொண்டிருக்கும் சாதக - பாதகங்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டபோது, ஆங்கிலேயர்களிடமிருந்து சிறீலங்கா சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் இந்தியாவுடன் அது கொண்டிருந்த தனது வெளிநாட்டு வர்த்தகத்தில் 50 வீதமான பங்கும் அவதானிக்கப்பட்டது.

ஆனால் 1960 களின் ஆரம்பத்தில் இந்த விழுக்காடானது அப்போது ஆட்சியிலிருந்த சிறீலங்கா - சுதந்திரக்கட்சியின் 'தேசியவாத கொள்கை' காரணமாக கொஞ்சங்கொஞ்சமாக சரிவினைக்கண்டது. இந்தியாவின் இடத்தினை சீனாவும், பாகிஸ்தானும் பங்குபோட்டுக்கொண்டன.

ஏன் இன்றுகூட அமெரிக்க அரசு வர்த்தகத்துறை பின்னணி கொண்ட திரு.ஷான் டொன்னொவியை கொழும்பிற்கான தூதராக நியமித்தமையும் சிறீலங்காவுடன் வர்த்தகத்தில் அது கொண்டிருக்கும் கரிசனையின் ஒரு அடையாளமெனவே இந்திய—சிறீலங்கா நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஆனால் அமெரிக்காவிற்கு சிறீலங்காவுடனான வர்த்தக உறவுகள் நினைத்தளவிற்கு சாத்தியப்படுமா என்பதை இந்திய-சிறீலங்கா ஒப்பந்தம் கேள்விக்குறியாக்குகிறது. ஏனெனில் இவ் ஒப்பந்தமானது இந்தியாவை சிறீலங்காவின் முக்கியமான வர்த்தகப் பங்காளியாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் வர்த்தக 'கவலையினை' கொஞ்சம் தணிய வைத்திருக்கின்றது என்பதும் உண்

விடயத்தை ஆய்வு செய்து இது நீண்ட நோக்கிலான பிரச்சினை என்று சொல்கிறார். ஆனால் நோர்வேயிலுள்ள ஆய்வாளரான வி.ஐ.எஸ் ஜெயபாலன் இதை மறுத்துரைப்பதுடன், டெல்லியின் சிறீலங்காவிற்கான சார்பு நிலைப்பாடு தமிழகக் கரையோர மக்களிடையே கேள்வியைத் தோற்றுவித்ததெனவும் சொல்கிறார்.

தமிழக கரையோர மீனவர்கள் தமிழ் தேசியத்தின் மூலவேராக மாறிவரும் தன்மையையும் இது ஏற்படுத்தும் என்பது இவரது மற்றொருவாதம்.

ஆனால் டெல்லியின் கொள்கை வகுப்பாளர்கள் இவரது எதிர்வுகூறலை நிராகரிக்கிறார்கள். எதிர்காலத்தில் தமிழகத்தின் பிரதான கட்சிகள் ஒருபோதும் தமிழ் தேசிய சார்பு நிலையோடு விளையாட முற்படமாட்டாது என்றும் சுட்டிக் காட்டுகிறார்கள்.



மாக தமிழக மீனவர்களுக்கும் சிறீலங்கா கடற்படையினருக்குமிடையிலான பிரச்சினைக்கு சரியான அழுத்தம் கொடுப்பதில்லை. ஜெயலலிதா தனது ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலி

**அதாவது இந்தியக்குடி மக்கள் ஒருவருக்கும் பேச்சுரிமையின் அடிப்படையில் அரசியலமைப்பின் கீழ் இவ்வாறான போராட்டங்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்ட நிலையில் சிப்பாய்களின் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.**

மேற்குறித்த கருத்தினை முன்வைப்பவர்கள் உண்மை நிலைகளை ஏனோ மறந்துவிட்டார்கள். தமிழக மீனவர்களின் பிரச்சினையை கொழும்பும் மூடி மறைத்துவிடும்வேளையில் சிக்கல்கள் தொடருகின்றன. கடந்த டிசம்பர் 18ம் திகதிகூட இராமநாதபுரம், தூத்துக்குடி மீனவர்கள் 18 பேர் வடமராட்சியில் கரையொதுங்கினர். சிறீலங்கா புலனாய்வுப் பிரிவினரோ இம் மீனவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எரிபொருளை முல்லைத் தீவுக் கரையில் இறக்கிவிட்டு வந்தவர்களென சந்தேகிக்கின்றனர். இம் மீனவர்களில் ஒருவரான தூத்துக்குடியைச் சேர்ந்த அ[illegible]

கள் பற்றியதான தனது பீதி நிலையோடு, சிறீலங்காவின் கடற்படைத் தளபதியுடன் பாக்குநீரிணைப் பகுதியில் இந்திய, சிறீலங்கா கடற்படைகளின் கூட்டு ரோந்து பற்றியும் பேச்சுக்களை நடாத்தியிருந்தமையும் இவ்வேளையில் கோடிட்டு விழிக்கவேண்டிய ஒரு விடயமுமாகின்றது.

ஆனால் கொஞ்சக் காலத்தில் அதே ஜெயலலிதா பின் தனது கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழகக் கரையோர பிரதிநிதிகளின் அழுத்தம் காரணமாக கச்சதீவுப் பகுதி மீண்டும் இந்தியாவிடம் கொடுக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை [illegible]

தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கணினி வலையினூடாக அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு விபரம் பற்றி இப்போது தெரிவிப்பது உசிதமானது....

இராமேஸ்வரத்திலுள்ள கடற்படைத் தள சிப்பாய்களினால் அருகாமையில் இருக்கும் கிராம மக்கள் (அநேகமானோர் மீனவர்கள்) அடிக்கடி தாக்குதல்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். ஆனால் மேற்குறிப்பிட்ட குற்றத்தைப் புரிந்தவர்கள் தண்டிக்கப்படாமையால் தமிழகம் தழுவிய போராட்டத்திற்கு மீனவர் சங்கம் அறிவிப்புக்கொடுத்திருந்தது. இந்தவேளை இராமேஸ்வர கடற்படைத் தளபதி இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதென உறுதியளித்ததைத் தொடர்ந்து மீனவர் சங்கம் தனது போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்தது.

ஆனால் கடந்த செப்டெம்பர் 27ம் திகதி மீண்டுமொரு தாக்குதல் சம்பவம் நடைபெறுகிறது. 35 வயதான மீனவர் ஒருவர் கடற்படையினரால் தாக்குதலுக்குள்ளாக்கப்படுகிறார். மறுநாளும் 59 வயதான ஒருவரும் 40 வயதான ஒருவரும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்படு

மீனவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் தமது போராட்டத்தினை நடாத்துகின்றார்கள். பொலிசாரும் தாக்குதலை நடாத்திய கடற்படையினர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து முறைப்பாட்டினை பதிவில் இடுகின்றனர்.

இரண்டொரு நாட்களுக்குப் பின்னர் இராமேஸ்வரக் கடற்படை தளபதி தமது சிப்பாய்கள் எந்த மீனவர்மீதும் தாக்குதலை நடாத்தவில்லை என அறிவித்தலை விடுகின்றர். மேலதிக விசாரணைகளுக்கு இடமேதுமின்றி இவ்விடயம் இத்துடன் முடிவிற்குக் கொண்டுவரப்படுகிறது. இதுதானா நீதி? இந்திய அரசிடமிருந்து தமிழர்கள் எதிர்பார்த்தது இந்த நீதிதானா?

இவ்வாறாக கணினி வலைதரவு தெரிவிக்கிறது. டெல்லியும்-கொழும்பும் ஒன்றாக வருவது சோனியா காந்தியினால் இவ்வுறவுகள் எதிர்காலத்தில் உரமாக்கப்படும் என்ற நம்பிக்கைகள் தமிழ்நாடு மீனவ சமூகத்தின் அரசியல் சக்தியை அவர்களது மீன்பிடி உரிமையை, (சிறீலங்காவுக்கு வடபுற கடற்பகுதி) அந்த சமூகத்தின் சொந்தப் பிரச்சினை என்ற வடிவிற்குள்ளே தள்ளியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனை இந்தியா பிடித்துத் தந்தால் நாங்கள் நாடு கடத்துவோம்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுவோரை இந்தியா பிடித்துத்தந்தால் நாம் அவர்களை இந்தியாவிற்காக நாடுகடத்துவோம் இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தியின் கொலையில் சம்பந்தப்பட்டோரைப் பிடித்து நாடு கடத்தல் விவகாரத்தில் முன்னேற்றம் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்று நிருபர் ஒருவர் சந்திரிகாவிடம் கேட்டபோது சிறிது மௌனம் அனுஷ்டித்த சந்திரிகா, தனக்கு அருகிலே உட்கார்ந்திருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் பார்த்தார். லக்ஷ்மன் கதிர்காமரும் சந்திரிகாவின் காதில் ஏதோ சொல்லவே உடனடியாக சந்திரிகா மேற்கண்டவாறு பதிலைத் தெரிவித்தார்.

இதேவேளை பிரபாகரனைப் பிடித்து நாடு கடத்துவது தொடர்பாக இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி தன்னிடம் எதுவும் பேசவில்லை எனவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

# வன்னி அகதிகள் தொகையை கண்டறிய கணக்கெடுப்பாம்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இடம் பெயர்ந்துவாழும் மக்கள் தொகை தொடர்பான கணக்கொன்றினை நடாத்துவதற்கு சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இக்கணக்கெடுப்பிற்கென சிறீலங்காவின் குடிசன மதிப்பீட்டு திணைக்கள அதிகாரிகள் விரைவில் வன்னிப் பகுதிக்குச் செல்லவுள்ளனர்.

அகதிகள் தொகை தொடர்பாக அரசாங்க அதிபர்கள் தெரிவிக்கும் விபரங்களை ஏற்க மறுத்த அரசு தற்பொழுது இவ் விபரங்களை குடிசன மதிப்பீட்டு திணைக்கள அதிகாரி மூலம் திரட்ட திட்டமிட்டுள்ளது. இவ் அதிகாரிகளை வன்னிக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பினை ஐ.நா அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் ஏற்றுள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள இருப்பதாக உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. கணக்கெடுப்பு நடாத்தப்படும் குறித்த தினங்களில் மோதல் தவிர்ப்பு நிலை ஒன்று சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் எனவும் உயர் ஸ்தானிகராலயம் கோரியுள்ளது.

ஏற்கனவே அரசாங்க அதிபர்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்களை ஏற்க மறுத்த சிறீலங்கா அரசு, அகதிகளுக்கான நிவாரணத்தைப் பெருமளவு குறைத்ததுடன், நிவாரணத்தின் பெரும்பகுதியை விடுதலைப் புலிகள் அபகரித்துச் செல்வதாக பொய்க் குற்றச்சாட்டொன்றினையும் சுமத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சுவிசிலிருந்து வந்த இளைஞர் கடத்தப்பட்டார்

சுவிற்சலாந்தில் இருந்து கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கிய தமிழ் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு அவரிடமிருந்த பணம் மற்றும் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. சுவிற்சலாந்தில் இருந்து இவர் கொழும்பு விமான நிலையத்திற்கு வந்திறங்கியவேளை அவரை வழிமறித்த மூன்று இனம்தெரியாத நபர்கள் அவரை வாகனமொன்றில் பலவந்தமாக ஏற்றி கடத்திச் சென்றுள்ளனர். அமன்தொலுவ என்ற பகுதிக்கு இவர்கொண்டு செல்லப்பட்டு அவரிடமிருந்த 3000 அமெரிக்க டொலர்கள் மற்றும் சுவிஸ் பிராங்குகள் தங்க ஆபரணங்கள் மற்றும் பயணப் பத்திரங்கள் ஆகியனவற்றை பறித்தெடுத்துவிட்டு இளைஞரை அநாதரவான நிலையில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்.

# புத்தூரில் கிளைமோர்

புத்தூர் ஆவரங்காலில் ரோந்து சென்ற சிறீலங்கா இராணுவ அணிமீது நடாத்தப்பட்ட கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில் இரு சிப்பாய்கள் படுகாயம் அடைந்துள்ளனர். கடந்த 31ம் திகதி காலை இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து மேலதிகமாக அப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் அப் பகுதிப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

# மன்னாரில் திடீர் சோதனை

மன்னார் நகர் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து கடந்த வாரம் திடீர் சோதனைகளை நடாத்தியுள்ளனர். சின்னக்கடை முஸ்லீம்தெரு, வைத்திய சாலைவீதி, பொது விளையாட்டரங்கு, பிரதானவீதி ஆகிய இடங்களில் படையினரும் பொலிசாரும் தீவிர சோதனைகளை நடாத்தினர். பிரயாணிகளின் பேருந்துகள் யாவும் நிறுத்தப்பட்டு பயணிகள் படையினரால் மிகத் தீவிரமாக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

# வல்லுறவுக்கு இலக்கான தமிழ் யுவதி அடித்துக்கொலை!

ஆலைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த தமிழ்ப் பெண் ஒருவர் சிங்கள காடையர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு அடித்துக் கொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவம் ஒன்று மலையகத்தின் ரங்கல தோட்டப் பகுதியில் கடந்த 29ம் திகதியன்று நடைபெற்றுள்ளது. ஆறுமுகம் இராஜேஸ்வரி (21) என்ற மேற்படி யுவதி தனது கடமை முடித்து 7 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளையில் அவரை வழிமறித்த சிங்கள காடையர்கள் அவரை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்திவிட்டு, அடித்து கொலை செய்துள்ளனர். இச்சம்பவமானது மலையகத்தின் பல பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்களை பீதியடைய வைத்துள்ளது.





நடிகர்கள்
இளைய தளபதி விஜய்
கனவுக் கன்னி
ரம்பா
ரகுவரன்
நிழல்கள்ரவி
சார்லி

கதை, திரைக்கதை
டைரக்ஷன்
இயக்கம்
மனோஜ் பட்நாகர்

இசை
மனோஜ் பட்நாகர்

24 மணி நேர
தொடர்புகளுக்கு : 01 48 38 54 65
தொடர்புகளுக்கு அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களும்

இடம் : ESPACE CINEMA
AUBERVILLIERS QUATRE CHEMINS
M° : Quatre Chemins

08.01.99 வெள்ளி 8.15
09.01.99 சனி 6.15 - 9.15
10.01.99 ஞாயிறு 6.15 - 9.15
11.01.99 திங்கள் 8.15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் யுத்தத்தில் சிறீலங்கா தடுமாறுகிறது

போர்முனை ஆய்வு



பண்ணையார்

சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தம் இன்று புதிய பரிமாணங்கள் பலவற்றைத் தொட்டு விரிவாக்கம் பெற்றுள்ளது. இதில் 1998ம் ஆண்டானது சிறீலங்காவிற்கு பெரும் தலையிடியைக் கொடுத்த ஓர் ஆண்டாகவும் பெரும் இராணுவ, அரசியல் பின்னடைவுகளை ஏற்படுத்திய ஒரு ஆண்டாகவும் அமைந்திருந்தது. இதேவேளை விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை 1998ம் ஆண்டானது விடுதலைப் போரின் பல படிமுறை வளர்ச்சிகளை ஏற்படுத்திய ஆண்டாகவும், சர்வதேசரீதியாக பெரும் வெற்றிகளை ஏற்படுத்திக் கொடுத்த ஆண்டாகவும் அமைந்திருந்தது.

1998ம் ஆண்டின் ஆரம்பமே சிறீலங்காவைப் பொறுத்தவரை மிகவும் மோசமான ஒரு ஆரம்பமாக இருந்தது. பெரும் எதிர்பார்ப்புடன் தான் நடத்திக்கொண்டிருந்த பாரிய இராணுவ நடவடிக்கையை உடனடியாக முடிவுக்கு கொண்டுவந்து கிளிநொச்சியிலிருந்து சமாதானப் பேருந்து கண்டியை வந்தடையும் என சிங்களத்தின் தலைவர்கள் அறிவித்து 50 வது சுதந்திரதின கொண்டாட்டத்தை மிகப் பெரும் எதிர்பார்ப்புடன் ஏற்பாடு செய்திருந்தார்கள். உலகத் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதன் எண்ணங்களை தவிடுபொடியாக்கும் வகையில் மலையகத் தலைநகர் கண்டியில் சிங்கள பௌத்தத்தின் நினைவுச் சின்னமாய் வர்ணிக்கப்பட்டிருந்த தலதா மாளிகையில் ஜனவரி மாதம் 25ம் திகதி மாபெரும் குண்டுவெடிப்பு ஒன்று நிகழ்ந்தது. அத்துடன் பொன்விழா கொண்டாட்டங்கள் கண்டியிலிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டன. ஆனால் ஒழுங்குசெய்யப்பட்ட பெருவிழாக்கள் எதுவும் நடைபெறவில்லை. இது வெளி உலகிற்கு தான் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாக கூறமுயன்ற சந்திரிகாவிற்கு கரிபூசிய ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது. இதற்கு அடுத்ததாக தான் 95ம் ஆண்டில் கைப்பற்றிய யாழ் குடாவில் சகஜநிலையை தோற்றுவித்துவிட்டதாயும் அங்கு ஜனநாயக தேர்தல் நடத்தப்போவதாகவும் கூறி உள்ளூராட்சி சபை தேர்தலையும் நடத்தி முடித்தது.

அது எதிர்பார்த்தது போல் குறிப்பிட்ட சில வாக்குகளையும் பெற்று சிலர் 'ஜனநாயக' தேர்தலில் வெற்றி பெற்றனர். ஆனால், சிறீலங்கா அரசாங்கம் விரும்பியவாறு அங்கு செயலாற்ற முடியவில்லை. அதன் போலியான உள்ளூராட்சி சபைகளும் செயலற்ற நிலையில் தூங்கியது. இதற்கிடையே யாழ் குடாவிலிருந்து சிறீலங்காவின் பிரதிநிதிகள் போல் செயல்பட்டுவந்த யாழ் மேயர் சுட்டுக் ,கொல்லப்பட்டார். அடுத்துவந்த காலங்களில் தொடர்ந்து வந்த மேயரும் கொல்லப்பட பெரும்பான்மையான உறுப்பினர்கள் பதவிகளை விட்டு விலகிக் கொண்டனர். இதற்கிடையே யாழ் குடாவின் நீதி நிர்வாக கட்டமைப்பு செயலிழக்க வைக்கப்பட்டது. நீதிமன்றங்கள் மற்றும் அரசின் போக்குவரத்துத்துறை கல்வித்துறை போன்றவை முடக்கப்பட்டன. இவை சிறீலங்காவிற்கு ஏற்பட்ட அடுத்த தோல்வி. தென்னிலங்கையைப் பொறுத்தவரை மருதானைக் குண்டுவெடிப்பு, சிறீலங்காவிற்கு தொடர்ந்து அதிர்ச்சியை ஏற்படுத்திய மற்றுமொரு நிகழ்வாகும். இது இவ்விதமிருக்க இராணுவ ரீதியாக சிறீலங்கா 1998ம் ஆண்டு பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தது. கடலிலே அதன் கலங்கள் மூழ்கடிக்கப்பட்டன, வான் வழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. (பின்னர் வான்வழியான விநியோகங்கள் இந்திய வான் மார்க்கமாக நடத்தப்பட்ட போதிலும் மிகவும் மட்டுப்படுத்தபட்ட அளவிலேயே அவை இருந்து வந்தன.) தான் மிகவும் நம்பிக்கையுடன் ஆரம்பித்த இராணுவ நகர்வு தொடர்ந்து தேக்க நிலையிலேயே இருந்தது. இறுதியில் அது தனது இலக்கை சென்றடையாதலேயே இடைநடுவில் மரணித்தது. இதற்கிடையே சிறீலங்கா மிகவும் கவனமாக பாதுகாத்துவந்த கிளிநொச்சி படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. சிறீலங்கா அரசு தனது நீண்ட



கால இராணுவ நடவடிக்கையான ஜெயசிக்குறுவை முடிவுக்கு கொண்டுவர ஆரம்பித்த ரிவிபலவும் சில நாட்களுக்குள் காணாமல்போனது. இராணுவ ரீதியாக பல பின்னடைவுகளை அடைந்த சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளின் அதிகரித்த தாக்குதல்களால் இராணுவத்தினர் மத்தியில் ஏற்பட்ட மனோரீதியான தாங்கங்களை இல்லாது செய்ய முடியவில்லை. பல ஆயிரம் இராணுவத்தினர் சேவையிலிருந்து தலைமறைவாகினர். பலமுறை இவர்களை மீண்டும் இணைந்துகொள்ளுமாறு அழைத்தபோதும் சிறீலங்கா அரசு சாதகமான பலனை அடையவில்லை. இறுதியாக கிராமம் கிராமமாக சுற்றிவளைத்து பல ஆயிரம் இராணுவ வீரர்களை கைது செய்தனர். இவர்கள் அனைவரும் யாழ் குடாவில் சேவை என்ற பெயரில் சிறைவைக்கப் பட்டனர்.

இவ்வாறு ஏராளமான தோல்விகளையும், பின்னடைவுகளையும் சிறீலங்கா சந்தித்துக் கொண்டிருக்க, விடுதலைப் புலிகள் புதிய பரிமாணங்களைக் கொண்ட வளர்ச்சி வடிவங்களையும், போர் அமைப்புக்களையும் பாரிய வெற்றிகளையும் பெற்றுக் கொண்டனர்.

1998ம் ஆண்டு என்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மிகுந்த அனுபவங்களையும், ஆயுத விநியோகங்களையும் பெற்றுக்கொடுத்த ஆண்டு என்றும் கூறலாம். விடுதலைப் புலிகளின் கடற்படை மிகப் பெரும் கடற்சமர்களை இந்த ஆண்டே நடத்தியது. சிறீலங்காவின் பல கடற்கலங்களும், கப்பல்களும் கடலுக்கடியில் தஞ்சமடைந்தன. யாழ் குடாவிற்கான விநியோக வழியாக இருந்து வந்த கடல்வழி கடற்புலிகளால் துண்டிக்கப்பட்டது. இதே வேளை தரைவழி தொடர்பை ஏற்படுத்த நகர்ந்துவந்த ஜெயசிக்குறுவோ விடுதலைப் புலிகளுக்கு அவர்களது முகாம் வாசலிலேயே ஆயுதங்களை கொண்டு வந்து கொட்டியது. விடுதலைப் புலிகள் 1998ம் ஆண்டிலேயே மிகப்பாரிய அளவில் பீரங்கித் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்தனர். இதுவும் ஜெயசிக்குறு படைகள் மத்தியிலேயே பயிற்சி பெற்று உருவாக்கம் கண்டது. ஜெயசிக்குறுவின் படையணிகள் விடுதலைப் புலிகளின் எறிகணை வீச்சுக்களாலேயே மிகப் பாரிய இழப்புக்களை அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே ஜெயசிக்குறுவே விடுதலைப் புலிகளுக்கு ஏராளமான கனரக ஆயுதங்களையும், வாகனங்களையும் பெற்றுக் கொடுத்தது என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

இதையடுத்து சிறீலங்காவின் கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சிப் பிராந்தியம் விடுதலைப் புலிகளால் மீட்டெடுக்கப்பட்ட நிகழ்வானது யாழ். குடாவில் சிறீலங்காவின் இருப்பிற்கு விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கை. பல ஆயிரம் படையினரைக் கொண்டிருந்த இப் படைப் பிராந்தியம் சிலமணி நேரங்களுக்குள் தாக்கி நிர்மூலமாக்கப் பட்டது. இதன் மூலம் வடபகுதியில் ஆனையிறவு முகாம் மட்டுமே யாழ் குடாவிற்கு வெளியே இருக்க அனுமதிக்கப் பட்டது. ஆனால், கிளிநொச்சி படைத்தள தாக்குதலை உற்று நோக்கினால் ஆனையிறவு படைத்தளத்தின் இருப்புக்கூட கேள்விக்குறியான ஒன்றே. அடுத்து யாழ் குடாவில் தாக்குதல்களை தீவிரமாக்கவும் அங்கிருக்கும் இராணுவத்தினருக்கு மனோரீதியான பயத்தினை தோற்றுவிப்பதற்கும் கிளிநொச்சியின் கை மாறல் ஓர் முக்கிய காரணியாக அமைந்தது.

சிறீலங்காவிற்கு இராணுவ, அரசியல் தோல்விகளை ஏற்படுத்திய விடுதலைப் புலிகள் அடுத்ததாக உளவியல் ரீதியான யுத்தம் ஒன்றின் மூலம் பெரும் தலையிடியைக் கொடுத்துவருகிறார்கள். கிளிநொச்சி தாக்குதல்களின் ஒலி - ஒளி நாடாக்களையும், புகைப்படங்களையும் பெரும் பாதுகாப்புடனும், கட்டுப்பாடுகளையும் கொண்டிருந்த சிங்களத்தின் தலைநகரில் முக்கியமான இடங்களில் விடுதலைப் புலிகள் வெளியிட்ட போது தனது பாதுகாப்பு கட்டமைப்பின் ஓட்டைகளை சிறீலங்கா தேடியது. இதற்கடுத்ததாக விடுதலைப் புலிகளின் சிங்கள வானொலி அமைகின்றது. தான் போர்க் களங்களில் நடக்கும் செய்திகளை திரிவுபடுத்தி தனக்கு ஏற்றவகையில் அவைகளை வெளியிட்டுவந்த சிறீலங்காவிற்கு உண்மையான செய்திகளை வெளியிட விடுதலைப் புலிகள் தங்களது வானொலியின் மூலம் தயாராகியபோது உளவியல் ரீதியாக அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என சிறீலங்கா உணர்ந்தது. அதற்கடுத்ததாக விடுதலைப் புலிகள் தங்களது வான்படையின் இருப்பை வெளியிட்ட போது சிறீலங்கா நிலைகுலைந்து போனது. எங்கும் விமானத் தாக்குதலை எதிர்கொள்ளும் ஆயுதங்கள் பொருத்தப்பட்டன. விடுதலைப் புலிகளின் விமானங்கள் என சில புகைப்படங்கள் வீதி எங்கும் ஒட்டப்பட்டன. சிறீலங்காவே விடுதலைப் புலிகளின் விமானங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தது. இப்படியான நிலையில் இன்று சர்வதேச ரீதியிலான தொலைத் தொடர்பு சேவையினையும் விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ளனர். இதன் மூலம் சிறீலங்காவின் அனுமதியின்றியே வெளி உலகுடனான தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது சிறீலங்காவைப் பொறுத்தவரை மிகப்பாரதூரமான ஒரு விடயமாகும். இப்படி தொடர்ந்து சிறீலங்கா அரசு உளவியல் ரீதியான யுத்தத்தினால் தொடர்ந்தும் தடுமாறிக்கொண்டே இருக்கின்றது. இந் நிலையில் விடுதலைப் புலிகளின் அடுத்த உளவியல் தாக்குதல் எதுவாக இருக்கும் என்பதை உலகம் எதிர்பார்த்துக்கொண்டுள்ளது.

**வடபகுதியில் ஆனையிறவு முகாம் மட்டுமே யாழ் குடாவிற்கு வெளியே இருக்க அனுமதிக்கப்பட்டது. ஆனால், கிளிநொச்சி படைத்தள தாக்குதலை உற்று நோக்கினால் ஆனையிறவு படைத்தளத்தின் இருப்புக்கூட கேள்விக்குறியான ஒன்றே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சோனியா சாமர்த்தியமாக செயல்படுகிறாராம் பா.ஜ.க அரசின் அமைச்சர் பாராட்டு!

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மிகவும் சாமர்த்தியமாகச் செயல்படுகிறார் என்று மத்திய வர்த்தக அமைச்சரும், லோக்சக்தி அமைச்சருமான ராமகிருஷ்ண ஹெக்டே பாராட்டியுள்ளார். பெங்களூரில் நடந்த லோக்சக்தி உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் விழாவில் பேசும்போது இதனை ஹெக்டே தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:—

சோனியா காந்தியை பொறுத்தவரையில் மிகவும் சாமர்த்தியமாகவே செயல்படுகிறார். அது அவரது சொந்த சாமர்த்தியமா அல்லது அப்படி செயல்பட அவருக்கு யாராவது கற்றுத் தந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவரை யாரும் ஏமாற்ற முடியாது. சமீபத்தில் ராஜஸ்தான், டெல்லி, மிசோராம், மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தேர்தல்க



ளில் காங்கிரசின் வலிமை கூடியுள்ளதாகத் தெரிகிறது. என்றாலும் மாற்று அரச அமைக்க காங்கிரஸ் முன்வராது. ஏனென்றால் எந்தக் கட்சியையும் நம்ப காங்கிரஸ் தயாராக இல்லை. ஜெயலலிதாவைம், லல்லுபிரசாத் யாதவையும், முலாயம் சிங் யாதவையும் காங்கிரஸ் நம்புமா? என ஹெக்டே கேள்வி எழுப்பினார்.

# இந்திய கடற்பகுதியில் அந்நியர் மீன்பிடிக்க அனுமதி இல்லை

## இந்தியப் பிரதமர் எச்சரிக்கை!

இந்தியாவின் ஆளுகைக்கு உட்பட்டதான அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவ்வேளையில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் பேசுகையில், இந்தியாவின் எல்லைக்குட்பட்ட கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடிக்க முயலும் வெளிநாட்டு படகுகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்தியப் பிரதமர் எச்சரிக்கை விடுத்தார். இந்திய கடற்பகுதியில் அண்டை நாடுகளின் மீன்பிடிப் படகுகளின் நடமாட்டம் அதிக அளவு இருந்துவருகின்றது. இத்தகைய நடமாட்டத்தை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அவற்றைக் கட்டுப்படுத்த உறுதியான நட



வடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளும். அனைத்து அண்டை நாடுகளுடனும் நல்லுறவை கட்டிக்காக்கவே இந்தியா விரும்புகிறது. எனவே அண்டை நாடுகளின் படகுகள் இந்திய கடற்பகுதியில் ஊடுருவக் கூடாது என்றார் வாஜ்பாய்.

# நோபல் பரிசுபெற்ற அமர்த்தியாசென் இந்திய நிதியமைச்சருடன் சந்திப்பு!

பொருளாதார அறிஞரும், நோபல்பரிசு பெற்றவருமான அமர்த்தியாசென்னை, இந்திய நிதியமைச்சர் யஷ்வந் சின்ஹா சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்திய பொருளாதாரத்தின் நிலை குறித்து அவர்கள் அப்போது விவாதித்தனர். இது குறித்து பத்திரிகையாளரிடம் பேசிய நிதியமைச்சர் அமர்த்தியா சென்னின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் நடைமுறைப்படுத்த மத்திய அரசு முயலும் என்றார். அமர்த்தியாசென் இச்சந்திப்பு குறித்து கருத்துத் தெரிவிக்கையில், 'இங்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிய இச்சந்திப்பு உதவியது' என்று கூறினார். முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜராலையும் சந்தித்த சென், தேசிய வளர்ச்சி குறித்து விவாதித்ததாக தெரிகிறது. இந்திய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனுடனான விருந்திலும் சென் கலந்து கொண்டார்.

# தமிழிசையைப் பின்னுக்குத் தள்ளும் சபாக்கள்

*- தமிழ்நாட்டிலிருந்து 'சாதாரணன்' எழுதுகிறார்*

### மூளை உழைப்பாளர்களுக்கு அரசு உதவ வேண்டும்

மூத்த எழுத்தாளர் சி.சு செல்லப்பா 'எழுத்து' என்ற இலக்கியச் சிற்றிதழை 25 ஆண்டுகளுக்குமேல் நடத்தியவர், புதுக் கவிதையின் ஆதரவாளர், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர், இந்தியத் தேசியத்தைத் தூக்கிப் பிடித்தவர், தம் வாழ்நாளின் கடைசி காலத்தில் பிராமணர் சங்கத்திலும் அங்கம் வகித்தவர், சமீபத்தில் இயற்கை எய்தினார்.

திராவிட நாட்டு வானம்பாடி என்று அண்ணா அவர்களால் பாராட்டப்பட்டவர், தம் வாழ்நாள் முழுக்க சாதி ஒழிப்புப் போருக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்டவர், தம் புதல்வர்களுக்கும் புதல்விகளுக்கும் கலப்புத் திருமணம் செய்து வைத்த சாதனையாளர், தன்மான இயக்கத்தின் இலக்கியப் போராளி கவிஞர் முடியரசன் அவர்கள் இயற்கை எய்தினார்.

இந்த இருவேறு துருவத்தினர் மறைவுக்கும் சாகித்ய அக்கடமி சார்பில் இரங்கல் கூட்டம் 30.12.98 அன்று நடைபெற்றது.

பேராசிரியர் சுந்தரமூர்த்தி, முனைவர் இரா. இளவரசு, பேராசிரியர் செல்வகணபதி, முனைவர் இ.மறைமலை எழுத்தாளர்கள் இந்திரா பார்த்தசாரதி, சு. சமுத்திரம். சா. கந்தசாமி, ஈரோடு தமிழன்பன் ஆகியோர் இரங்கல் கூட்டத்தில் பங்கேற்றனர்.

'முல்லை' தமிழ்ச் செயல் அமைப்புச் சார்பில் சி.சு செல்லப்பா, முடியரசன், பொன்னிவளவன், திரைப்படக் கவிஞர் வாசன், திரு.மு.சிவராம் ஆகியோர் மறைவுக்கு ஒருசேர மற்றொரு இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

எழுத்தாளர்களை மூளை உழைப்பாளர்களாகக் கருதி மறைந்த எழுத்தாளர்களின் குடும்பத்தாருக்கு ரூ.ஐந்து லட்சம் கருணைத் தொகையாக வழங்கவேண்டும் என்று இரங்கல் கூட்டத்தில் அரசுக்குக் கோரிக்கை வைத்தனர்.

இக்கூட்டத்தில் கவிஞர்கள் அப்துல் ரகுமான், இன்குலாப், மு.மேத்தா, அறிவுமதி, சாமி, பழனியப்பன், பேராசிரியர்கள், இரா.இளவரசு, பொன்செல்வகணபதி ஆகியோர் பங்கேற்றனர்.

இறந்தவரின் நிறைகளையும் குறைகளையும் இரங்கல் கூட்டத்தில் பதிவு செய்தலே சரியானதாக இருக்கும்.

★ ★ ★

### கண்ணை மூடிக்கொள்ளும் காவல்துறை

சென்னைத் துறைமுகத்திற்கு தென் ஆபிரிக்காவிலிருந்து எம்.வி.அலெக்சாண்டிரியா எனும் சரக்குக் கப்பல் வந்தது. கப்பலின் சுலைமான், அபுபக்கர் என்ற இருவர் ஒளிந்திருந்து பயணம் செய்து வந்ததைக் கப்பல் அதிகாரிகள் கண்டுபிடித்தனர். பின்னர் அவர்கள் கப்பலில் ஒரு அறையில் அடைக்கப்பட்டனர். கப்பல் சென்னை துறைமுகம் வந்தபின்னர் அந்த அறைக்குச் சென்று பார்த்தபோது அவர்களிருவரும் தப்பியது தெரிந்தது. கப்பல் கேப்டன் இது குறித்து சென்னை மாநகரக் காவல்துறை ஆணையரிடம் புகார் செய்தார். தப்பி ஓடிய கலைமானையும் அபுபக்கரையும் காவல்துறையினர் தேடத் தொடங்கினர். இதற்கிடையில் தப்பிய இருவர் இஸ்லாமியராக இருந்ததால், அவர்களை 'சர்வதேசப் பயங்கரவாதி' பின்லேடன் ஆட்கள் என்றும் மிகவும் ஆபத்தான பயங்கரவாதிகள் என்றும் தமிழகப் பத்திரிகைகள் எழுதின.

இது தொடர்பாக டிசம்பர் 31 ஆம் திகதி மாநகரக் காவல்துறை ஆணையர் காளிமுத்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது 'தப்பி ஓடிய இருவரும் பைத்தியக்காரர்கள், பிச்சைக்காரர்கள், எப்படியோ கப்பலுக்குள் நுழைந்திருக்கிறார்கள்' என்று கூறினார்.

தப்பியவர்கள் பிடிபடவில்லை. அவர்களைப் பற்றிய போதுமான தகவல் தெரிந்தவர்களை விசாரிக்கவுமில்லை. ஆனால் காவல்துறை ஆணையர் காளிமுத்துக்கு அவர்களிருவரும் எப்படி பைத்தியக்காரர்கள், பிச்சைக்காரர்கள் என்று தெரிந்ததோ தெரியவில்லை. அதிகாரம் கண்ணை மட்டும் மறைக்கவில்லை உண்மையையும் மறைக்கிறது.

★ ★ ★

### தமிழிசையைப் பின்னுக்குத் தள்ளும் சபாக்கள்

டிசம்பர் மாதம் பிறந்தால்போதும் சென்னையின் மூலை முடுக்கெல்லாம் இருக்கின்ற 'சபாக்கள்' சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கி 'இசைவிழா'க் கொண்டாட்டம் நடைபெறும். ஐரோப்பாவின் பனிமழை படரும் டிசம்பர் மாத குளிரைவிட தமிழகத்தின் மார்கழி மாத குளிரே இதமானது என்று ஐரோப்பா வாழ் தமிழ்பேசும் செல்வந்தர்கள் சென்னையில் வட்டமிடுவார்கள்.

இசைவிழா காலத்தில் நாட்டியம், வாய்ப்பாட்டு, நாதசுரக் கச்சேரி, வயலினிசை, புல்லாங்குழலிசை, மாண்டலினிசை என்று இசையின் பல்வேறு பரிமாணங்கள் வெளிப்படும் இசைவிழாக்கள் இன்றும் தெலுங்கில்தான் நடைபெறுகின்றன.

அண்ணாமலை அரசர் தொடங்கிய தமிழிசை மன்றம் பல பத்து ஆண்டுகளாக தமிழிசையும், தமிழிசை குறித்த ஆய்வுகளையும் நடத்திவருகிறது.

'தியாகராசர் மகோத்ஸ்வம்' என்று ஒவ்வோராண்டும் தஞ்சை மாவட்டக் காவிரிக்கரையோர திருவையாற்றில் கொண்டாடப்படுகிறது, தெலுங்கில் பாடிய தியாகராஜருக்கு எடுக்கப்படும் நினைவு நான் விழா இது. தமிழுக்குக் கிஞ்சித்தும் இம்மேடையில் இடம்கிடையாது. தியாகராஜர் என்ன என்ன ராகங்களில் தெலுங்கில் பாடினாரோ அதற்குச் சற்றும் குறையாமல் தமிழில் அந்த இராகங்கள் அனைத்திலும் அதே காலத்தில் பாடியவர் கோபாலகிருஷ்ண பாரதியார். இவர் நந்தனார் சரித்திர கீர்த்தனையைப் பாடியவருமாவார். ஆனால் தமிழில் பாடிய கோபால கிருஷ்ண பாரதிக்கு இப்படியொரு விழா தமிழ்நாட்டில் எடுக்கப்படவில்லை.

திருவையாறு தியாகராசர் மகோத்ஸ்வத்துக்கு மாற்றாக திருவையாற்றிலேயே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழிசை விழா பொங்கல் திருநாளின்போது நடைபெற்று வருகிறது.

மேலும் ஒரு பாய்ச்சலாக மக்கள் கலை இலக்கியக் கழகம் தமிழ் மக்கள் இசை விழாவைத் தஞ்சை மாநகரில் நடத்தி வருகிறது. மேல்தட்டுக் கலாச்சாரத்தைத் தூக்கிப்பிடிக்கும் தெலுங்கு இசைக்கு மாற்றாக நாட்டுப்புறத் தமிழ் இசையை முதன்மைப்படுத்துகிறது. மக்கள் நலம் சார்ந்த அரசியலுக்கு இசைவடிவம் கொடுக்கிறது.

டிசம்பர் மாதத்தை இசைவிழாவுக்கு எப்படித் தேர்ந்தெடுத்தார்கள்? டிசம்பர் மாதத்திற்குரிய தமிழ்மாதம் மார்கழி மாதம் ஆகும். தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, திவ்வியப்பிரபந்தம், ஆகிய தேன் தமிழ் இசைப் பாடல்களை மார்கழிமாதம் முழுக்க ஒவ்வொரு நாளும் அதிகாலையில் குழுவாக இணைந்து வீதிகள்தோறும் இசைக் கருவிகளோடு பாடப்படுகிற பெரும் சிறப்பு உடையதாகும். பலநூறு ஆண்டுகளாகத் தொடர்கின்ற இந்தத் தமிழிசைப் பாடல் மரபை டிசம்பர் மாத சபாக் கலாச்சாரம் பின்னுக்குத் தள்ளியதோடல்லாமல் தெலுங்கு கீர்த்தனங்களுக்கு முதலிடமும் தந்தது. அது ஆதிக்கமாகவும் வடிவம் எடுத்தது.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவாத சக்திகளுக்கு எதிராக த.மா.கா!

மதவாத சக்திகளின் சதியை முறியடிக்க மதச் சார்பின்மையில் நம்பிக்கை உள்ள கட்சிகளை ஓரணியில் திரட்டும் முயற்சியில் மூப்பனார் இறங்கியுள்ளார். இதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் பேசவும் அவர் முடிவு செய்துள்ளார். இதற்கான அதிகாரத்தை தமிழ்நாடு மாநில காங்கிரசின் அரசியல் விவகாரக் குழு மூப்பனாருக்கு வழங்கியுள்ளது.. தமாகாவின் அரசியல் விவகாரக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் கூறப்பட்டுள்ளதாவது:— கடந்த சில தினங்களாக குஜராத் மாநிலத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் இடிக்கப்பட்டு, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. சிறுபான்மை இன மக்கள் மீது தொடர்ந்து நடைபெறுகிற தாக்குதலை நியாயப்படுத்துகின்ற வகையிலும் ஊக்குவிக்கின்ற வகையிலும் ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ இந்து பரிஷத், பஹ்ரங்தள் போன்ற சங்பரிவார் அமைப்பைச் சேர்ந்தவர்கள் பேசிவருவதும் எழுதி வருவதும் இந்தத் தேசத்தை பாசிசப் பாதையில் அழைத்துச் செல்ல மதவாத சக்திகள் திட்டமிட்டுள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

## சென்னையில் அறிவியல் மாநாடு பிரதமர் வாஜ்பாய் கலந்துகொள்கிறார்

இந்திய அறிவியல் சங்கத்தின் 86-வது மாநாடு சென்னையில் நடைபெறுகிறது. இம்மாநாட்டை தொடக்கி வைப்பதற்காக பிரதமர் வாஜ்பாய் சென்னை வருகிறார். பிரதமர் வருகையையொட்டி சென்னையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. விமானநிலையத்தில் இருந்து நிகழ்ச்சி நடக்கும் இடம்வரை பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். பிரதமர் பயணம் செய்வதற்காக குண்டு துளைக்காத இரண்டு அம்பாசிடர் கார்கள் டெல்லியிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. சென்னை வரும் பிரதமரை தமிழ்நாடு ஆளுநர் பாத்திமா பீவி, தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி ஆகியோருடன் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும் வரவேற்கின்றனர். அஇஅதிமுக சார்பில் நாவலர் நெடுஞ்செழியன் பிரதமரை வரவேற்கிறார்.

# ஷேக் சின்ன மௌலானாவுக்கு சங்கீத கலாநிதி விருது!

சென்னை சங்கீத அகாதெமியின் 'சங்கீத கலாநிதி விருது' நாதஸ்வர வித்துவான் ஷேக் சின்ன மௌலானாவுக்கு வழங்கப்பட்டது. சங்கீத அகாதெமியின் 72—வது ஆண்டு இசை விழாவில் இவ்விருதினை மூத்த அரசியல் தலைவர் சி.சுப்பிரமணியம், ஷேக் சின்ன மௌலானாவுக்கு வழங்கினார். இவ் விருதினை வழங்கி சி.சுப்பிரமணியம் ஆற்றிய உரையில் தெரிவித்தாவது:- இந்தியாவின் பலம் என்பது அதனுடைய கலாச்சாரத்தில் உள்ளது. இப்பலம் உள்ளவரை இந்தியாவை யாரும் அழிக்க முடியாது. இசை நிகழ்ச்சிகள் ஒழுங்காகவும் சிறப்பான முறையிலும் நடத்தப்படுகின்றன. இசையில் இருக்கும் ஒழுங்கு முறைகள் அரசியலிலும் வர வேண்டும். இன்று இசைத்துறையில் ஏராளமான இளைஞர்கள் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஏற்புரையாற்றிய ஷேக் சின்ன மௌலானா, இளம் நாதஸ்வரக் கலைஞர்களை ஊக்குவித்து விருது கொடுக்கும் வகையில் அறக்கட்டளை அமைக்க பத்தாயிரம் ரூபாவை வழங்கினார். இந்த ஆண்டுக்கான முசிறி சுப்பிரமணியம் ஐயர் விருதும் ஷேக் சின்ன மௌலானாவுக்கு வழங்கப்பட்டது.

## இந்திய கப்பற்படைத் தளபதி பகவத் பதவி நீக்கம்!

இந்திய கப்பற்படை தளபதி விஷ்ணு பகவத் பதவி நீக்கம் செய்யப்பட்டது நியாயமானதே என செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் பிரமோத் மகாஜன் தெரிவித்தார். இந்திய கப்பற்படை துணைத்தளபதிகள் நியமனத்தில் குளறுபடிகள் ஏற்பட்டு அதன் காரணமாக கப்பற்படை தலைமையகத்திற்கும் பாதுகாப்பு அமைச்சரவைக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. அமைச்சக உத்தரவுகளை பகவத் தொடர்ந்து உதாசீனப்படுத்தி வந்ததாக கூறப்படுகின்றது.

கப்பற்படை தளபதி பகவத்துக்கு எதிராக இணைத் தளபதிகள் பலரும் போர்க் கொடி உயர்த்தி இருந்தனர். இந் நிலையில் கடற்படைத் தளபதி விஷ்ணு பகவத்தை பதவி நீக்கம் செய்வதென்று அரசு முடிவெடுத்தது. இம் முடிவு சரியான நடவடிக்கை என்றும் இனி வரும் காலத்திலும் அவ்வித நடவடிக்கையையே அரசு எடுக்கும் என்றும் மகாஜன் கூறினார்.

# மூன்றாவது அணி எடுபடாத விடயம் - வாழப்பாடி ராமமூர்த்தி -

மூன்றாவது அணி என்பது எடுபடாத விடயம். இந்திய அரசியலுக்கு அது பொருத்தமற்றது என்று மத்திய பெட்ரோலிய துறை அமைச்சரும் தமிழக ராஜீவ் காந்தி காங்கிரஸ் தலை



வருமான வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார். பத்திரிகையாளருடன் பேசிய ராமமூர்த்தி அகில இந்திய அளவில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற நிலைக்கு பாரதிய ஜனதாக் கட்சியும், காங்கிரசும் மாற்றுக் கட்சிகளாக உருவாகிவிட்டன என்றுதான் சொல்ல முடியும். எனவே மூன்றாவது அணி ஒன்றை சுர்ஜித், கருணாநிதி, மூப்பனார் போன்றவர்கள் உருவாக்க முயற்சி செய்தாலும் கூட எப்போதும் எந்த நேரத்திலும் இந்தியாவில் மூன்றாவது அணி வெற்றி பெற்றது கிடையாது. இந்திய ஜனநாயகத்தில் ஒரு கட்சிக்கு மாற்று கட்சி என்ற முறை உருவாகி பலப்பட்டு வரும் நேரத்தில் மூன்றாவது அணி என்ற விடயம் எடுபடாது. மூன்றாவது அணி பற்றி யோசிப்பது அரசியல் தார்மிக எண்ணமாக இருக்க முடியாது என்றார் அவர்.

## விவசாயிகளுக்கும் ஓய்வூதியம் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் வலியுறுத்தல்



விவசாயிகளுக்கு அரச பணியாளர் போன்று வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியப் பலன்கள் கிடைக்க வாஜ்பாய் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் பிரதமர் வி.பி.சிங் கேட்டுக் கொண்டுள்ளார். உத்தரப்பிரதேசத்தில் மூடப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளை திறக்கவேண்டும் என்றும் அவர் மத்திய அரசை கோரியுள்ளார்.

# ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ இந்தத் தலைமுறையில் இரத்தமும் சதையுமாய் எம் மக்களின் வாழ்க்கைக்காக, மூத்திரச் சட்டியை தூக்கிக்கொண்டு ஊர் ஊராய்ப் போய் பேசிய தலைவரின் காலகட்டம் வேறு என்று சொல்கிற துணிச்சல் ரஜனிக்கு எப்படி வந்தது?

ரஜனி எந்த நாட்டுக்காரராகவாவது இருக்கட்டும், எந்த மொழிக் காரராகவாவது இருக்கட்டும் தமிழின் ஆணிவேரை சரித்திரத்தை ஒழுங்காகப் படிக்கவேண்டும். வரலாறு தெரிந்தால் பேச வேண்டும். இல்லையென்றால் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். சும்மா மேடை கிடைத்துவிட்டதென்று பேசித்திரியக் கூடாது.

*— நந்தன் இதழில் கடவுள் பட இயக்குநர் வேலு பிரபாகரன்*

❀ ❀ ❀

☺ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஹாக்கியில் தங்கம் பெற்று 32 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. எனது தலைமையில் செல்லும் இந்திய அணி இந்த முறையாவது தங்கப் பதக்கத்தை வெல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதற்காக கடுமையாக முயற்சி செய்வேன் என்று கூறியிருந்தார். சொன்னது போலவே முழுமூச்சாக வெற்றியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு விளையாடி தங்கப்பதக்கம் வென்றிருக்கிறது இந்திய அணி. அதிக கோல்கள் போட்டதன் மூலம் தொடரின் சிறந்த நாயகன் விருதும் பெற்றிருக்கிறார் தமிழரான தன்ராஜ பிள்ளை.

*— 30-12-1998 தமிழன் எக்ஸ்பிரஸ் இதழில்*

❀ ❀ ❀

☺ ரூ.1, ரூ.2, ரூ.5, நோட்டுகள் அச்சிடுவதை டெல்லி சர்க்கார் நிறுத்திவிட்டது. அதற்குப் பதில் ரூ.1, ரூ.2, ரூ.5, நாணயங்கள் அதிக அளவில் வெளியிடப்படும். அடுத்த சில மாதங்களில் ஆயிரம் ரூபாய் நோட்டு வெளிவர இருக்கிறது. அது வந்ததும் ரூ.10 நோட்டு அச்சிடுவதும் நிறுத்தப்படும். அதற்குப் பதில் ரூ.10 நாணயம் வெளியிடப்படும்.

*— 03-01-1999 ராணி வாராந்தரியில்*

❀ ❀ ❀

☺ 1977ல் இருந்து பல அரசியல் அணிகளைக் கண்டு சலித்துப் போன மக்கள் பேசாம மறுபடியும் பழசுக்கே போயிடலாமா என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள் போலிருக்கிறது. மக்களின் அரசியல் ஆசையால் ஒன்பது மாதங்களுக்கு முன் அடல் பிஹாரி வாஜ்பாய் பலனடைந்தார். இப்போது அநேகமாக பலனடையப் போவது இந்திய ராஜ குடும்பத்தின் நாலாவது நபர் சோனியா காந்தி. கூட்டணிக் கோளாறுகளை வெறுத்து ஸ்திரத்தன்மையை நாடும் மக்களின் மனதில் முதலிடம் பிடித்திருக்கிறார் சோனியா. இப்போது நாடாளுமன்றத்திற்கு இடைத்தேர்தல் வந்தால் காங்கிரஸ் 300க்கும் மேற்பட்ட இடங்களைப் பிடித்துவிடும். காங்கிரசின் ஆதாயம் பா.ஜ.கவுக்கும் ஐக்கிய முன்னணிக்கும் அடியாக மாறும்.

*— 30-12-1998 இந்தியா டுடெயின் கருத்துக் கணிப்பு கட்டுரையில்*

❀ ❀ ❀

☺ இங்கிலாந்து நாட்டில் கேம்பிரிட்ஜ் 'அகில உலக வாழ்க்கை சரித மையம்' ஆசிய கண்டத்திலேயே முதன் முதலாக முதியோர் மருத்துவ துறையை இந்தியாவில் தொடங்கி கடந்த இருபது ஆண்டு காலமாக முதியவர்களுக்கு சேவை செய்து வருவதைப் பாராட்டி டாக்டர் வி.எஸ். நடராஜனுக்கு இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த சாதனையாளர்களில் ஒருவராக தேர்ந்தெடுத்து விருது வழங்கியுள்ளது.

*— 06-01-1999 தேவி இதழில்*

❀ ❀ ❀

☺ ஆத்திகர் ஆனாலும் - நாத்திகர் ஆனாலும் அவர்கள் தத்தமது கொள்கைகளைப் பரப்புவதில் அளவு கடந்த சகிப்புத்தன்மையோடு நடந்துகொள்ள வேண்டும்.

ராஜாஜியும் பெரியாரும் எதிர் எதிர் துருவங்களென்றாலும் அவர்களுக்கு இந்த சகிப்புத்தன்மையும் இதற்கு மேலாக மனிதநேயப் பண்புகளும் இருந்தன.

அதனால்தான் ஒருவர் கொள்கையை மற்றவர் இறுதி மூச்சிருக்கும் வரை எதிர்ப்பவர்களாகவே வாழ்ந்தாலும், அவர்களால் நட்புக்கு இலக்கணம் வகுக்கும் நண்பர்களாக வாழ முடிந்தது. அன்பார்ந்த எதிரிகளாக செயல்பட முடிந்தது.

தந்தை பெரியார் அவர்களுக்கு குன்றக்குடி அடிகளார் தமது திருமடத்தில் ஒரு வரவேற்பு கொடுத்தார். மடத்தின் வாசலில் மத ஆச்சாரப்படி பெரியாருக்கு பூரண்கும்ப மரியாதையோடு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது ஒருவர் ஆர்வக்கோளாறு காரணமாக அய்யா அவர்களின் நெற்றியில் விபூதி பூசிவிட்டார். அடிகளார் திகைத்தார். பெரியார் புன்சிரிப்புடன் எவ்வித முகமாற்றத்திற்கும் இடந்தராத வகையில் அப்படி ஒரு சம்பவமே நடாவததுபோல மதித்து நடந்து கொண்டார்.

விபூதி பூசுவதற்கும் நாமம் போடுவதற்கும் எதிரியான நமது நெற்றியிலேயே தம்மைப்பற்றி நன்கு தெரிந்திருந்தும் விபூதி பூசியதை ஓர் அவமதிப்பு என்பது போலவோ கொச்சைப்படுத்திய செயல் போலவோ கருதிக் கோபம் கொள்ளவில்லை அய்யா என்பது மட்டுமல்ல, அந்த விபூதியை அழித்துவிடவும் முயலவில்லை. அடிகளார் தந்த வரவேற்பில் கலந்துகொண்டு அடிகளார் தமிழ் உரை நடைக்கு தந்த நயத்தக்க நாகரிகம் என்ற சொல்லுக்கு உதாரணமாக நடந்து காட்டினார் பெரியார்.

*— 29-12-1998 நக்கீரன் இதழில் சின்னக்குத்தூசியின் கட்டுரையில்*

❀ ❀ ❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிலிப்பைன்ஸ்

## பிலிப்பைன்சில் புதுவருட நிகழ்வுகளில் 310 பேர் காயம்; ஒருவர் இறப்பு

01.01.99

பிலிப்பைன்ஸில் கடந்த இரண்டு நாட்களாக இடம் பெற்றுவரும் புதுவருட நிகழ்வுகளில் ஒருவர் இறந்து 310 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என அந்நாட்டின் உத்தியோக பூர்வ செய்தித்தாபனம் கூறியுள்ளது. வருட ஆரம்பத்தை பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் வெடிகளை வெடிக்க வைப்பதுமல்லாமல் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்து கொண்டாடுகின்றனர். இப்படியான கொண்டாட்டத்தில் துப்பாக்கி வேட்டுக்காயங்களுக்கு சுமார் 20 க்கும் மேற்பட்டவர்களும் 300இற்கும் அதிகமானவர்கள் பட்டாசு வெடிகளாலும் காயப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்பாகவே பிலிப்பைன்ஸ் அரசும் அரசு சார்பற்ற உதவி நிறுவனங்களும் கொண்டாட்ட நிகழ்வுகளின்போது துப்பாக்கிகளைப் பாவிப்பதை தவிர்க்கும்படியான பிரச்சாரங்களை மேற்கொண்டன. இந்நிலையில் ஒரு படைவீரரும் பொலிசாரும் தமது துப்பாக்கிகளால் புதுவருட ஆரம்பத்தின்போது வேட்டுக்களைத் தீர்த்ததற்காக கைது செய்யப்பட்டுள்ளார்கள் என நகரப் பொலிசார் கூறியுள்ளனர்.

பாலஸ்தீனம்

## 99 ஆரம்பத்தில் கிளின்டன்–அரபாத் பேச்சுவார்த்தை

02.01.99

மத்திய கிழக்கு அமைதி முயற்சிகளின் தொடராக இவ்வருட ஆரம்பப் பகுதியில் பாலஸ்தீன அதிபர் ஜாசீர் அரபாத்திற்கும் அமெரிக்க அதிபர் கிளின்டனுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என சர்வதேச செய்தி நிறுவனமொன்று கூறியுள்ளது. பாலஸ்தீனப் பேச்சாளரான சாஜெப் எரேகாட் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இவ் வருடம் மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத நடுப் பகுதியில் இச்சந்திப்பு இடம்பெறும் எனக் கூறினார். அண்மையில் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி மேற்குக் கரையில் இருந்து இஸ்ரேல் 13 விகித நிலப்பகுதிகளில் இருந்து விலகிக்கொள்ளவேண்டும். ஆனால் இன்றுவரை அதனை நடைமுறைப்படுத்த இஸ்ரேல் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இதற்கிடையே அமெரிக்க அதிபர் டிசம்பர் மாத நடுப்பகுதியில் மத்திய கிழக்கிற்கு விஜயமொன்றினை மேற்கொண்டு சில நடைமுறைப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முயன்றார். ஆனாலும் எந்தவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. இந்நிலையில் எதிர்வரும் 9ம் திகதி அமெரிக்காவின் மத்திய கிழக்கிற்கான அமைதித்தூதர் டெனிஸ் ரோஸ் இப்பிராந்தியத்திற்கு விஜயம் செய்து அடுத்த கட்ட பேச்சுகளிற்கான ஏற்பாடுகளில் ஈடுபடுவார் என நம்பப்படுகிறது.



இதற்கிடையே அண்மையில் பத்திரிகையாளர்களிடம் பேசிய யாசீர் அரபாத், ஒஸ்லோவில் இரு தரப்பினரும் செய்து கொண்ட ஒப்பந்தம் எதிர்வரும் மே மாதம் 5ம் திகதியுடன் காலாவதியாகிறது. அதன் பின்னர் சுதந்திர பாலஸ்தீனப் பிரகடனம் ஒன்றினைச்செய்ய தான் தயாராவதாயும்; இல்லையேல் இஸ்ரேல் பாலஸ்தீன எல்லைகள் பற்றிய புதிய ஒப்பந்தம் ஒன்றினை தான் இஸ்ரேலிடம் இருந்து எதிர்பார்ப்பதாயும் கூறினார்.

ஆனால் அரபாத் தனித்து மேற்கொள்ளும் எந்த ஒரு அறிவிப்பும் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளை அழிவுக்கே இட்டுச் செல்லும் என இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகு கூறியுள்ளார். அப்படி ஏதாவது ஒரு பிரகடனம் அரபாத்தால் மேற்கொள்ளப்படுமானால், தான் நிரந்தரமாக அமைதி முயற்சிகளில் இருந்து வெளியேறிவிடுவதாயும் கூறினார்.




எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாசீர் அரபாத்திற்கும் அமெரிக்க அதிபர் கிளின்டனுக்குமிடையே இடம்பெற உள்ள பேச்சுக்கள் எங்கு நடைபெறும் என இரு தரப்பினரும் கூறவில்லை. அத்துடன் இப் பேச்சுக்களின் பிரதான அம்சமாக எது இட்ம் பெறும் என்பதுவும் தெரியாத போதிலும் எதிர்வரும் மே மாதம் 4ம் திகதி காலாவதியாகும். ஒஸ்லோ ஒப்பந்தத்தின்பின் ஏற்படப்போகும் சிக்கல்களை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியே இது தரப்பினரும் பேசிக்கொள்வார்கள் என நம்பப்படுகிறது.

---

# ஓராண்டு நினைவு

தாயின் மடியில்: 20.09.1976



தமிழீழமண்ணில்: 03.01.1998

**லெப்டினன்ட் பூங்குயிலன்**
**தம்பிராசா பாலசந்திரன்**
(உரும்பிராய்)

மறவன்புலவில் ஆக்கிரமித்து நின்ற எதிரியுடன்மோதி விதையான வீரன்.

**'வீரவணக்கம்'**

எதிரி என் மண்ணை மிதிக்க
எதிர்க்காமல் என் வாழ்வு
வீணாகலாமா...
என்று வீரமுடன்
போராடப்புறப்பட்ட
எங்கள் செல்வமே!
விழுப்புண் ஏற்று குருதி சிந்திய
நிலையிலும்
எதிரிக்குப் போக்குக் காட்டிய
உனது அந்த மூன்று நாட்களும்
வீரத்தின் விதைப்பல்லவா!
பல நாள் மரணம் உன்னிடம்
தோற்றதுண்டு
தலைவர் வழியில் புலியாகி
வாழ்நாளை அர்த்தமுள்ளதாக்கிய
மாவீரனே!
உன்னை வணங்குகின்றோம்!

இவருடன் வீரச்சாவெய்திய மாவீரர்கட்கும்
எமது வீரவணக்கங்கள்

தகவல்: சிறீ (யேர்மனி)
தொலைபேசி: 02166 - 551730
முன்சன் கிளட்பாக்.

- உன் சகோதரர்கள்
சேகர், ரோகினி, சிறீ

---

# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 07.10.1929



மறைவு: 10.12.1998

**திருமதி இராசம்மா கந்தையா**
(துறைநீலாவணை – மட்டக்களப்பு)

எங்களுக்கு அன்பையும், பண்பையும், அனைத்துலகமும் போற்றும் கல்வியையும் ஊட்டி வளர்த்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுக்கு நேரில் வந்து எம்மோடு உடனிருந்து எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் தந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலி எனது வீட்டில் (Baji Weg-59, 3902 Glis, Swiss) 10.01.99 ஞாயிறு நண்பகல் நடைபெறும்.

**நன்றி நவிலல்**

மக்கள்: கந்தையா - கருணாகரன்,
கந்தையா - தங்கராசா,
கந்தையா- தருமலிங்கம் (Hong Kong),
கந்தையா - கோபாலரெட்ணம்,
திருமதி.கோமளம் இரவிந்தர நாதன்,
கந்தையா - கனகரட்ணம் (Brunei),
கந்தையா - மோட்சநாதன் (Swiss)
மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொலைபேசி: 027-9231015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்கா

# மீண்டும் குண்டுவெடிப்பு

01.01.99

தென்னாபிரிக்காவின் பிரதம உல்லாச மையமொன்றின் அருகே குண்டுவெடிப்பு ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது. இதனால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படாதபோதிலும் சிலர் காயமடைந்தும் பல வாகனங்கள் சேதங்களிற்கும் உள்ளாகியுள்ளன.

தென்னாபிரிக்காவின் கேப்டவுண் பகுதியில் தங்குவிடுதிகள், உணவு நிலையங்கள், வர்த்தக மையங்கள், நீர்வாழ் காட்சியகம் போன்றவை அமைந்துள்ள விக்டோரியா — அல்பிரட் நீர்நிலைப் பகுதியில் உள்ள வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் கடந்த வெள்ளியன்று மாலை ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தவேளையிலேயே இக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டொயோட்டா ரக வாகனம் ஒன்றிலேயே குண்டு பொருத்தப்பட்டிருக்கலாம் என இதுபற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேபகுதியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி நடாத்தப்பட்ட குண்டுவெடிப்பு ஒன்றினால் 2 பேர் கொல்லப்பட்டு 26 பேர்கள் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கியூபா

# தடைகளை எதிர்கொண்டு கியூபா நிமிர்ந்துள்ளது - பிடல் காஸ்ட்ரோ

02.01.98

கியூபா, நீண்டு தொடரும் பல வித தடைகளையும் மீறி அபார வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வாறு அந்நாட்டின் தலைவர் பிடல் காஸ்ரோ பொதுக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

கியூபாவில் புரட்சியின் மூலம் புதிய ஆட்சி ஏற்பட்டு 40 வருடங்களாகியுள்ள நிலையில் அதன்வெற்றிவிழா கியூபாவின் இரண்டாவது பாரிய நகரான சண்டியாகோவில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது. இவ் ஊர்வலத்திற்கு திருபிடல் காஸ்ரோ தலைமை தாங்கினார். 40 வருடங்களிற்கு முன் அதாவது 1959ம் ஆண்டு முதன்முதலில் மக்கள் முன் பகிரங்கமாகத் தோன்றிய



அதே சண்டியாக்கோ சதுக்கத்தில் மீண்டும் பிடல் காஸ்ரோ தோன்றி மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். இதன்போது கடந்த 40 ஆண்டுகளில் பல தடைகளையும் மீறி கியூபா அடைந்துள்ள முன்னேற்றங்கள் பற்றி பிரஸ்தாபித்தார். சுமார் 90 நிமிடங்கள் வரை உரையாற்றிய அவர், அன்று கியூபாவில் 30 விகிதமான மக்களே படிப்பறிவைக் கொண்டிருந்தனர் என்றும் சில தொழில்நுட்பக் கல்லூரிகளும் நான்கு பல்கலைக் கழகங்களும் மாத்திரமே அமைந்திருந்தன என்றும் கூறியவர், தற்போது 250,000 ஆசிரியர்கள் நாடுமுழுவதும் சேவை செய்கின்றனர். அதேபோல் 64,000 மருத்துவர்களும் உள்ளனர். அதேவேளை 60,000 பட்டதாரி ஆசிரியர்களும் உள்ளதாக காஸ்ரோ கூறினார்.

1959ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி கிழக்குப் பிராந்திய நகரான சண்டியாக்கோவுக்குள் காஸ்ரோவின் புரட்சிப் படைகள் நுழைந்தன. மறுநாள் காலை சர்வாதிகாரி பட்டிஸ்டாவின் ஆட்சி முடிவு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்

# அமெரிக்க-பிரித்தானிய ஊழியர்களை வெளியேற்ற ஈராக் முயற்சி

02.01.99

ஈராக்கில் தங்கியிருந்து ஐ.நா.வின் உதவி நிறுவனங்களில் பணிபுரியும் அமெரிக்க-பிரித்தானிய அதிகாரிகள் தொடர்ந்தும் அங்கு சேவையாற்றுவதை தாம் விரும்பவில்லை என ஈராக்கின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தத் தகவலை ஈராக்கிய அதிகாரிகள் பக்தாத்தில் தங்கியுள்ள ஐ.நாவின் பிரதான அதிகாரிகளிடம் நேரடியாகவே தெரிவித்துள்ள போதிலும், எப்போது இந்த உதவி நிறுவன ஊழியர்களை அங்கிருந்து வெளியேறும்படி கேட்கப்படுவார்கள் என்பது தெளிவாக்கப்படவில்லை.

ஈராக்கில் பணிபுரியும் இவ்வுதவி நிறுவன ஊழியர்கள் ஐ.நா.வின் 'உணவிற்கான எண்ணெய்' எனப்படும் திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கின்றனர். இவ்வகையாக 420 ஐ.நா உதவி ஊழியர்கள் ஈராக்கில் பணிபுரிகின்றனர். இவர்களில் கணிசமான தொகையினர் பிரித்தானிய அமெரிக்க பிரஜைகள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பிரித்தானிய - அமெரிக்க ஊழியர்களுக்குத் தொடர்ந்தும் உள்நுழைவு, தங்குமிட அனுமதிகளை வழங்க ஈராக் மறுத்துவருகிறது.

ஆனால் ஈராக்கிலுள்ள ஐ.நா. பேச்சாளர் ஜோர்ச் சமர்வில், ஈராக்கின் புதிய முடிவுகள் பற்றி தாம் எதனையும் அறிந்துகொள்ளவில்லை என்றும் தமக்கு அது பற்றிய எழுத்து மூலமான அறிவித்தல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கூறினார். அத்துடன் தமது உதவித்திட்ட நடவடிக்கைகளில் எவ்வளவு அமெரிக்க—பிரித்தானிய பிரஜைகள் பணிபுரிகின்றனர் என்பதையோ ஈராக்கின் வெளியேற்ற முடிவினால் தங்களது நடவடிக்கைகளில் பாதிப்புக்கள் ஏற்படுமா என்பதையும் கூற அவர் மறுத்துவிட்டார்.

## பிரான்ஸ்

# வருட முதல்நாளில் 46 பேர் மரணம்

01.01.99

பிரான்சில் இவ்வருட முதல் நாளில் மாத்திரம் வீதிகளில் ஏற்பட்ட விபத்துக்களில் 46 பேர்கள் கொல்லப்பட்டனர். இது கடந்தவருடம் இதே நாளுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்கானது என போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் துறையினர் கணிப்பிட்டுள்ளனர். நத்தார், புது வருட விடுமுறைகளை முடித்துக் கொண்டு திரும்பிக்கொண்டிருந்தவர்களே இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் எனக் கூறிய அவர்கள், அநேகமான விபத்துக்கள் 'பிரனே' மற்றும் 'ஜீரா' மலைப் பகுதிகளிலேயே இடம்பெற்றுள்ளன. துலூஸ் பகுதியில் நேருக்கு நேர் மோதிக்கொண்ட இரு வாகனங்களால் 5 பேர் உயிரிழந்துள்ளதாகக் கூறியுள்ளனர். கடந்த வருடம் வீதி விபத்துக்களில் மாத்திரம் 8300 பேர்கள் பிரான்சில் உயிரிழந்துள்ளனர் என்பது, இது 97ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 விகிதம் அதிகமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## லிபியா

# 86ம் ஆண்டு தாக்குதலுக்கு காரணமான 9 பேர்களை கைதுசெய்ய லிபியா உத்தரவு

30.12.98

லிபியாவின் இரு நகரங்களான திரிப்போலி, மற்றும் துறைமுக நகரங்கள் மீது 1986ம் ஆண்டு அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் என கருதப்படும் ஒன்பது அமெரிக்கர்களைக் கைது செய்ய லிபியாவின் பிரதான அரச தரப்பு வழக்கறிஞரான அப்துல் வதாப் லிபியாவின் மக்கள் நீதி மன்றத்தில் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு மத்திய கிழக்கு செய்தி நிறுவனமான Mena தெரிவித்துள்ளது.

லிபியாவின் கைது பட்டியலில் முன்னால் அமெரிக்க மத்திய உளவு நிறுவன தலைவர் வில்லியம் தேசி, முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பொயின் டெக்ஸ்டர் மற்றும் கடற்படை தளபதி ஒலிவர் நோத் போன்றவர்களும் அடங்குகின்றனர்.

ஆனால் 1986ம் ஆண்டு தாக்குதல்களுக்கு உத்தரவிட்ட முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் றீகன் இப்பட்டியலில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1986ம் ஆண்டில் பேர்லின் நகரில் இரவு விடுதியொன்றில் நடந்த குண்டுவெடிப்பில் இரண்டு அமெரிக்க படையினர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே லிபியாவின் மேல் இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதல்களில் லிபியத் தலைவர் கடாபியின் வளர்ப்பு மகள் உட்பட 37 பேர்கள் கொல்லப்பட்டனர் என லிபியா குற்றஞ்சாட்டியுள்ளது.

## நைஜீரியா

# மேலதிக நைஜீரியத் துருப்புக்கள் சியரா லியோனுக்கு விரைவு

சியரா லியோன் ஜனாதிபதியை பதவி கவிழ்ப்பதற்காக போராடும் கிளர்ச்சிப் படைகளை அடக்குவதற்காக மேலதிக துருப்புக்களை நைஜீரியா கடந்தவாரம் அனுப்பி வைத்துள்ளது. சியரா லியோன் அரசிற்கு ஆதரவாக நிலைகொண்டுள்ள பலமேற்கு ஆபிரிக்க நாடுகளின் படைகளுக்கு நைஜீரியாவே தலைமைதாங்கி வருகிறது. புதிதாக அனுப்பப்பட்ட துருப்புக்களுடன் நைஜீரியப் படைகளின் எண்ணிக்கை மூவாயிரமாக உயர்ந்துள்ளது. மொத்தமாக மேற்காபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 14,000 துருப்புக்கள் சியரோ லியோனில் நிலைகொண்டுள்ளன. இதேவேளை நைஜீரியா மூன்று யுத்த விமானங்களையும் புதிதாக அனுப்பி வைத்துள்ளது.

## பிரான்ஸ்

# ஈபிள் கோபுரத்திற்கு அறுபது இலட்சம் பேர்

பிரான்சிலுள்ள உலகப் பிரசித்திபெற்ற ஈபிள் கோபுரத்தை பார்வையிடுவதற்காக கடந்த வருடம் உலகம் பூராகவும் இருந்து அறுபது இலட்சம் பேர் விஜயம் செய்துள்ளனர். ஏனைய ஆண்டுகளிலும் பார்க்க கடந்த வருடமே கூடுதலான தொகையினர் கோபுரத்திற்கு விஜயம் செய்துள்ளதாக கோபுர நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

## யேமன்

# கடத்தப்பட்ட உல்லாசப் பயணிகளில் நால்வர் கொலை

யெமனில் முஸ்லீம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட பதினாறு உல்லாசப் பயணிகளில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். கடத்தப்பட்ட உல்லாசப் பயணிகள் அபியான் பிரதேசத்திலுள்ள மலைப் பகுதி ஒன்றில் ஒழித்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து ஒவ்வொருவராக மூவர் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டனர். ஏனையவர்களைக் காப்பாற்றுவதற்காக யெமன் நாட்டுப் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகள் மீது திடீர் தாக்குதல்களை மேற்கெண்டனர். அப்போது ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன் தீவிரவாதிகள் தரப்பிலும் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட உல்லாசப் பயணிகளில் இரு பெண்கள் உட்பட மூவர் பிரித்தானியர்கள். நான்காவது நபர் அவுஸ்திரேலியர் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் யேமன் நாட்டிற்கு தனது பிரஜைகளைச் செல்லவேண்டாம் என எச்சரித்துள்ளது. அத்துடன் யேமனில் உள்ள அமெரிக்கர்களை எச்சரிக்கையாக இருக்கும்படியும், நகர்ப்புறம் தவிர்ந்த புறநகர்ப் பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் ஆலோசனை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டில்

**வெகு விரைவில்**

Sarcelles - Garges - Villiers le Bel - Louvre
மக்களுக்கு

# மக்கள் கடை

## நியாய விலையில் மற்றொரு நிறுவனம்

CC PORTES DE LA VILLE 403,
Avenue du General de Gaulle,
95140 Garges les Gonesse.





**தைப்பொங்கல், புதிய வருட திருநாட்களையொட்டி**

# மகத்தான மலிவு விற்பனை

**ஜனவரி 6**
முதல்
**ஜனவரி 13**
வரை

சர்க்கரை, பொங்கல் அரிசி, கரும்பு மற்றும்
பொங்கல் பொருட்களுக்கான **மலிவு விற்பனை**

★ 'Tripple Lion' பசுமதி அரிசி
★ 'Easy Cook' மஞ்சள் அரிசி
உட்பட பலரக புதிய, தரமான அரிசி வகைகளை
மகிழ்வுடன் நாம் அறிமுகப்படுத்துகின்றோம்






**மக்கள் கடை**
59, Rue Louis Blanc, 75010 Paris.
Tel & Fax: 01 42 05 99 02
Metro: La Chapelle / Gare du Nord



குழந்தைகள் பெரியோர்களுக்கான
புதிய நிறைவான ஊட்டச்சத்து நிறைந்த
'POWER UP' Drink
வனிலா, சொக்கோலா மற்றும் பலரக சுவையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# ஓநாய்கள் ஊளைதானிடும்

என்னதான் மெத்துமெத்தென்ற செம்மறி ஆட்டுத் தோலை போர்த்திக்கொண்டு சாதுவான பிராணியாக ஓநாய் காட்சியளிக்க முயன்றாலும் அதன் ஊளையிடும் குணம் அதனை எவ்வாறோ இனங்காட்டியே தீரும். இது சிறுபிள்ளைகள் கூட விளங்கிக்கொள்ளும் உலக உண்மை.

இதைப்போலவே பௌத்த சிங்கள பேரினவாத ஓநாய் தன்னை சமாதான விரும்பியாக உருமறைப்புச் செய்து சகவாழ்வு, சமத்துவம், சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசினாலும் அதன் ஊளையிடும் குணமும் கூரிய வெறிப்பற்களும் தமிழ் மக்களையும், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களையும் அடிக்கடி பதம் பார்த்திருக்கிறது. இந்த வழியில், சிங்களத் தெருவெல்லாம் 'சமாதான ஊர்தி' கொண்டு செல்ல முனைந்த சந்திரிகா குழாமின் இரு அமைச்சர்கள் தமது பௌத்தபேரினவாத தன்மையை அப்பட்டமாக கடந்தவாரம் வெளிக்காட்டியுள்ளனர்.

முஸ்லிம் மக்களின் மத பண்பாட்டோடு தொடர்புடைய 'ஹலால் உணவு வழக்கத்தை பௌத்த மதம் கடுமையாக எதிர்ப்பதாக மல்வத்தை பீடம் தெரிவித்ததையடுத்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் தனது அமைச்சகத்தின் முஸ்லிம் விவகார பொறுப்பிலிருந்துதான் விடுபட விரும்புவதாகவும் மல்வத்தை பீடத்தின் ஹலால் தொடர்பான கருத்து சரி எனவும் தெரிவித்துள்ளார். அதாவது 'மிருக வதைகள்' பௌத்தம் கண்டிப்பதாலேயே 'ஹலாலுக்கு' அனுமதி இல்லை என சிங்கள ஆணைக் குழுவின் குரலாக ஒலித்துள்ளார்.

தமிழ் தேசியத்தின் குடிமக்கள் வெறிகொண்டு பாய்ந்து அவர்களை குதறி இரத்தத்தை ஆறாக ஓடவைக்கும் அரசு மிருக வதை பற்றி பேசுவது ஒருபுறமிருக்க, இந்தநாடு பௌத்தநாடு என்ற அகங்காரத் தொனியிலேயே இந்த 'ஹலால்' எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன.

மறுபுறத்தே மலையகத்தில் சீதை–ராமர் ஆலயம் அமைக்கப்படுவதற்கான திட்டமும் சிங்கள பெரும்பான்மை மக்களின் எதிர்ப்புக் காரணமாக இடைநிறுத்தப்படுகின்றது என இன்னொரு அமைச்சர் அறிவித்துள்ளார். தமிழீழ தேசத்திற்கு சிங்களத்தின் இவ்வாறான முடிவுகள் ஒன்றும் அதிர்ச்சியானதல்ல. சிங்களத்தின் ஓநாய் வேடத்தை அது புரிந்துகொண்டு தசாப்தங்கள் கடந்துவிட்டன.

ஆனால் சந்திரிகா அரசினை இலங்கை தீவில் சமாதானம் மலரவைக்கும் ஒரு சக்தி என இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கும் யதார்த்தப் பார்வை மங்கிய சர்வதேச சக்திகள் முழுமையாக உணர்ந்து கொள்வது எப்போ என்பதுதான் கவலைக்குரியது.

# எதிரொலிகள்

அன்பின் ஈழமுரசே!

நீங்கள் எங்களுக்கு இதுவரை ஈழமுரசு இதழ்களை அனுப்பி வைத்தமைக்காக முதலில் நன்றி கூறுகிறோம். மேலும் இவ் இதழ்களை தொடர்ந்து அனுப்புமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இங்கு (மொரீசியஸில்) தமிழ் பத்திரிகை கிடைப்பதில்லை. நீங்கள் அனுப்பும் இந்த இதழ்களின் மூலமாக எல்லா செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. இதைப்படிப்பதன் மூலமாக எங்களின் தமிழ் மொழி ஆர்வம் கூடுகிறது.

மொரீசியஸ் தீவில் பணத்தில் தமிழ் தாழ்த்தப்பட்டமையால் ஏற்பட்ட இடையூறுகளை தமிழ் மக்கள் போராட்டம் நடாத்தி கண்ட வெற்றியையும் அறியச்செய்த ஈழமுரசிற்கு எங்களின் வாழ்த்துக்கள். இதைப்பார்த்த எங்களுக்கு மிகவும் சந்தோஷம்.

வாழ்க தமிழ் வளர்க தமிழ். தமிழுக்கு அமுதென்று பெயர் அந்த தமிழினை அறியச்செய்து உலகெங்கும் பரவச்செய்யும் ஈழமுரசிற்கு எங்கள் இருவரினதும் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
திரு மற்றும் திருமதி
செல்வன் முருகன்

# முஸ்லீம் மக்களுக்கு எதிராக சிங்கள இனவாதம்!

சிங்கள, பௌத்த இனவெறி அமைப்பு தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான தனது மற்றுமொரு முனையை முஸ்லீம் மக்களுக்கு எதிராக உருவாக்கியுள்ளது. முஸ்லீம் மக்களின் உணவு நடைமுறை தொடர்பான மத வழக்கங்களைப் பாதுகாக்கும் சட்டமூலமொன்றை சிங்கள் அரசு பாராளுமன்றத்தில் முன்வைக்க முனைந்தது. இதற்கு எதிராக சிங்கள, பௌத்த இனவெறி சக்திகள் ஆர்ப்பாட்டம் செய்த போது அச்சட்டமூலத்தை அரசு வாபஸ் வாங்கியது. இது இவ் தமிழ், முஸ்லீம் விரோதப் போக்கை வெளிக்காட்டியுள்ளது. இதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் தீகாவி புத்தமத பிரதேசத்திற்கு அருகேவாழும் முஸ்லீம் மக்களின் மத உரிமைகளை பறித்தெடுக்க சிங்கள இனவாத சக்திகள் பேரணிகளை மேற்கொள்ள முயன்றன.

முஸ்லீம் மக்களின் மொழி – மத பாரம்பரியங்களை தமது சிங்கள, பௌத்த மேலான்மைக்கு எதிரான அம்சமாக வெறுப்புணர்வுடன் பார்க்க முயலும் இனவெறி சக்திகள் இதன்மூலம் தமிழீழ விடுதலைப் போருக்கு எதிராக தமிழ் முஸ்லீம் மக்களை பாவிக்கும் அரசின் இராணுவ – அரசியல் தந்திரோபாயத்துக்கு முற்றுப்புள்ளியிட முன்வந்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் மக்களிடையே நிலவிவந்த பொதுவான பாரம்பரிய உறவுகளை உடைத்து தமது போர்த்திட்டங்களுக்கு முஸ்லீம் மக்களை ஒரு கருவியாகப் பாவிக்கலாம் என்ற வியூகத்தை பிரேமதாச அரசுதான் முழுமையாக வகுத்தது. ஊர்காவல்படைகள் என்ற பெயரில் முஸ்லீம் இளைஞர்களை பிறிதொரு நடைமுறை ஊடாக ஒன்றுதிரட்டி சக தமிழ் மக்கள் மீது வன்முறையை தூண்டிவிட்டது. இதற்கு எதிரான தமிழர்களது நடவடிக்கையை முஸ்லீம் விரோதநடவடிக்கையாக சிங்கள அரசு சித்தரித்தது.

**பார்வை**

பிரேமதாசா அரசின் இராணுவ வியூகத்தில் பிரதான இடத்தை வகித்த தென் தமிழீழம் மீதான கட்டுப்பாட்டுக்குள் இத் தமிழ் பேசும் மக்களிடையே பிரிவினையைத் தோற்றுவிக்கும் போருத்தி பலம் சேர்ந்தது.

முஸ்லீம் காங்கிரஸ் தென்தமிழீழ முஸ்லீம் மக்களை திசைதிருப்பி அவர்களை சிறீலங்காவின் இறைமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் மாற்றும் சக்திகளாக்க முனைந்தது. இவ் உபாயம் மூலம் முஸ்லீம் காங்கிரசின் தலைவர் அஸ்ரபும் சகாக்களும் அரசின் செல்லப்பிள்ளைகளாக உலாவந்தனர். இவ் நாசகார திட்டத்தை எதிர்த்த முஸ்லீம் தலைவர்களை சிங்கள அரசும், இராணுவமும் ஒழித்துக்கட்டியது. அம்பாறையில் புலிகள் அமைப்பின் அரசியல் பீடத்துடன் ஒன்றிணைந்து உழைத்த முஸ்லீம் மத பிரமுகர் அரச ஊர்காவல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்நடவடிக்கைகள் மூலம் சிங்கள, பௌத்த இனவாதம் முஸ்லீம் மக்களை சகித்துக்கொண்டு தமிழர்கள் மீதான போரை வெல்ல முற்பட்டது. ஆயினும் காலஓட்டத்தில் சிறிய சலுகைகள் அறிவிப்புக்கள் என்பன மூலம் மட்டும் முஸ்லீம் மக்களை சிறீலங்காவின் தரப்பில் வைத்திருக்கலாம் என்ற ஊகிப்பு உடைபடத்தொடங்கிவிட்டது.

இன்று தென்தமிழீழத்தில் முஸ்லீம்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பான கேள்விகள் ஆரம்பித்துள்ளன. அஸ்ரப் முஸ்லீம் காங்கிரஸின் இக்கேள்விகளூடு தன் கட்சியை இழுத்துச்செல்ல முயல்கிறார்.

பிரதான தேசியக்கட்சிகளான ஐ.தே.க., சு.க. என்பன படிப்படியாக தென் தமிழீழம் மீதான தன் பிடியை இழந்துவருகின்றது. அம்பாறையில் இடம்பெற்ற முஸ்லீம் மக்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை ஐ.தே.க. தூண்டிவிட்டது எனவும் சந்திரிகாவின் சு.க. ஆதரித்தது எனப் பகிரங்கமாக பத்திரிகைகள் எழுத ஆரம்பித்துள்ளன. பாராளுமன்றத்தில் கலால் (Halal) உணவுச் சட்டத்தை கிடப்பில் போட்ட போது மத விவகார அமைச்சர் ஜெயக்கொடி பல்வேறு போலிக்காரணங்களைக் கூறி சிங்கள எதிர்ப்பை நியாயப்படுத்தினார்.

இன்று முஸ்லீம் காங்கிரஸ் தனது அரசியல் நிலைப்பாட்டை முஸ்லீம் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப மீள் ஒழுங்குசெய்யப்படவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. தமது சொந்த அரசியல் எதிர்காலத்தையும், பதவிகளையும் பாதுகாக்க வேண்டுமாயின் சிங்கள அமைப்புடன் சமரசம் செய்யவேண்டிய தேவை முஸ்லீம் காங்கிரசுக்கு உள்ளது. இதேபோன்று முஸ்லீம் மக்களின் எதிர்பார்ப்பை தமது சொந்த அரசியல் எதிர்காலத்திற்கான பேரத்திற்குப் பயன்படுத்தவும் அஸ்ரப் முற்படலாம். இதில் மலையகத் தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாட்டுக்கு ஒப்புடையது. மலையகத் தமிழ் மக்களை பிரதானமான தமிழ் தேசிய நீரோட்டத்திலிருந்து பிரித்துவைக்க சிங்கள அரசு பல்வேறு உத்திகளைக் கையாண்டது. மலையகத்தமிழ் மக்களின் தலைவராக திகழ்ந்த அமைச்சர் தொண்டமான் இச் சிங்கள அரச உத்திகளுக்கு பலியாகி இடைக்கால சமரசங்கள் மூலம் மலையகத் தமிழ் மக்களது உரிமைகளைப் பாதுகாக்கலாம் என அறிக்கை வெளியிட்டார். ஆனால் நிஜ நிலைமை மெதுவாக வேறோரு திசை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டு இன்று மலையகத்தில் தமிழர்கள் மீதான அரச வன்முறையை கூர்மைப்பட வைத்துள்ளது. மலையகத் தமிழ் மக்களையும் அவர்களது மத – பண்பாட்டு நோக்கங்களையும் எதிர்த்து பௌத்த பிக்குகள் கோரிக்கை எழுப்பியுள்ளனர். நுவரேலியாவில் அமைச்சர் தொண்டமானின் முயற்சியில் எழுப்பப்பட இருந்த இந்து பண்பாட்டு நிலையம் ஒன்றை இடைநிறுத்துமாறு பௌத்த தலைவர்கள் கோருகின்றனர்.

இப் போக்குக்களானது தமிழீழ விடுதலைப் போரின் இயல்பான தரப்பினை ஒன்று சேர்க்கின்றது. தமிழ் பேசும் மக்களின் மீட்சி தமிழீழம் உருவாவதன் மூலமே சாத்தியமாகும் என்பதை சிங்கள, பௌத்த இனவாதம் வலியுறுத்துகின்றது.

*- ராஜா*



நன்றி: தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் என்றால் பயங்கரவாதம்

*— கொழும்பிலிருந்து ஊரோடி*


சிறீலங்காவின் மாறிச் செல்லுகின்ற தெளிவான வேறுபாட்டு அரசியல் செயலமர்வுகள் இன்று சர்வதேச அரசுகளையே 'முட்டாள்கள்' ஆக்குகின்றது. முன்பு 'புலிகள் சமாதான எதிரிகள்' என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசைபாடிய அரசு தற்போது சமாதானத்திற்காக மத்தியஸ்த்த முயற்சிகளை மேற்



கொள்ளவரும் வெளிநாட்டு அரசுகளுக்கு கூறும் பதில்கள் எத்தன்மை வாய்ந்ததாக இருக்கின்றது? 'சமாதானம்', 'பயங்கரவாதம்' இவையிரண்டும் எத்தன்மை வாய்ந்தது? 'அரசியல்' என்ற காரணிக்குள் இவையிரண்டும் உள்ளடங்குகின்றது, என்றே கூறலாம். சிறீலங்கா அரசு தமிழ்த் தேசிய தீர்மானங்கள் அனைத்தும் தனது உள்ளங்கைக்குள் அடங்கவேண்டும் என்பதையே 'சமாதானம்' என எதிர்பார்க்கிறது. மறுபுறமாக இவைதான் எமது தமிழ் தேசிய தீர்மானங்கள் என்ற தமிழ் மக்களின் வரையறைகளை 'பயங்கரவாதம்' என கூறுகிறது. மத்தியஸ்தம் வகிக்க வரும் வெளிநாட்டு அரசுகள் நிச்சயமாக பாதிக்கப்பட்ட இனத்தவர்களின் தீர்மானங்களையே விதந்துரைப்புகளாக மாற்றிவிடும் என்ற தேசிய இனவாத அச்ச உணர்வே சிறீலங்கா அரசிற்கு மேலோங்கி உள்ளது. இதனாலேதான் மத்தியஸ்தம் வகிக்க வரும் வெளிநாட்டு அரசுகளுக்கு சிறீலங்காவின் பதில்கள் 'இரட்டைநாக்கு' தன்மை வாய்ந்ததாக அமைகின்றது. 'உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும்' இரட்டை நாக்கு அரசியல் சிறீலங்கா அரசிற்கு அன்றிலிருந்து இன்றுவரை பொருத்தப்பாடாகின்றது.

நிச்சயிக்கப்பட்ட சமாதானம் என்பது சிறீலங்கா அரசிற்கு பயங்கரமாகவும் பயங்கரவாதமாகவும் தெரிகின்றது. இச் சந்தர்ப்பத்திலேதான் கடைந்தெடுக்கப்பட்ட பயங்கரவாத அரசு சிறீலங்கா அரசு என்பதை சர்வதேச அரசுகள் அறிந்துகொள்ளவேண்டும். இனவாத தலைவர்களைத் தவிர தேசியத் தலைவர்கள் என்று யாரையும் குறிப்பிட்டுக் கூறமுடியாது. தற்போது ஐ.தே.கட்சி தனது கட்சி முரண்பாடுகளை களைந்து தனது பச்சை அணியை பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. சிங்களத் தேசிய நலன் கருதியே கட்சியில் ஒற்றுமை தேவை என்பதை ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டு என்பதால் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான பிரச்சாரத்தில் இறங்கியிருக்கும் ஐ.தே.



கட்சி தனது கட்சியில் இருந்து பிரிந்துபோனவர்களை ஒன்றிணைப்பதன் மூலம் கட்சியின் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி நடைபெறப்போகும் தேர்தல்களில் தமது வெற்றியை உறுதிப்படுத்தவே முனைப்புக் கொள்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நெருங்கிய உறவினர் என்பது தெரிந்த விடயம். 1972ம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கட்சியின் முக்கிய அங்கத்தவராக இருந்தபோது டி.எஸ். சேனநாயக்காவுடன் ஏற்பட்ட கருத்து மோதலால் ஜே.ஆருக்கு எதிராக கட்சி பல நடவடிக்கைகளை எடுத்ததும் அதற்கெதிராக ஜே.ஆர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததும் பின்னர் கட்சியின் நலன் கருதி அவர்களிடையே ஒற்றுமை வலியுறுத்தப்பட்டது. இதன் பயனாக 1975-ல் ஐ.தே.கட்சியில் இறுக்கமான ஒற்றுமை ஏற்பட்டதோடு 1978-ல் நடந்த பொதுத் தேர்தலில் ஜே.ஆர். தலைமையில் ஐ.தே.கட்சி பெரும்பான்மையாக வெற்றிபெற்றது.

அவ்வாறான ஒரு அணுகுமுறையைத்தான் ரணில் விக்கிரமசிங்காவும் தற்போது கையாளுகின்றார். சிறிமணி அத்துலக்முதலி சிறீசேனகுரே போன்ற முன்னாள் ஐ.தே.கட்சி பிரமுகர்கள் மீண்டும் ஐ.தே.கட்சியுடன் இணையக்கூடிய ஏதுநிலை தென்படுகின்றது. 1947-ல் இருந்து ஐ.தே. கட்சிக்குள் பல்வகைப்பட்ட பிளவுகள் ஏற்பட்டு பின்னர் ஒற்றுமை ஏற்பட்டு அதற்கு அடுத்து வரும் பொதுத் தேர்தல்களில் பெரும்பான்மையாக வெற்றி பெறுவது ஐ.தே.கட்சியினரின் வரலாற்று உண்மையாகும். ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்படும் பிளவுகள் அவ்வாறானதாக இல்லை. ஏனினும் கட்சியின் தேசிய நலன் என்பது எச் சந்தர்ப்பத்திலும் இறுக்கமானதாகவே இருக்கின்றது. சந்திரிகா, அநுருத்த ரத்வத்தை, சிறீமா என்று மூன்று பிரிவினரது முரண்பாடுகள் தேசியநலன் எனும் போர்வையில் மூடி மறைக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது கட்சியில் இருந்து தீர்ந்துபோன முன்னாள் அங்கத்தவர்கள் கூட மீண்டும் இணையக்கூடிய ஏதுநிலை தென்படுகிறது. ஆக மொத்தம் சிறீலங்காவில் இரு பிரதான தேசியக் கட்சிகளும் தத்தமது கட்சிக்குள் இருக்கும் முரண்பாட்டை தீர்ப்பதிலேயே 'சமாதானம்' என்பதைக் காண்கின்றனர். அதேவேளை இரு கட்சிகளுக்கும் இடையேயான 'சமாதானம்' என்பது தமது அரசபடையால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இழப்புகளை வெளியுலகில் மூடி மறைப்பதிலேயே தங்கியுள்ளது. மறுபுறமாக தமிழ் தேசிய தீர்மானங்களின் வரையறைகளை இரு கட்சிகளுமே பயங்கரவாதம் என்கின்றன.

**தனது கட்சியில் இருந்து பிரிந்துபோனவர்களை ஒன்றிணைப்பதன் மூலம் கட்சியின் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி நடைபெறப்போகும் தேர்தல்களில் தமது வெற்றியை உறுதிப்படுத்தவே முனைப்புக் கொள்கின்றனர்.**

இந்நிலையில் சிறீலங்கா அரசுடன் இணைந்திருக்கும் தமிழ் கட்சிகளின் 'சமாதானம்' எந்தச் சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதைக் குறிக்கும். இந்த வருடம் பொ.ஜ.ஐ. முன்னணி அரசிற்கான சமாதானம் என்பது தேர்தலை பின்போடுவதிலேயே தங்கியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலேதான் ஐ.தே.கட்சியின் 'பயங்கரவாதம்' என்பது பூதாகாரமாக கிளம்பப்போகிறது. இதுவே தேசிய பயங்கரவாதமாகவும் கிளம்பப் போகிறது. இந்நிலையில் தமிழ் மக்கள் காணப்போகும் 'சமா



தானம்' வெளியுலக அரசுகள் தமிழ் தேசிய தீர்மானங்களின் வரையறைகள் இதுதான் என்பதை அங்கீகரிப்பதிலேயே தங்கியுள்ளது. அதற்கான சாதகச் சூழ்நிலைகளே இந்த ஆண்டில் தீர்க்கமான வெளிப்பாடாகப் போகின்றது.

***'சமாதானம்' என்பது தமது அரசபடையால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இழப்புகளை வெளியுலகில் மூடி மறைப்பதிலேயே தங்கியுள்ளது. மறுபுறமாக தமிழ் தேசிய தீர்மானங்களின் வரையறைகளை இரு கட்சிகளுமே பயங்கரவாதம் என்கின்றன.***


## எமது வெளியீடுகள்

- ★ தமிழ்தாய் நாட்காட்டி [சுபநேரம், தமிழீழ போராட்ட முக்கிய நிகழ்வுகள், மாவீரர் நினைவு உட்பட]
- ★ தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்து அட்டைகள்
- ★ டிசம்பர் 97 – மே 1998 வரையிலான ஒளிவீச்சு, மற்றும் தேசத்தின் புயல்கள் ஒளியிழை பேழை ஆகியன வெளிவந்துவிட்டன.

தொடர்புகளுக்கு: 01 43 58 11 42
வெளியீட்டு பிரிவு
தமிழீழ விடுதலை புலிகள் பிரெஞ்சு பணியகம்.

ஈழவர் விளையாட்டுக் கழகம் - பிரான்ஸ்
நடாத்தும்
ஈழவர் கலைமாலை-99

நிகழ்ச்சிகள்
பரதநாட்டியம், மேற்கத்தேய நடனம், தாளலயம், நகைச்சுவை நாடகம், இசை நிகழ்ச்சி

காலம்: 10.01.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி (நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் நிகழ்ச்சிகள் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும்)
இடம்: ESPACE SAINT-MARTIN
199bis, Rue Saint Martin, 75003 Paris - Métro: Etienne Marcel

மேலதிக விபரங்களுக்கு: 01 39 83 78 25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மொந்தையில் 'சேரன்'

இந்திய தமிழ் திரைப் படத் துறையினுள் திடீர் திடீரென்று சில கால கட்டங்களில் வித்தியாசமான இயக்குநர்கள் தோன்றுவதும், பின்பு ஏதோ காரணங்களால் ஓரிரண்டு இயக்குநர்கள் மாத்திரம் விதிவிலக்காக மற்றையவர்கள் யாவரும் தடம்மாறிப் போவதும், சிலவேளைகளில் நகைச்சுவைக்கு உரியவர்களாகவும் மாறிவிடுகின்றார்கள்.

தொடக்க காலங்களில் நேர்த்தியான படைப்புக்களை உருவாக்கி நல்ல 'கலைப்பட இயக்குநர்கள்' என்ற உயரிய பண்பை பார்வையாளர்கள் மத்தியில்



ஏற்படுத்தி இவர்களால் நல்ல படங்களை மட்டுமே தரமுடியும் என்ற எதிர்பார்ப்பையும் உண்டுபண்ணிவிட்டு ஏன்தான் சரிந்துவிடுகிறார்களோ தெரியவில்லை. இப்படியாக இறந்த காலங்களிலும், நிகழ்காலங்களிலும் நிறைய இயக்குநர்கள் இருந்தாலும், அண்மைக் காலத்தில் தன்னை ஒரு வித்தியாசமான இயக்குநராக அடையாளம்காட்டி வருகை தந்துள்ள இயக்குநர் சேரன் பற்றி ஆராய முற்படுவது காலத்தின் தேவையென்று கருதுகிறேன்.

காட்சிகளினூடாக சில இடங்களில் பாரதிராஜாவின் தாக்கங்கள் தோன்றினாலும், சமூ



கக்' கருத்துக்களில் ஒரு புதிய இளமையும் சொல்லவந்த கருத்தில் தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு குழப்பமின்மையும் இவரின் திரைக்கதையில் காண முடியும். சேரன் என்ற இவருடைய பெயரை உச்சரிக்கும் பொழுது இவர் ஒரு படைப்பாளியாகத்தான் இருக்கவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தக் கூடிய அழகான தமிழ்ப்பெயர். அதேபோல் இவருடைய முதல் படைப்பும் அழகானதே. விமர்சனம் என்ற பதத்தினூடாக 'பாரதி கண்ணம்மா' என்ற அவருடைய முதல் படத்திலும் குறைகளைக் காண முடியும். தமிழ்நாட்டில் குப்பைகொட்டி வியாபாரமாக்கும் பல இயக்குநர்கள் மத்தியில் இவரது வரவு முற்றிலும் மாறுபட்டது. தன்னை விரும்புகிறவளை, தானும் நேசிப்பதை உணர்ந்துகொண்ட பிறகும் சாதி அமைப்புக்கள் என்ற சமூக வேறுபாட்டில் அது சாத்தியமில்லை என்று உணர்ந்து அவளைவிட்டு விலகிச் செல்வதும், பிறகு அவள் தற்கொலை செய்கிறவரையில் தன் காதலை வெளிப்படுத்தாத நாயகன், இறுதியில் அவளை அடக்கம் செய்யும்போது அந்த நெருப்பிலே குதித்து தன்னையும் அழித்துக் கொண்ட அவன் தனக்குள் இருந்த காதலையும் வெளிப்படுத்துகின்றவரையில், சாதியின் அவலங்களைக் கொஞ்சம் நிதானமாகவும், நேர்த்தியாகவும் கூடியவரையில் யதார்த்தமாகவும் காட்டியிருப்பது யதார்த்தமானது.

இயக்குநர் சேரனின் இரண்டாவது படைப்பு 'பொற்காலம்' இதுவும் பல புதிய படங்களோடு ஒப்பிடும்பொழுது உலகிலுள்ள அத்தனை மனித சமுதாயத்திற்கும் தேவையான ஒரு உன்னத

## சினிமா

மான கருத்தை கதையாய்க் கொண்டு, அதைத் திரைக்கதையாக்கி படம் முழுவதும் நகர்த்துகிறார்.

'ஊனமென்பது உடலில் உள்ள குறைகளல்ல, உள்ளத்தின் குறைகளே உண்மையான ஊனம்.' என்பதைக் கருவாக எடுத்துக்கொண்டுள்ளார்.

இரண்டு படங்களிலும் வெவ்வேறு கருத்துக்களை முன்வைத்து இயக்குநர் சேரன் வெற்றி கண்டிருந்தபோதிலும் இரண்டிலுமே ஒரே மாதிரியான முடிவை ஏன் திணித்தார் என்பது தெரியவில்லை. அதுவே அவரின் மீதுள்ள நம்பிக்கையில் சிறு சந்தேகத்தை உண்டுபண்ணிவிடுகிறது. முதல்படத்தின் முடிவு ஏற்புடையது எனில் பாரதி கண்ணம்மா இருவருடைய மரணத்தின் மூலமாகவும் ஒரு சமுதாயம் சாதி சாக்கடையில் இருந்து விழிப்புறுவதை தெளிவாக நகருகின்ற அவரது திரைக்கதையினூடு காட்டுகிறார்.

ஆனால் 'பொற்காலம்' படத்தின் ஊமைத்தங்கை அவளது அண்ணன் அறியாமல், அவன் கையாலேயே சாகடிக்கப்படுவது எந்தவித சமுதாய மாற்றத்திற்குப் பதில், இந்த தங்கை போன்ற ஏனையவர்களிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை உண்டு பண்ணிவிடும்.

'பாரதி கண்ணம்மா'வில்



சேரன் கொடுத்த முடிவு பலதரப்பட்ட விமர்சகர்களின் பாராட்டுதல்களையும் பார்வையாளர்களின் வரவேற்புக்களையும் பெற்ற நிலையில் அதேபோன்ற ஒரு முடிவை 'பொற்காலம்' படத்திலும்கொடுத்து வெற்றி கண்டுவிடலாம் என்ற வழமையான சினிமாத்தனப் பின்பற்றுதல்களையே இவரும் பின்பற்றியிருக்கிறார் என்பதுதான் உண்மை என்று தோன்றுகிறது. உண்மை வாழ்வியலை திரையில் காண்பிக்க முற்படுகிறபொழுது வியாபாரத்திற்காய் யதார்த்தத்திற்கு முரண்பாடாய் கற்பனைக் காட்சிகளை, இறுதி முடிவுகளை அமைத்து மூக்குடைபட்ட முக்கிய இயக்குநர் வரிசையில் மணிரத்தினம், அவரைத் தொடர்ந்து இன்று சேரன் போலும் உண்மையும் அதுதான் என்பதை எடுத்திருக்கின்ற மூன்றாவது படமான 'தேசிய கீதம்' புலப்படுத்தி நிற்கின்றது.

'மௌனராகம்' 'நாயகன்' 'அஞ்சலி' போன்ற அற்புதமான படைப்புக்களைக் கொடுத்த மணிரத்தினம் விழத்தொடங்கிய இடத்திற்கு அதைவிட வேகமாக இயக்குநர் சேரன் மூன்றாவது படத்திலேயே வந்து சேர்ந்திருக்கின்றார்.

'தேசிய கீதம்' படத்தின் தொடக்கத்திலே, ஒரு இரவல் இந்தியனான இயக்குநர் சங்கருக்கு நன்றி என்று போடும் பொழுதே நான் எழுந்துபோக் நினைத்தேன். இருப்பினும் அரைகுறை 'தமிழன்' சேரன் மீதிருந்த நம்பிக்கை காரணமாக முழுவதுமாக பார்க்கமுயன்றேன். முடிவில் பார்வையாளர்களை ஏமாற்றிவிட்ட சேரனின் படத்தை என்னவென்று சொல்வது?

**படத்தின் கதைதான் என்ன?**

**-குண்டுவெடிப்பா...**
**-அரசியல்வாதிகளின் சுரண்டலா...**
**-தீவிரவாதமா...**
**-கிராம மக்களின் அவல வாழ்வா..?**

இப்படி கதையென்று பார்த்தால் படத்தில் நிறையவே கதை (விடுகிறார்) பண்ணியிருக்கின்றார்கள். தேசிய கீதம் ஆரம்பத்தில் சினிமா கதாநாயகர்களுக்கோ கொடி கட்டுவதையும், குடும்பத்தை மறந்து அவர்களுக்குத் தொண்டர்களாய் அலைவதையும், ஏதோ தன்னை வித்தியாசமாய்க் காட்ட முயற்சித்த சேரன் மிகத் தீவிரமாகச் சாடுகின்றார்.

இப்படிச் சீறுகின்ற சேரன் இன்றைக்குத் தமிழ் நாட்டில் [illegible] உள்ள சூப்பர் நடிகர் ஒரு சந்தப்பம் வழங்கினால் அவரை வைத்து படமெடுக்கமாட்டேன் என்று சொல்கின்ற துணிவு உள்ளதா? நிச்சயமாக இல்லை என்றே நினைக்கிறேன். அதற்குப்பதில் அந்தச் சூப்பர் நடிகரே சொல்கிற கதையை அவரே விரும்புகின்ற விதத்தில் கைகட்டி நின்று எடுத்துத்தரக்கூடியவர்தான் இந்தச் சேரனும் என்பதில் எந்த



வித சந்தேகமுமில்லை. இதற்கு கலைச்சேவை செய்யவந்தவர்கள் சூப்பர் நடிகரை வைத்துப் ப்ணம் பண்ணிய கதை நிறைய உண்டு. இருந்தும் திரைக்கதையில் நேர்த்தியின்மை, விரைவில் விருதுகள் வாங்கவேண்டுமென்கின்ற அவசரம், வியாபாரத்தின் உச்சத்தைத்தொட தயாரிப்பாளரின் ஆலோசனைகள். இவை படத்திலே நிறையவே பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இளைய தலைமுறை இயக்குநர் சேரன்



நிச்சயமாக இதுபோன்ற தவறுகளைத் தவிர்த்து, இனிமேலாவது தனக்குத் தெரிந்த அல்லது தான் நிறைவாக அலசித்தெளிந்த விசயங்களை மிகவும் நேர்த்தியாக எடுக்கவேண்டுமென்ற ஆதங்கமே என்னை




இப்படி எழுதத் தூண்டியதே தவிர, விசமத்தனமாக சேரனை விமர்சித்து புண்படுத்த எண்ணவில்லை என்பதை எழுத விரும்புகிறேன். இன்றைய தேவைகள் கருதி மிகத் தெளிவான கருத்துக்களை, எந்தவித குழப்பமுமின்றி நேர்த்தியாக படமாக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் சேரன் போன்ற இயக்குநர்களுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். புலம்பெயர் தமிழராகிய எமது வாழ்வியலிலும் தமிழகத்திரைப்படங்கள் நிறையவே தாக்கங்களை ஏற்படுத்தி நிற்கின்றன. வேறு மாதிரியான கலாச்சாரங்களுக்கு மத்தியில் வாழுகின்ற எமது மக்கள் தமது பிள்ளைகள் தமிழ்ப் படங்களைப் பார்ப்பதை நிறைவாக அனுமதிக்கிறார்கள். காரணம் பிள்ளைகள் வேறு பொழுதுபோக்குகளைநாடி சீரழிந்துவிடக்கூடாது என்கிற பயம். எனவே அந்தச் சீரழிவை எமது இளைய தலைமுறை மத்தியில் இயக்குநர்களாகிய நீங்களே ஏற்படுத்திவிடக்கூடாது. தமிழ்நாட்டிலும் மிக அத்தியாவசியமாகிவிட்ட சாதனங்களில் திரைப்படமும் ஒன்று. எனவே அதன் தாக்கங்கள் பற்றி எழுதித் தெரிய வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். பல நூற்றாண்டுகளின் பின் மிகச் சிரமங்களின் மத்தியில் மிகவும் அவதானமாக ஒரு சிறந்த 'தமிழ்த் தலைவரின்' வழியில் சிறப்பான முறையில் நடைபயில முற்படுகின்ற எமது புலம் பெயர் சிறார்களின் உள்ளங்களில் 'முரண்பட்ட கருத்துக்களை விதைக்க முற்படவேண்டாமென்று' சேரனை மட்டுமல்ல; அவர் போன்ற அனைத்து இயக்குநர்களையும் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகின்றேன். 'உயிரே' போன்ற சீரழிவுப் படங்களின் வரவுகளின் பிறகு மணிரத்தினம் போன்றவர்கள் திருந்துவதற்கான வாய்ப்பே இல்லை என்கிறபொழுதுதான், சேரனைப் போன்ற இளைய இயக்குநர்களிடம் உரிமையோடு கேட்கின்றோம். சத்துள்ள ஒரு உலகத்தமிழினத்தைக் கட்டியெழுப்ப கலையுலகின் சார்பில் நல்ல இயக்குநர்களும் நீர் பாய்ச்ச வேண்டுமென்று அவர்கள் கரங்களைப் பற்றிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*- கலையின்பன்*
*ஜேர்மனி*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
**செல்வி நீரஜா சண்முகநாதன், செல்வன் ம.நந்தசிறீ**
ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன்
வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற
சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.



**பெயர்: கஸ்தூரி சத்தியராஜன்**
**வயது: 8 1/2**
**இடம்: Aulnay sous Bois, France.**

திருவள்ளுவர்

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே மைலாப்பூர் என்னும் இடத்திலே திருவள்ளுவர் என்னும் தெய்வப் புலவர் தோன்றினார் இவர் திருக்குறள் என்னும் அரிய நூலை இயற்றினார் இவரது ஆயிரத்து முன்னூற்று முப்பது குறளையும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று முப்பெரும் பிரிவுகளாக பிரித்திருக்கிறார். வள்ளுவர் தாம் வாழ்ந்த காலத்தை எண்ணவில்லை. எதிர்வரும் காலங்களையும் கருத்திற்கொண்டு திருக்குறள் இயற்றினார் திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது இவ் அரிய நூல் மாணவர்களாகிய நாங்கள் நாளொரு குறளாகப் படித்துப் பயனடைவோமாக.

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 12**

பின்வரும் தமிழ் சொற்களின் ஒத்த கருத்துள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவையாவும் நான்கு எழுத்துக்களைக் கொண்டதாகவும் சிதறியும் இடம்மாறியும் காணப்படுகின்றன. அவற்றைக் கண்டுபிடிக்கவும்.

**வீடு, சூரியன், அரசன், தீ, மிருகம், தியாகி, வயல், நிறம், பயம், சரித்திரம்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | ன் | த | ன் | மா | ண் | ங் | ம் |
| ஆ | ல | ப் | கு | ம | த | ய | ம் |
| ம | ரு | ர | ம் | வ | வி | ச | ன் |
| நெ | வீ | ல | ம் | அ | ல் | ண | ம் |
| வி | ச் | வ | பு | கா | ரு | ன | ர் |


1.................... 6....................
2.................... 7....................
3.................... 8....................
4.................... 9....................
5.................... 10....................

பிள்ளைகளே!

சரியான விடையைக் கண்டுபிடித்து குறித்து வையுங்கள். விடை அடுத்தவாரம்!

### சொற்சிதறல் எண் பதினொன்றின் விடைகள்

1. **உண்மை** - வாய்மை
2. **அம்மா** - அன்னை
3. **கருணை** - பரிவு
4. **வீரம்** - புறம்
5. **பறவை** - பட்சி
6. **பாசம்** - அன்பு
7. **அறிவு** - புத்தி
8. **வானம்** - மேகம்
9. **வலிமை** - பலம்
10. **கோபம்** - சினம்




## குட்டிக் கதை படியுங்கள்

# யானைக்கும் அடி சறுக்கும்

ஒரு பெரிய காடு

அங்கே பலவிதமான விலங்குகள், பறவைகள் அந்தக் காட்டுக்கு ஒரு சிங்கம்தான் ராஜா. எப்பவுமே காட்டுக்கு அதுதானே ராஜா! அதே காட்டில் இருந்த ஒரு பெரிய யானைக்கு இது பொறுக்கவில்லை.

'என்ன இது... எப்ப பார்த்தாலும் இங்கே சிங்கத்துக்கே தலைமைப் பதவி கிடைக்குது? நான் எவ்வளவு பெரியவன்... எவ்வளவு பெரிய பலசாலி... அப்படி இருந்தும் எனக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லையே....!

இப்படியே நினைத்துக்கொண்டு அந்த யானை தனக்குள் பொருமிக்கொண்டிருந்தது. இந்தக் காட்டுக்குத் தலைமை தாங்கும் மன்னர் பதவி தனக்குக் கிடைக்காதா என்று எண்ணி, எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தது அந்த யானை. இந்த சமயம் பார்த்து ஒரு குள்ளநரிக்கூட்டம் அதைத் தேடிக்கொண்டுவந்தது.



'ஐயா! பெரியவங்களே, நீங்க இந்தக் காட்டுக்கு ராஜாவா இருக்க ஆசைப்படுறீங்கள... அது போல ஒண்ணும் தப்பு இல்லே... ஆனா அதுக்கு முன்னாடி நீங்க எங்க கூட்டத்துக்குக் கொஞ்ச நாள் ராஜாவா இருங்களேன்... உங்களுக்கும் ஒரு பயிற்சி கிடைத்ததுமாதிரி இருக்கும்.....!'

குள்ள நரிகள் இப்படிச் சொன்னதைக் கேட்டவுடன் அந்த யானைக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது. அதுதான் எப்ப, எப்ப என்று பதவிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறதே!

இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், 'ம் ...சரி... நீங்களெல்லாம் இவ்வளவு தூரம் என்னைத்தைத் தேடி வந்துட்டீங்க! ரொம்பவும் பிடிவாதமா கேக்கறீங்க... அனதாலே உங்க பேச்சைக் கேக்கிறேன்..... உங்க வேண்டுகோளை மறுக்க எனக்கு மனசு வரேல்ல! சரி... உங்க கூட்டத்துக்குக் கொஞ்ச நாள் தலைவரா இருக்க சம்மதிக்கிறேன்... என்ன இப்ப உங்க எல்லாருக்கும் திருப்திதானே!' என்றது. உடனே அந்த யானை ராஜநடை போட ஆரம்பித்தது. யானை சாதாரணமாக நடந்தாலே எப்படி இருக்கும் என்பது, நமக்குத் தெரியும். அதுவே ராஜநடைபோட ஆரம்பித்தால் எப்படி இருக்கும்? என்பதை கற்பனை செய்துபார்த்துக்கொள்ளுங்கள்.

அந்தயானை... அந்த காட்டில் ஒரு பாதை வழியாக கம்பீரமாக முன்னால் போய்க்கொண்டிருக்கிறது! தலைவர் ஆகிவிட்டதல்லவா? அதனால் அப்படிப்போகிறது.

குள்ள நரிகள் எல்லாம் ரொம்பவும் அடக்கமாக அந்த யானையின் பின்னால் அணிவகுத்துப் போகின்றன.

'மன்னர் வாழ்க!' என்ற முழக்கம் வேறு! இதைக் கேட்டதும் அந்த யானைக்குத் தலைகால் புரியவில்லை! அவ்வளவு பெருமை!

அந்த யானைக்கு செருக்கு-ஆணவம் எல்லாம் வந்துவிட்டது. அதன் பிறகு அது தரையைப் பார்க்குமா? நிமிர்ந்து நடக்க ஆரம்பித்தது. தலையைத் தாழ்த்தவே இல்லை.... தரையைப் பார்க்கவே இல்லை! இப்படியே நடந்து போய்க் கொண்டிருந்தபோது எதிர்பாராமல் திடீரென்று ஒரு சதுப்பு நிலத்தில் காலை வைத்துவிட்டது. அவ்வளவுதான்! கால் உள்ளே போய் விட்டது. இன்னொருகாலை எடுத்து வைத்தது. அதுவும் உள்ளே போய் விட்டது. அந்த இரண்டு கால்களையும் வெளியே எடுக்கும் முயற்சியில் அடுத்த இரண்டு காலையும் எடுத்து வைத்துப் பலமாக ஊன்றியது, அதுவும் உள்ளே போய்விட்டது. இப்போது நாலு காலும் வசமாக சேற்றில் சிக்கிக்கொண்டுவிட்டன. எடுக்க முடியவில்லை. குள்ளநரிகள் எல்லாம் அதைச் சுற்றிச் சுற்றிவந்தன. சில நரிகள் நடனம் ஆட ஆரம்பித்தன. யானை அதைப் பார்த்தது என்ன இது? தலைவர் நான்.... இங்கே தவித்துக் கொண்டிருக்கிறேன்... தொண்டர்கள் நீங்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கிறீர்கள்? ஆடுகிறீர்கள்? தொண்டர்களே உடனே உங்கள் தலைவராகிய என்னைக் காப்பாற்றுங்கள்!' என்று அலறியது யானை, அந்தக் குள்ள நரிகளில் ஒன்று முன்னால்வந்து நின்றது.

அது யானையைப் பார்த்துச் சொன்னது:

'தலைவரே! எங்களுக்கு ரொம்ப நாளாக ஒரு ஆசை! அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளத் தான் உங்களை எங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டோம்!'

'அப்படி என்ன உங்கள் ஆசை?'

'வேறொன்றுமில்லை... யானைக்கறி சாப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்பதே எங்கள் ஆசை...!'

இதைக் கேட்டவுடன் அந்த யானை அதிர்ச்சியால் மயங்கி வீழ்ந்தது. நரிகள் அதன் மீது ஏறி நின்று ஆட்டம் போட ஆரம்பித்தன. பதவி மீது கொண்ட பேராசை ஒரு பெரிய யானையையே பலமிழக்கச் செய்துவிட்டது பார்த்தீர்களா?

*– கோ. சுவாமிநாதன்*

## அறிந்துகொள்வோம்

### நாடு அதை நாடு

**ஐக்கிய அரபுக் குடியரசு**

தலைநகர்:- அபுதாபி
பரப்பளவு :- 82,800 சதுர கி.மீ
மக்கள் தொகை :- 19 இலட்சம் (1994)
மொழி :- அரபு
எழுத்தறிவு:- 73வீதம்
சமயம்:- இஸ்லாம்
நாணயம்:- திர்காம்




பொருளாதார வருவாயை பேரீச்சம்பழ உற்பத்தியும் மற்றும் சீமெந்து உற்பத்தி என்பனவும் பெற்றுத் தருகின்றன.

இந்நாட்டிற்கு அதிக வருவாயை எண்ணெய் உற்பத்தி ஈட்டிக்கொடுக்கின்றது.

## கவிதை முற்றம்

### பாரதியார்

அச்சமில்லை அச்சமில்லை – என
ஆவேசமாய் பாடியது யாரோ?
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே – என
ஆனந்தக்கூத்தாடியது யாரோ?
இரும்பைக் காய்ச்சி உருக்கி
எந்திரங்கள் செய்யச் சொன்னது யாரோ?
துரும்பைப்போல மதித்து வெள்ளையரைத்
தூக்கி எறிந்தது யாரோ?
மனதில் உறுதி வேண்டுமென்று
ஓதியது யாரோ?
பாப்பர்வுக்கும் பாட்டு அன்று
பாடியது யாரோ?
பாரெல்லாம் போற்றும் நம்ம
பாரதியாரே! மகாகவி பாரதியாரே!



*மஞ்சுளா*
*நெல்லை. தமிழகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம்

# 1998 பதிவுகள் ஒரே பார்வையில்

## ஜூலை

**01.07.98** ➔ முல்லை கடற்பரப்பில் 7 டோராக்களுடன் ஆறுமணி நேரச்சமர்.

➔ கிருஷாந்தி கொலை வழக்கில் ஆறு பேருக்கு மரணதண்டனை. செம்மணியில் 400 புதைகுழிகள் இருப்பதாக தெரிவிப்பு.

➔ களுத்துறை சிறையில் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டதை அடுத்து துப்பாக்கிச்சூடு. தடுத்து வைக்கப்பட்டிருந்த மூவர் காயம்.

➔ புங்குடுதீவில் புலிகளின் தளங்களை அழிக்கச் சென்ற படையினர் விரட்டியடிப்பு.

➔ ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் தமது 15 படைப்பிரிவுகள் பங்கேற்றதாக புலிகள் அறிவிப்பு.



**12.07.98** ➔ திருமலை இராணுவ - பொலிஸ் கூட்டு முகாம் புலிகளிடம் வீழ்ந்தது. ஆயுதங்கள் புலிகள் வசம்.

**15.07.98** ➔ மிருசுவிலில் படை அதிகாரி சிப்பாயினால் சுட்டுக்கொலை.

➔ சிறிலங்கா அரசின் நிவாரணவெட்டை கண்டித்து, புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, வன்னி எங்கும் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்ட பேரணிகளும் நடாத்தப்பட்டன.

**18.07.98** ➔ ஆனைக்கோட்டை படையினர் அனுமதி மறுப்பால் கர்ப்பிணிப்பெண் மரணம்.

**21.07.98** ➔ கிளிநொச்சியில் வீடுபார்க்கச் சென்றவர் படையினரால் சுட்டுக்கொலை. வடமராட்சியில் நோபோட் வெலிங்டன் (33) தெருமுடி மடத்தடி முகாம் படையினரால் சுட்டுக்கொலை.

**25.07.98** ➔ யாழ்.நகரில் சிறிலங்காப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் 5 மணி நேர சமர்.

**26.07.98** ➔ இந்தியா சென்ற தமிழ் அகதிகள் 45 பேர் படகு விபத்தில் பலி.

➔ மாங்குளம் நகரை கைப்பற்ற படையினர் முயற்சி. புலிகளின் எதிர்த் தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்ட படையினர் பலி.

**27.07.98** ➔ கறுப்பயூலை நினைவுகள் உலகெங்கும் நினைவு கூரப்பட்டது.

**30.07.98** ➔ வன்னியில் நிவாரண தடைக்கு எதிராக சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் முன் பாரிய மறியல் போராட்டம்.

## ஓகஸ்ட்

**03.08.98** ➔ மூன்று முறிப்பு இராணுவ வலையம் தாக்கி அழிப்பு. 50 இற்கு மேற்பட்ட படையினர் பலி. நூற்றுக்கணக்கானோர் காயம். 14 போராளிகள் வீரச்சாவு.

➔ வவுனியா வீரகுளம் காட்டுப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இரு தமிழ் இளைஞர்களின் சடலம் கண்டெடுப்பு.

**10.08.98** ➔ தமிழ் மக்களின் நிலையை எடுத்துக்கூற ஜெனிவா ஐ.நா. சபைநோக்கி, மாபெரும் பேரணி.

➔ உயிலங்குளம் - செட்டிகுளத்தில் கொலைக் குழுவினால் 10 இற்கு மேற்பட்டோர் படுகொலை.

**12.08.98** ➔ கிளிநொச்சி உருத்திரபுரத்தை கைப்பற்ற படையினர் முயற்சி. 40 படையினர் பலி. 15 போராளிகள் வீரச்சாவு.

**14.08.98** ➔ முல்லைக் கடற்பரப்பில் நுழைந்த துபாய்க் கப்பல் விடுதலைப் புலிகளால் இடைமறிக்கப்பட்டது. கப்பல் சிறிலங்கா விமானப் படையினரால் மூழ்கடிப்பு. 17 மாலுமிகள் விடுதலைப் புலிகளால் காப்பாற்றப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பு.

➔ வசாவிளான் மகாவித்தியாலய மலசல கூடத்தில் இருந்து எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

➔ அழுகிய நிலையில் வீடொன்றில் இருந்து (நாகலிங்கம் பவானி (47) என்பவரது சடலம் மீட்பு.

➔ செம்மணி புதைகுழி சாட்சி, சிறைச்சாலையில் வைத்து சிறைக் காவலர்களால் தாக்குதல்.

**19.08.98** ➔ மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டு பகுதிகளை நோக்கி, பாரிய இராணுவ நகர்வு. விடுதலைப் புலிகளின் முகாம் மீதான ஆட்டிலெறி தாக்குதலை அடுத்து படையினர் பின்வாங்கினர்.

## செப்டெம்பர்

**05.09.98** ➔ முல்லைத்தீவில் நிவாரணவெட்டை நீக்கக்கோரி தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டம்

➔ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ் செல்வனின் அறிவிப்பை பா.ஜ.கட்சி வரவேற்பு.

➔ போராட்டத்தை அங்கீகரிக்கக்கோரி நெல்சன் மண்டேலாவுக்கு புலிகள் கடித மூலம் வேண்டுகோள்.

**11.09.98** ➔ நல்லூர் மாநகரசபையில் குண்டு வெடிப்பு. யாழ்.மேயர், இராணுவ பிரிகேடியர் உட்பட 18 பேர் கொல்லப்பட்டனர்.

**21.09.98** ➔ ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் புலிகளை ஆதரிக்கவேண்டாம் என சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கை.

➔ முள்ளியவளையில் மர்ம விமானம்.

**26.09.98** ➔ கிளிநொச்சி 'ஓயாத அலைகள் 2' தாக்குதல் மூலம் மீட்பு. 1500 இற்கு மேற்பட்ட படையினர் பலி. 1000 மில்லியன் ரூபா ஆயுதங்கள் புலிகள் வசம். 300 போராளிகள் வீரச்சாவு.



**29.09.98** ➔ பலாலி விமானத் தளத்தில் இருந்து புறப்பட்ட விமானம் மன்னார்க் கடலில் வீழ்ந்தது.

## ஒக்டோபர்

**01.10.98** ➔ ஓயாத அலைகள் '2' மூலம் விடுவிக்கப்பட்ட கிளிநொச்சியில் தளபதி விதுஷாவினால் புலிக்கொடி ஏற்றப்பட்டது.

➔ முத்தையன் கட்டில் விமானக் குண்டு வீச்சு. ஒருவர் பலி.

**11.10.98** ➔ 'லங்கா முடித்த' கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்ட கவசவாகனம் கடலில் வீழ்ந்த போது அதனுள் இருந்த, அருகில் நின்ற படையினர் 40 பேர் பலி.

**07.10.98** ➔ யாழ். செம்மணி புதைகுழி தோண்டப்பட வேண்டும் எனக்கோரி ஊர்வலம் நடாத்தியவர்கள் 2000 பேர் தமிழகத்தில் கைது.

**17.10.98** ➔ வட்டுக்கோட்டையில் 16 வயது மாணவி படையினரால் வீட்டிலிருந்து கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு.

**22.10.98** ➔ விடுதலைப் புலிகளின் தளங்களை அழிக்கவென அம்பாறையில் 'வீரகிரும்' இராணுவ நடவடிக்கை.

➔ செம்மணி புதைகுழி தொடர்பாக ம.தி.மு.க. செயலாளர் வைகோ ஐ.நாவில் முறையீடு



**26.10.98** ➔ விசுவமடுவில் மாவீரர்கள் நாதன், சுரேந்தி, கஜன் ஆகியோருக்கு 'நினைவுக்கல்' திறந்துவைக்கப்பட்டது.

**30.10.98** ➔ முல்லைக்கடற்பரப்பில் கடற்படையின் தொடரணி மீது தாக்குதல். டோரா ஒன்று புலிகளால் கைப்பற்றப்பட்டு, கடலில் மூழ்கியது. 3 அதிகாரிகள் உட்பட 17 படையினர் பலி.

## நவம்பர்

**08.11.98** ➔ புதுக்குடியிருப்பு பேரணியின் முடிவில் ஐ.நா செயலாளர் நாயகத்திற்கு மனு அனுப்பி வைக்கப்பட்டது.

**13.11.98** ➔ உயிலங்குளத்தில் நான்கு பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொலை.

➔ சிங்கள மொழியில் 'புலிகளின் குரல்' வானொலி. 'தமிழர் வந்தேறு குடிகள்' என்ற சந்திரிகாவின் தென்னாபிரிக்க உரைக்கு சிங்கள இனவாத அமைப்பு என்.ஜே.சி ஆதரவு.

**22.11.98** ➔ பருத்தித்துறை வியாபாரி மூலை, அம்பகாம் இராணுவநிலை, கட்டைபறிச்சான் இராணுவத்தின் நிலைகள் மீது புலிகளின் பீரங்கிப்படையணி தாக்குதல்.

**27.11.98** ➔ மாவீரர் நாளில் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தின் மீது வான்புலிகள் மலர்தூவி வீரவணக்கம் செலுத்தினர்.

## டிசம்பர்

**04.12.98** ➔ 18 மாதங்களாக நடாத்தப்பட்ட ஜெயசிக்குறுய் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

➔ ஒட்டுசுட்டான் சிறிலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. 12000 இற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்வு.

**06.12.98** ➔ ஒட்டுசுட்டானை பார்வையிடச் சென்ற ஜெனரல் ரத்வத்தை புலிகளின் பீரங்கி படையணியின் தாக்குதலில் இருந்து உயிர்தப்பினார். மெய்ப்பாதுகாவலர் படுகாயம். நாலு படையினர் பலி.

➔ புளொட் குழுவைச் சேர்ந்த ஒருவரால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் சுட்டுக்கொலை.

**12.12.98** ➔ தென்னாபிரிக்க தூதுக் குழு யாழ்.குடா சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டது.


**25.12.98** ➔ வன்னி உணவுத் தடைக்கு எதிராக லண்டனில் 15ஆவது வாரமாக விழிப்பு போராட்டம்.

**28.12.98** ➔ இந்தியா- சிறிலங்கா வணிக உடன்பாட்டில் கையொப்பம் இட்டுக்கொண்டன.

**31.12.98** ➔ மட்டு-தொப்பிகல காட்டில் 'கிரிகர' இராணுவ நடவடிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடருதல்




குளித்து விட்டு வரப் பரமன் கூப்பிட்டான்.

'அண்ணை'

அவன் நிமிர்ந்து பரமனைக் கவனித்தான். பரமன் தயங்கினான். எதையோ கேட்கும் கேள்வி ஒன்றில் முகம் புதைத்திருந்தது.

'என்ன சொல்லு'

கபடமற்ற தயக்கம் பரமனுக்கு. தலையைத் துவட்டியபடி கேட்டவன் நடந்தான் கொட்டிலுக்கு.பரமன் பின் தொடர்ந்தான்.

'சொல்லன்' திரும்பவும் இவன் கேட்டான். வற்புறுத்தலும் ஒரு இதமான வருடலாக இருந்தது.

'இண்டைக்கு மட்டும் ஒரு கடிதம் எழுதித்தாங்கோ அண்ணை' பரமனின் குரல் அடங்கி, வேண்டுதலாக வந்தது.

நின்று திரும்பி பரமனை ஊடுருவினான். 'முந்தியும் சொன்னனான். நீயாக எழுதப்பார். எழுதலாம் நீதான் எழுத வேணுமெண்டு யோசி'

பரமனின் தயக்கம் தீவிரமாகியது. ஏன் கேட்டோம் என்ற பொருள் அவனுள் எழுந்தது. பேச்சற்று நின்றான்.

'என்ன யோசிக்கிறாய்' இவனின் மனம் இளகிக் கனிந்தது. பார்வையில் கனிவு வழிந்தது.

'வா' நடந்து கொட்டிலுக்குள் வந்தான். சோப்பைக் கொட்டிலுக்குள் வைத்துவிட்டு, துணிகளை கொடியில் உலரப் போட்டபடி சொன்னான்.

'இயக்கத்தில் எல்லாருக்கும் முடிஞ்சளவுக்கு எல்லாத்தையும் செய்யத் தெரிஞ்சிருக்கோணும். சும்மா இருக்கிற நேரத்தில பழகவேண்டியதைப் பழக முயலவேணும். சும்மா இருக்க நேரம்மிராதான். எண்டாலும் முடிஞ்ச வரையில....'

கொட்டிலுக்குள் வந்தவன் பரமனைக் கூப்பிட்டு மேசைக்கருகில் இருத்தினான். வரிசையில் துவக்குகள் அடுக்கியிருந்தன. அவரவர் வேலைகளில். பகிடியும் சிரிப்புமாக 'பம்பல்' ஒரு பக்கம்.

சதா எதையோ படித்துக்கொண்டிருந்தான். சேரன் பத்திரிகையில் குறிப்பெடுத்து தன் நாற்குறிப்பில் குறித்துக் கொண்டிருந்தான். வெளியே காகங்கள் கூட்டமாகக் கரைந்து கொண்டிருந்தன. ஹேமன் கெற்றப் போலால் அடித்து... காகங்கள், அணில் என்று அவனுக்கு இலக்குவைக்கும் விளையாட்டு..... ஹேமனின் கல் தெறிச்சுக் காகங்கள் மரத்தின் மேல் கலைந்து தாறுமாறாக.....

இவன் கவனத்தை பரமனிடம் திருப்பி 'ஆருக்கு கடிதம் எழுதோணும். நீ தான் இப்ப எழுதுறது. நீ எழுதினத்துக்குப் பிறகு நான் வேணுமெண்டால் பார்த்துத் திருத்துறன். பார்! நீ முந்தி உன்ர பேரைக்கூட எழுத மாட்டாய். இப்ப எவ்வளவு வடிவாக எழுதுவாயெண்டு. முடியாதெண்டு ஒண்டில்லை. முடியுமெண்டு நினை, எண்டு அண்ணை நெடுகலும் சொல்லுவார்'

'ஓமண்ணை எழுதுவன். எண்டாலும் அதுகளுக்கு என்ர எழுத்து விளங்காதெண்டு தான்....'

'வடிவாக, தான் நினைக்கிற மாதிரி எழுதி, அதுகளுக்கு அனுப்ப வேணுமெண்ட எண்ணம் பரமனுக்கு ஆசையின் ஏக்கம் கண்களில் தேங்கியிருந்தது.

'பரவாயில்லை எங்களோட பழகினதுகளுக்கு எங்களின்ர அன்பைத் தெரியும் நீயே எழுது. நான் திருத்தி விடுகிறன்' என்று பரமனைத் தூண்டினான்.

தயக்கத்துடன் பரமன் எழுதத்தொடங்கினான். வெள்ளைப் பேப்பரில் அவனுக்கு எழுதவராது. சொத்திக்குப் போகும். கோட்டுப் பேப்பரில் எழுதினான்.

**கருணாகரன்**

பரமனுக்குப் படிக்க வசதியிருக்கவில்லை. வறுமையும், கிராமமும் படிக்கவிடாமல் தடுத்துவிட்டன. கெட்டிக்காரன். மனக் கணக்கில் படபடவெண்டு எதையும் சொல்லுவான். ஒண்டையும் மறக்கமாட்டான். அடிபாடுகள், குறாப்பில் இருக்கும்போது நடந்த பகிடிகள், சண்டையின்போது நடந்துகொள்ளும் முறை பற்றிய பயிற்சிகளின்போது கூறப்பட்ட அறிவுறுத்தல்கள் என்று தன்ரை அனுபவங்களையெல்லாம் சொல்லுவான். ஆனால் வீட்டுக்குக் கடிதம் எழுத வேணுமெண்டாலும் ஆரையும்கொண்டுதான் எழுதுவிப்பான்.

இயக்கத்துக்கு வந்ததற்குப் பிறகு, இப்ப எழுத, வாசிக்க ஓரளவுக்கு வரும். எண்டாலும் புதிதாக ஆருக்கும் எழுத வேணுமெண்டு ஆசை. வடிவான எழுத்தில் நேராக, நல்லா எழுதி அனுப்பவேணும் எண்ட எண்ணம்.

'நேரமாகுது. கெதியா எழுது. வெளிக்கிடுறன்' கோல்சரைக் கட்டியபடி இவன் சொன்னான்.

ஹேமன்கெற்றப்போலை வைத்துவிட்டு T.81ஐ எடுத்துக்கொண்டு முற்றத்தில் வந்தான். மழை தூறிக்கொண்டிருந்து. இப்பவும் மரங்களில் காகங்களின் ஆலவட்டம். ரகு கலைத்தான். காககங்களின் ஆலவட்டத்திற்குக் காரணம் தேடினான். சாப்பாட்டுப் பார்சல்களின் கழிவுகளில் ஒன்றிரண்டு தெரிந்தது. 'ஆர் இதைப் போட்டது' ரகு கத்தினான். சின்னராசு பேசாமல்போய் கழிவுகளைப் பொறுக்கிக் கிடங்குகளில போட்டான். தன்ரை தவறை மௌனத்தில், பொறுக்கிப்போட்டதில் உணர்ந்திருப்பான் போலும்.

அது முன் காவலரண்களுக்குக் கிட்டவாகவுள்ள தங்குநிலை முகாம். காகங்கள், மற்றும் ஏதாவது அசைவுகள் தெரிந்தால் அந்த இடத்தில் முகாம் இருக்கிறதென இராணுவம் ஷெல்லடிக்கும்.

இவன் பரமனின் கடிதத்தை வாங்கிப் படித்தான். பரமன் முதல் இருந்த இடத்தில் 'அம்மை' கண்டு படுத்திருந்தான். முகாமில் பராமரிப்பு என்றாலும் உதவிக்குச் சாப்பாடு, அது இது என்று பக்கத்தில் இருந்த வீட்டுக்காரர் பரமனைக் கவனித்தார்.

இப்ப இடம்விட்டு முகாம்மாறி இங்க வந்தபிறகு அவையளுக்கு நன்றிசொல்லிக் கடிதம் போடவேண்டுமென்ற நன்றியூற்றில் எழுதியிருந்தான்.

எப்பவும் சனங்களின்ரை ஆதரிப்பு மனசிற்குள்ள நன்றியாகச் சுரந்துகொண்டேயிருக்கும். எவ்வளவு பிரச்சினைக்குள்ளையும், என்னமாதிரிப் பொத்திப் பொத்திப் பாதுகாத்ததுகள்.

'சனங்களின்ர அன்பும், ஆதரிப்பும் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்?' என்ற எண்ணம் பரமனுக்கு, இவனுக்கு எல்லாருக்கும்.

எழுதியிருந்த கடிதத்தில் சிலவற்றை இவன் திருத்தினான். பரமன் அழுத்தி சிலேற்றில் எழுதுவதைப்போல எழுதியிருந்தான். ஆழமான பதிவு ஆழமான அன்பையும் நன்றியையும்போல.

'பார் உன்னைக் கவனிச்சதுகளுக்கு நீ எழுதினது எவ்வளவு நல்லாக இருக்கு. எனக்குத்தான் தெரியும் அதுகளின்ர அன்பும், ஆதரிப்பும், உன்ர உணர்வுகளும். நான் உனக்காக இப்படி எழுதேலாது.'

பரமன் மகிழ்வில் நீந்தினான், சிரிப்புடன் [illegible]

பூரிப்பில் அவன் திளைத்தான். கண்ணில் ஒருகோடி சூரியப் பிரகாசம் தெரிந்தது. நிலவில். நடப்பது போன்ற சுகத்தை அவன் கண்கள் காட்டின. மகிழ்வின் பளபளப்பு நம்பிக்கையின் ஒளி.

'முடியாது எண்டு ஒண்டில்ல. முடியுமெண்டு நினை. முடியுமெண்டு நம்பிக்கை வைத்தால் முடியாதொண்டில்லை.' இவன் திரும்பவும் சொல்லிவிட்டு G 3 ஐத் தூக்கிச் சரிபார்த்தான்.

நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. மாறிவிட வேணும் நடந்தார்கள்.

இவன் அரவிந்தன்.

ஜெகன், வேணு, புகழ், தனம், சதா இன்னும் ஐந்தாறு பேர் எண்ணிக் கணக்கெடுத்தான். எண்ணிக்கை சரி.

வீடுகள் அநாதரவாகிக் கிடந்தன. ஊமைத்தனமாக வீதி. குடியிருந்தவர்கள் துரத்தப்பட்டுவிட்டார்கள். தூசிமண்டிய அந்த வீதிகளில் கவிந்த மௌனத்தைக் கலைத்தபடி பகிடியும் சிரிப்புமாக நடந்தார்கள்.

இராணுவம் 'ஷெல்'லும் குண்டுகளும் போட்ட சின்னங்கள் சுவர்களிலும் கூரைகளிலும் மரங்களிலும் காலவடுக்களாகத் தெரிந்தன.

வேலிகள் கறையான் படர்ந்து கொப்புக்கள் முறிந்த மாமரங்கள் சூழவும் யுத்தத்தின் முகம்.



துரத்தப்பட்ட மக்கள் ஓலமிடுவது போல அந்த அமைதியின் அந்த காரம் இவனுக்குப்பட்டது. அமைதியும் ஒரு இசைதான். அசையாத காற்றும் தன்பாட்டில் இவர்களைத் தவிர சூழல் இறுகிப் போயிருப்பதை உணர்ந்தான்.

கட்டாக்காலி மாடுகள் ஒன்றிரண்டு தூரத்தில் தெரிந்தது திரும்பிப்பார்க்க புற்கள் எழுந்து படர்ந்து வடலிகள் முளைவிட்டுச் சடைத்தது..

மழை இப்பொழுது பலமாகத் தூறிக்கொண்டிருந்தது. நனைந்த படி நடை.

மாறிவிட்டாயிற்று இனிக் கவனம் சூழலில் எதிரில்.

காப்பரணில் இவன் கவனித்திருந்தான். கூட வந்தவர்கள் எல்லாம் இவனுடன் இணைந்திருந்த நிலைகளில் கவனிப்பில்

மழைத் தூறல், முன்னிருட்டு. வெடித்தன துப்பாக்கிகள் இங்கிருந்தும், எதிலிருந்தும், புகையும், பொறியும் உமிழும் துப்பாக்கிகளால் குறிபார்த்து அடித்தார்கள் தோள்கள் குலுங்க.

'வோக்கி' இலக்கங்கள் மாறி, மாறித் தொடர்பில் கதைத்தது. மற்றத் தோழர்களுக்கு அழைப்பு. இராணுவம் இடதுபக்கமாக ஒழுங்கை முடக்கில் முன்னேற முயன்றது.

'நகர ஒரு அடியும் முன்பதிக்கவிடோம்' என்ற ஆவேசத்தில் சண்டை. துணைக்குக் காந்தன் 'குறாப்' வந்தது.

'அருணப்போடு' போட்டான் ஒருவன்.

'முன்னுக்கு வா ஓடு. பனைக்குப் பின்னாலை பதுங்குகிறவனுக்கு அடி...

சத்தங்கள் சண்டையுடன்...

சபேசனுக்குத் தலையில வெடி. தூக்கினான் கணேஸ். இராணுவம் பின் வாங்க இவர்கள் முன்னேறத்துடங்கியது இவனின் காலில்..... இராணுவம்தான். அவனின் துப்பாக்கியைத் தடவி எடுத்துக் கொண்டு முன்னேறி.....

இராணுவம் பின்வாங்கி தங்கள் நிலைகளுள்... காயப்பட்டவர்களுடன் இறந்தவர்களை விட்டுவிட்டு.

இனிப் 'பராலைற்' அடிச்சுத் தேடுவான். அதுக்கிடையில் பொறுக்க வேண்டியதை....

இராணுவத்தினரின் சடலங்களைத் தவிர்த்து ஆயுதங்களையும் பொருட்களையும் எடுத்து மீண்டும் வர...

'அரவிந்தனுக்கு காலில் வெடி அனுப்பியாச்சு, பரமனுக்கு நெத்தியில... குணத்துக்குத் தலையில...' கணேஸ் சொன்னான்.

'சபேசனுக்கும் அரவிந்தனுக்கும் பிரச்சினையில்லை...'

'அரைமணித்தியாலத்தில் இரண்டு பேரைக் குடுத்திட்டம்' இப்படி எத்தனையோ தடவைகள் அனுபவப்பட்டாலும் ஒவ்வொரு தடவையும் துயரம் பீறிடுகிறது. எவ்வளவு குருதிகளை இப்படித் தூக்கும்போது அழைந்த கைகள் இப்பொழுதும் நடுங்குகின்றன.

ஒன்றாக இருந்து, ஒன்றாகச் சாப்பிட்டு, ஒன்றாகப் போராடி, ஒரே உணர்வாக இருந்தாலோ என்று அந்தக் கணம் நினைத்தான்.

பரமனை இவன்தூக்க, ஆளுக்காள் மீட்புடன்...

நெஞ்சு கொதித்தது இவனுக்கு. இப்பவே இராணுவத்தை அடித்துக் கொல்ல வேணும் என்று கொந்தளித்தது.

'எங்கட இடத்தில் வந்து நிண்டு எவ்வளவு அடாத்துப் பண்ணுறாங்கள்? விடமாட்டம்'

நின்று திரும்பிப்பார்த்தான். தூரத்தில் இருளில் இருக்குவியலாகத் தெரிந்தன... எதிரியின் நிலைகள்.

புயலின் குமறல் நெஞ்சினுள். ஏதோ தீர்மானத்துடன் தலையாட்டி விட்டு நடந்தான்.

எல்லாவற்றையும் கொண்டு வந்தாயிற்று. பரமனிலிருந்து வடிந்த குருதியின் சூடு இன்னும் கொதித்த படி... ஒழுங்கையில் பூவரசுக்குக் கீழ் நின்ற ரைக்ரரில் கிடத்தும் போது அவசரமாகப் பரமனின் பொக்கற்றுள் தடவினான். நன்றியின் பொருள்.

இருட்டுக்குள் எதுவும் தெரியவில்லை. பக்குவமாகத் தன்ர பொக்கற்றுக்குள் வைத்தான். ஒழுங்கையால் திருப்பி ஊருக்குள் வர 'டோச்'சைப் பிடித்துப் பரமனின் கடிதத்தை எடுத்துப் பார்த்தான். மடிப்புகளில் இரத்தம் ஊறி... நன்றியைக் குருதியாக நனைத்திருந்தான்.

'ரைக்ரர்' போய்க் கொண்டிருந்தது. அடுத்தநாள் பல வேலைகளினூடும் பரமனின் கடிதத்தையும், பரமன் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு இவன் அனுப்பியிருந்தான். பரமன் எழுதியவற்றுடன், அதன் கீழ் 'உங்களுக்கான நன்றியைப் பரமன் தனது குருதியாலும் உயிராலும் எழுதியுள்ளான். என்னை உங்களுக்குத் தெரியாவிட்டாலும் அவனது தோழன். அவனது உணர்வுடன் செயற்படுவர்களில் ஒருவன். எழுதிய கடிதத்தை பரமன் அனுப்ப முதலே ஒரு சண்டையின் போது அவனை இழந்து போனோம். அவனுடைய நினைவுகளுடன் நாங்கள் முன்னேறுவோம். பரமனுடன் முடியாமல், உங்களின் அன்பும், ஆதரிப்பும் எங்களுடனும் தொடரவேண்டும், துணையிருக்க வேண்டும்...' என்று எழுதி தனது பெயரையும் குறிப்பிட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆன்மீகம் ஆண்மீகமில்லாமல் பெண்மீகமாக வளரவேண்டும்

**- 'லெட்சுமி பங்காரு அடிகளார்' -**

ஆன்மீகத் துறையில் பெண்களுக்கும் சமத்துவம் வேண்டும் என்கிறார் லெட்சுமி பங்காரு அடிகளார். சமீபத்தில் இது சம்பந்தமாக இவரால் வெளியிட்ட இச் செய்திக்கு சில மதவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால் இவர்களுக்கும் மற்றும் இவர்களைப்போன்ற ஏனையோருக்குமாக லெட்சுமி பங்காரு அடிகளார் கீழ்க் கண்டவாறு விளக்கமளிக்கிறார். அதாவது ஆன்மீகத்தில் பெண்களும் பூரணமாக கலந்துகொள்வதை ஏன் இவர்கள் மறுக்கிறார்களோ தெரியவில்லை. சாதாரணமாக ஒரு கோயிலுக்குள் விலங்குகள் தொடக்கம் நுழைகின்றன. ஆனால் ஒரு பெண் மட்டும் இது சம்பந்தமான பணிகளில் ஈடுபடுவதை அழுக்காக நினைக்கிறார்கள்.

இது முற்றிலும் தவறான ஒன்று. என்னைக் கேட்டால் வேதகாலம்தொட்டே பெண்கள் தீண்டத் தகாதவர்களாகவே ஆன்மீகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டிருப்பதை அடியோடு வெறுக்கிறேன். இது உண்மையிலேயே ஆன்மீகத்தில் காணப்படுகின்ற ஒரு அநீதியான செயல். இந்த நிலை மாறவேண்டும். மேல் மருத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் உள்ளதைப்போல அக் கோயில் சம்பந்தமான அனைத்து விடயங்களையும் பெண்களே எவ்வாறு நடாத்திக் கொள்ளுகிறார்களோ அதே போலவே நூற்றுக்கு நூறு மற்றக் கோயில்களிலும் பெண்களிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாது ஐயப்பன் கோவிலுக்கு மாலைபோட வருவோரைக்கூட அவர்கள் வயதுப் பெண்களா என்று பொலிசார் சோதனையிடுகிறார்கள். இந்த அசிங்கமான செயல்கள்கூட மாற்றப்பட வேண்டும்.

அதாவது ஆன்மீகத்தில் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் தாம் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்துக்காட்ட வேண்டும். அப்போதுதான் ஆன்மீகம் என்பது ஆண்மீகத்தின் பிடியில் நின்று நீங்கி பெண்மீகமாக வளரமுடியும் என்கிறார் இவர்.

# நலம் பெறுவோம்

பொதுவாக பெண்களின் வாழ்க்கைக் காலத்தில் எவ்வாறு பூப்பெய்துவது சாதாரணமோ அதுபோலத்தான் சூல்பை ஓய்வும் (மாதவிடாய் நிறுத்தம்) சாதாரண நிகழ்வே. ஆனால் இக் காலகட்டத்தின்போது பெண்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.

அதாவது சூற்பையில் உண்டாகும் முக்கியமான ஹார்மோன்களில் ஒன்றான ஈஸ்ட்ரோஜன் சூற்பையில் உற்பத்தியாவது குறையும் பொழுதே இந் நிகழ்வு நிகழ்கிறது. இந்நிகழ்வு ஏற்படும் பொழுது உடல்நிலை மட்டுமன்றி மனதளவிலும் கூட பல மாற்றங்கள் இடம்பெறுகின்றன.

இதை பலர் பெரிதாகக் கவனிப்பதில்லை. ஆனால் இவ்வாறான காலங்களில் வைத்தியர்களின் அணுகுமுறைகளை நாடினால் அதற்கான வைத்தியத்தைப் பெறமுடியும். உதாரணமாக மாதவிடாய் நிறுத்தம் என்பது உடனேயே இடம்பெறாது. சிலருக்கு அதிகப்படியான இரத்தப் போக்குடனும், சிலருக்கு சிறிதளவிலான இரத்தக்கசிவுடனும் கூட மெல்ல மெல்ல மாதவிடாய் வருவது நிறுத்தப்படும்.

இக்காலத்தின்போது அடிக்கடி மயக்கம், கோபம், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, தூக்கமின்மை, முகம் எரிச்சல், மனக் கசப்பு, மூட்டில் வலி, உடலில் ஊசி குத்துவதுபோன்ற உணர்வு. உடலுறவுகொள்ள முடியாத நிலை போன்ற உபாதைகள் உடலில் தோன்ற ஆரம்பிக்கும். ஆகவே இதற்கான விசேட வைத்திய முறைகளை கையாண்டு கொண்டால் இத்தகைய உடல் நோயால் தொடர்ந்தும் அவதிப் படுவதைத் தவிர்க்க முடியும்.

அத்தோடு சூற்பை ஓய்விற்குப் பிறகு எலும்புகளில் கூட பலம் குன்றிப்போகும். ஏனெனில் எலும்பிலுள்ள சுண்ணாம்புச் சத்து இத்தொழிற்பாட்டு நிறுத்தத்தின்பின் சிறிதளவு வீதத்தில் எலும்பைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும். இதனால் எலும்பு மிகவும் நொய்தலாக சிறிது நோவடைந்தாலும் முறிவடையக்கூடியதாக இருக்கும். ஆகவே இவ்வாறான காலப் பகுதிகளில் மேற்சொன்ன உடல் உபாதைகளுக்கு ஆளாகிக்கொள்வோர் நிச்சயம் வைத்தியரின் உதவியை நாடினால், விரைவில் உடலோ மனமோ சோர்வடைந்து குன்றிப்போதல் அடுத்து விரைவில் முதுமை அடைதல் போன்றவற்றில் இருந்து நிவாரணி பெறலாம்.

# அமெரிக்க பத்திரிகைகளை ஆக்கிரமிக்கப்போகும் 'செல்சியா கிளின்டன்'

கடந்த சில மாதங்களின் முன்னர் அமெரிக்க மக்கள் மத்தியில் ஏன் அங்குள்ள பத்திரிகைகள் செய்தி ஸ்தாபனங்களில் கூட முன்னுரிமை கொடுக்கப்பட்டு வெளியான சர்ச்சைக்குரிய விடயம் பில் கிளின்டன் பெயரில் வெளியான பாலியல் குற்றச்சாட்டுகள்தான். ஆனால் அமெரிக்க அதிபராலேயே தன் குற்றங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதும் அவர் மனைவியே அவரை மன்னித்துக்கொண்டதாக வெளியில் உள்ள மக்கள்முன் நேரடியாக கூறியதையடுத்து, அந்தக் குறிப்பிட்டவிடயமே தற்பொழுது எல்லோரும் எதிர்பார்த்தளவு பெரிதாகாமல் மறைந்துவிட்டது. ஆனால் மீண்டும்



வெள்ளை மாளிகையைச் சூழ பத்திரிகைகள் நெருங்குமோ என திரு.திருமதி கிளின்டன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் தம் மகள் செல்சியா பற்றிய சில செய்திகள் தற்போது பரவலாக எல்லோரிடத்தும் 'கதைக்கருவாகி' இருப்பதே இதற்குக் காரணம். கிளின்டன் ஹெலரி தம்பதிகளின் ஒரே மகளான செல்சியா ஸ்டான் ஃபோர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சாதாரண ஒரு நீச்சல் வீரரை காதலிப்பதாக தற்பொழுது அறிவித்துள்ளதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

இதைப் பற்றி வெள்ளை மாளிகையின் அதிகாரபூர்வ பேச்சாளரான மைக் மெக்கார்த்தி இவ் விடயத்தை அதிபர் கிளின்டன் ஒப்புக்கொண்டார் என்று தெரிவித்துள்ளார். ஆனால் இது வரை கிளின்டனால் இது பற்றிய செய்தி உண்மையென அறிவிக்கப்படவில்லை.

# முக நகை அழகு !?

அண்மையில் உலக அழகியாகத் தெரிவான இஸ்ரேல் நாட்டவரான லினார் அபார்ஜில் தான் உலக அழகியாகத் தெரிவானதையிட்டு மகிழ்ந்தாலும்கூட அந்த மகிழ்ச்சியை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள முடியாதவராகவே இருக்கிறார்.

ஆம்! சீஷெல்ஸ் தீவில் உலக அழகுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு முன் இத்தாலியில் இது சம்பந்தமான வேறொரு போட்டியில் கலந்துகொண்டார் லினார். அப்போட்டி முடிந்ததும் ரோம் நகரிலுள்ள தன் தாயிடம் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். அங்கு செல்லும் வழியில்தான் அவரை அழைத்துச் சென்ற பயண முகவர் இவரை வேறொரு இடத்திற்கு இடம் மாற்றி அழைத்துச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.




இது நடந்ததும் உடனே பொலிசிடம் புகார் செய்த லினார் அபார்ஜில். சம்பந்தப்பட்ட நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டும் கூட தன்னுடைய உலக அழகிப்போட்டி முடியும்வரை இவ்விடயத்தை வெளியே தெரியப்படுத்தவில்லை. ஆனால் தற்பொழுது இவ்விடயம் தொடர்பாக தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெற்று வருகிறன.

இந்த நிகழ்ச்சியை நாம் நோக்கும்போது மனிதர் 21ம் நூற்றாண்டை நெருங்கப்போகும் இக் காலத்திற்கூட இன்னும் பெண்களை காமப்பொருளாகவே பார்க்கிறார்கள் என்பது வருத்தத்திற்குரியதொன்றாகவே இருக்கிறது.

# ஆறு தடவை மிஸ் ஒலிம்பியா பட்டம் பெற்ற கொறி எவர்சன்

சாதாரணமாக உடம்பைக் கெட்டிப்படுத்தும் போட்டிகளில் ஆண்களே அதிக ஆர்வத்துடன் ஈடுபடுவர்.

ஆனால் தற்பொழுது இந் நிலையை பெண்களும் மெல்ல மெல்ல மாற்றி வருகிறார்கள். தொடர்ந்து ஆறாவது தடவையாக மிஸ் ஒலிம்பியா என்ற பட்டத்தை வென்ற கொறி எவர்சன் என்ற பெண்ணை நாம் நோக்கினாலே மேற்



சொன்ன விடயத்தை நிரூபிக்க முடியும்.

ஆம் 1984 தொடக்கம் 1989 வரை தொடர்ச்சியாக இப் போட்டியில் பங்குபற்றி மிஸ் ஒலிம்பியா பட்டத்தை தொடர்ந்து 6 வருடங்கள் தனதாக்கி வைத்துள்ளார் இப் பெண்மணி.


# வெளிவந்துவிட்டன












தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியகத்தின் வெளியீட்டுப் பிரிவினால் பொங்கல் வாழ்த்து மடல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலதிகத் தொடர்புகளுக்கு: 01 43 58 11 42


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ் கோட்டை 107 நாட்கள் 14

**யாழ். கோட்டை இரண்டாம் ஈழப்போரின்போது (1990) விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளானது. 3 மாத முற்றுகையின் பின்னர் கோட்டை விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டது. இம் முற்றுகைக் காலத்தில் கோட்டையினுள் அகப்பட்டுக்கொண்ட படையினரில் தமிழர்களும் சிலர் அடங்குவர். அவர்களில் பொலிசாராகக் கடமைபுரிந்த ரி.என்.நடா அவர்கள் முற்றுகைக்குள் இருந்தவேளை ஏற்பட்ட தனது அனுபவங்களை ஈழமுரசிற்கு வழங்குகின்றார். இதன் இறுதிப் பகுதி இதுவாகும்.**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

மண்டைதீவில் இருந்து தாக்குதல் நடக்கத் தொடங்கியது. விமானப்படையினர் தாக்குதலை நடாத்தியபடி யாரும் சரணடைய வேண்டாம், விமான மூலமோ தரை வழியாகவோ இன்றிரவுக்குள் எல்லோரையும் மீட்டெடுப்போம் என உறுதியாக கூறிக் கொண்டிருந்தார்கள். அரசாங்கம் உண்மை நிலையை இப்பொழுதுதான் உணர்ந்துகொண்டது. படையினர் சரணடையப்போவதாக உறுதியாகத் தெரிவித்து விட்டதால் அரசாங்கம் இந்த இரவுக்குள் ஏதாவது முடிவு எடுத்தே தீரும் என்று எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

விமானப் படையினர் பறந்து கொண்டே கோட்டை அதிகாரியுடன் தொடர்புகளை பரிமாறிக் கொண்டிருந்தனர். பண்ணைக் கடலுடன் தொடர்புடைய கோட்டையின் மதிலை குண்டு வைத்து தகர்க்கும்படி கட்டளை வந்தது. சிப்பாய்கள் வேகமாகச் செயற்பட்டு மதிலினைக் குண்டு வைத்து தகர்த்தனர். அக்குண்டின் வெடிப்பால் ஒருவர் போய்வரக் கூடிய அளவிற்கு மதிலில் துவாரம் ஏற்பட்டது. கோட்டையில் இருந்த அனைத்து காயம்பட்ட, நோய்வாய்ப்பட்டிருந்த படையினரும் அம் மதிலுக்கு அருகில் கொண்டுவந்து வெளியேறும்படி கட்டளை வரும்வரை காத்துக் கொண்டு நின்றோம்.



370 வருடகால ஆக்கிரமிப்புச் சின்னம் அழிக்கப்பட்டது

இதேவேளை பண்ணைக் கடலில் தாக்குதல் பலமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. படகுகளின் ஓசையும் குண்டுகளின் சத்தங்களுக்கு இடையே தெளிவாகக் கேட்டுக்கொண்டிருந்தது. சுமார் அரைமணி நேரமாக காத்து நின்றிருப்போம். குண்டு வைத்து தகர்த்த பாதையின் ஊடாக இரு படையினர் வேகமாக நுழைந்தனர்.

உள்ளே வந்தவர்களில் ஒருவர் இராணுவ வைத்தியர். வேகமாக எல்லோருக்கும் ஊசி மூலம் மருந்தொன்றைச் செலுத்தினார். என்ன நடந்ததோ தெரியவில்லை, இயலாமல் நின்றவர்கள்கூட தைரியமாக நடக்க ஆரம்பித்தார்கள். எனக்குக் கூட உடம்பில் ஒரு புதிய தெம்பு வந்ததுபோல் இருந்தது. எல்லோரும் கடலுக்கு ஓடிச் சென்று படகுகளில் ஏறுவதற்கு தயார் நிலைக்கு வந்துவிட்டதை விமானப்படையினர் மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

இயந்திரப் படகுகள் கோட்டைக்கு அருகில் வந்து வந்து சென்று கொண்டிருந்தன. படகு அருகில் வரும்போது குறிப்பிட்ட தொகை படையினர் ஓடிச் சென்று ஏற வேண்டும், என ஒழுங்கமைக்கப்பட்டு நின்றனர். படகுகள் அருகில் வரும்போது கொஞ்சக் கொஞ்சப்பேராக ஓடிச்சென்று படகுகளில் ஏறத் தொடங்கினோம். அதேநேரம் ஓடிச்சென்று படகுகளில் ஏறும் படையினரைநோக்கி கடலிலும் புலிகளின் தாக்குதல் உக்கிரமாக இருந்தது. படகுகளைச் சுற்றி பாதுகாப்புச் செய்யப்பட்ட மண் மூடைகள் புலிகளின் தாக்குதல்களினால் பிய்த்தெறியப்பட்டுக் கொண்டிருந்தன. பலமான தாக்குதலின் மத்தியில் நானிருந்த படகு இருளினை கிழித்துக் கொண்டு மண்டைதீவு கரையை அடைந்தது.

பாதுகாப்பாக மண்டைதீவை வந்தடைந்தவர்கள் உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டோம். அங்கு வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. சிகிச்சை அளித்து முடிந்ததும், எனது வேலையையும் தலை முழுகிவிட்டு மனைவி, பிள்ளையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் திரும்பி வந்து கொண்டிருந்தேன். சங்குப்பிட்டியில் வந்ததும் வள்ளத்திற்காக காத்து நிற்கின்றேன், வானில் குண்டு வீச்சு விமானங்கள் வட்டமடித்துக்கொண்டிருக்கின்றன.

(முற்றும்)

## ‘யாழ்கோட்டையை எவ்விதம் கைப்பற்றினோம்’ எனும் விடுதலைப் புலிகள் நூலில் இருந்து.....

மண்டைதீவை நோக்கியிருந்த கடற்கரை ஓரமாக சீமெந்திடப்பட்டு மூடி வைக்கப்பட்டிருந்த பின்கதவு அகற்றப்பட்டு (முன்னர் கழிவுகள் அகற்றப் பயன்பட்டது) தயாராக வைக்கப்பட்டிருந்தது.

### விடிந்தால் திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவுநாள்

எதிரி நினைத்திருந்ததைப் போலவே இரவு 12 மணியளவில் எமது தயாரிப்பான சக்தி வாய்ந்த எறிகணைகள் கோட்டைக்குள் வீசப்பட்டன. பாரிய சத்தத்துடன் கொத்தளங்கள் சரியும் வண்ணம் எறிகணைகள் வீழ்ந்துவெடித்த அதே சமயம் கோட்டையின் பின்புறவாசல் உடைக்கப்பட்டு தப்பி ஓடும் படலம் ஆரம்பமாகியது.

கோட்டைப்படை எடுப்பு முறியடிக்கப்பட்டவுடன் கோட்டைக்குள் சிக்கிக் கிடந்த இராணுவத்தினர் தப்பி ஓட நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும்.

எனவே கடற்கரையை நன்கு நோட்டமிட்டபடியே இருந்தோம். இராணுவத்தினர் ஒரு சில படகுகள் மூலம் தண்டுவலித்தும், கடலுக்கூடாக நடந்தும் தப்பி ஓடுவதைக் கண்டுவிட்டு கடலுக்குள் வைத்தே தாக்கத் தொடங்கினோம்.

இவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும், இவர்களைத் தப்பி ஓடவிடக் கூடாது என்று சத்தமிட்டபடி கடற்கரைப் பக்கம் ஓடிச்சென்று இராணுவத்தினரை வழிமறித்துத் தாக்கிய நகுலன் எதிரியின் குண்டுபட்டு வீழ்ந்தான்.

இன்னொரு முனையில் சிசிலியா, ரகு வீர மரணமடைகின்றார்கள்.

திசைமாறி கடலுக்கூடாக நடந்தும், நீந்தியும் சென்ற இராணுவத்தினரை மண்டைதீவிலிருந்த இராணுவத்தினர் அடையாள வெளிச்சங்களைப் பாச்சி தம்பக்கம் வருமாறு சைகை செய்தபடி இருந்தனர்.

இதுவரை காலமும் எமது மக்களை ஆக்கிரமித்து வைத்திருக்க உதவிய கூடாரங்களில் ஒன்றைக் கைவிட்டு, நடுநிசியில் எதிரி தப்பி ஓடிக்கொண்டிருந்தான்.

இம்மண்ணின் மைந்தர்களுள் எத்தனையோ பேரை விழுங்கி ஏப்பம் விட்ட யாழ்கோட்டை இருளில் வெறுமனே கிடந்தது.

370 வருட சரித்திரத்தில், ஒரு நாளுமே இல்லாதவாறு ஒரு பின்னிரவு, கோட்டை மனித சஞ்சாரம் அற்றுக்கிடந்தது.


26.09.90 விடியற்காலையில், எதிரி விதைத்த பொறி வெடிகளை அறுவடை செய்தபடி வீரர்கள் கோட்டைக்குள் புகுந்துகொண்டிருந்தார்கள்.

கோட்டையைச் சூழ முற்றுகையில் ஈடுபட்டிருந்த புலி வீரர்கள் கோட்டையை உற்று நோக்கியபடி இருந்தார்கள்.

கோட்டையைப் போலவே அவர்களுடைய முகங்களும் புதிய தோற்றத்துடன் காணப்படுகின்றன.

அவர்களுடைய பார்வைகள் ஆயிரம் கதைகளைக் கூறுகின்றன.

கோட்டை மீதிருந்த அவர்களது பார்வைகள் மெதுவாக மதிலடிவாரங்களை நோக்குகின்றன...



கோட்டையினுள் நுழையும் தமிழர் படை

அகழிகளை நோக்குகின்றன....

05.08.90 அன்று சுதந்திரத்தை மீட்கச் சென்ற வரிப்புலி உடைகள் சில ஆங்காங்கே கிடந்தன. அவற்றுடன், அடக்கு முறைக்கு வேலி போடச்சென்ற புலிகளின் எலும்புகளும் கிடந்தன.

காவல் அரண்கள் மீது ஏறி நடந்த புலிகள், அவற்றைச் சேகரிக்கின்றார்கள்.

சரியாக 10-48 மணிக்கு இது திலீபன் வீரமரண மெய்திய நேரம்-யாழ் மாவட்டத் தளபதி திரு பானு கோட்டை மீது புலிக்கொடி ஏற்றுகின்றார்.

கோட்டை வெற்றிச் செய்தியுடன், வீழ்ந்துவிட்ட புலிவீரர்களின் எலும்புகளும் மக்களிடம் சுமந்து செல்லப்படுகின்றன.

## கோட்டையில் புலிகளின் வீர காவியம்!
## விடுதலைப் போரில் ஒரு புதிய திருப்பம்



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

*வெகுவிரைவில் ஈழமுரசில்...*

## ‘மணலாறு ஒரு வீரவரலாறு’

**அந்நிய படைகளின் படைபலத்தினாலும், ஆயுத பலத்தினாலும் கால்பதிக்க முடியாமற்போன மணலாற்று மண்ணின் காவியங்களைச் சொல்லும் கதை.**

**மணலாற்று மண்ணில் கால்பதிக்க முனைந்த இராணுவங்களை ஓட ஓட விரட்டிய எங்கள் தேசப் புதல்வர்களின் வீரம்செறிந்த போராட்டத்தைச் சொல்லும் கதை.**

இந்திய, சிறீலங்கா படைகள் நடாத்திய பத்திற்கும் மேற்பட்ட பாரிய தாக்குதல்களை முறியடித்து இராணுவ வல்லுநர்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய மணலாற்று மண்ணின் வீர வரலாறு உங்கள் முன் தொடராக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது
ஜவ்னா இறைச்சிக்கடை

# ஜவ்னா இறைச்சிக்கடை

ஆடு, மாடு, கோழி இறைச்சி வகைகளையும், தினமும்
உயிர்க்கோழி வகைகளையும் மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்

திங்கட்கிழமைகளில் சபரியப்பன் மளிகை
நிறுவனத்தில் எல்லா இறைச்சி
வகைகளையும் ஓடர் செய்துகொள்ளலாம்

# Jaffna Boucherie

70, Rue Louis Blanc, 75010 Paris. M°: la Chapelle
Tel: 01 40 35 46 47

விசேட கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவுகள்

Pub



புதிய பழைய தொலைபேசிகள்
வாங்க — விற்க — திருத்த

# ஆர்த்தி ஸ்ரூடியோ

**15 RUE CAIL, 75010 PARIS.**
**M°: GARE DU NORD-LA CHAPELLE**
**Tel: 01 40 34 20 90**

**21.10.98 முதல் 05.11.98 வரை**
**விசேட விற்பனை**

| | | | |
|---|---|---|---|
| Ericsson 768 | 990 Frs | Samsung | 490 Frs |
| Ericsson 788 | 1790 Frs | Panasonic | 390 Frs |
| Ericsson 688 | 690 Frs | Nokia (6110) | 990 Frs |
| Bosch | 690 Frs | Motrala | 1 Frs |
| Matra | 490 Frs | | |

Pub



மார்கட புவசினியரில் மீண்டும் எமது

## மொழி பெயர்ப்புச் சேவை

**ஓ.பி.சி.எல்.**

தொடர்புகளுக்கு: M.N Kamalnathan / K. Thiagarajah
(மாலை 3 மணி முதல் 6 மணி வரை)
28 Rue labat, 75018 Paris.
M°: Marcadet Poissionniers - Tel: 06 07 31 51 90



## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி:



தொலைபேசி: 0148050214
0613342518
0607348051
0148385825



சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)




இந்தியா 45 நிமிடம்
பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 45 நிமிடம் | பிரித்தானியா | 150 நிமிடம் |
| கனடா | 150 நிமிடம் | அமெரிக்கா | 150 நிமிடம் |
| தாய்லாந்து | 35 நிமிடம் | ஜேர்மனி | 120 நிமிடம் |
| ஹொங்கொங் | 100 நிமிடம் | அவுஸ்திரேலியா | 100 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் | பிலிப்பைன்ஸ் | 50 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் | அல்ஜீரியா | 70 நிமிடம் |
| சுவிஸ் | 120 நிமிடம் | மொரோக் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் | பெல்ஜியம் | 125 நிமிடம் |
| சிங்கப்பூர் | 55 நிமிடம் | பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 100 நிமிடம் |
| துனிசியா | 70 நிமிடம் | | |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

லண்டன், ஜேர்மனி, சுவிஸ் நாடுகளுடன் இத்தாலி, ஹொலண்ட்
ஆகிய நாடுகளிலும் எமது தொலைபேசி அட்டை சேவையில் உள்ளது.

சகல நாடுகளுக்குரிய
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

# GNANAM Telecom Center

195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.
Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14
M°: La Chapelle / Gare du Nord

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எத்தனை நாளைக்குத்தான் இந்த நாடுகள் வழியை நிம்மதியா வாழுறது. மடியிலை நெருப்பை கட்டிக்கொண்டிருந்த மாதிரி பிரச்சினை தீர்ந்தால் எப்ப திரும்பி ஓடலாம் எண்டு சிந்திக்கிற அளவுக்கு சனங்கள் இப்ப சிந்திச்சுக் கொண்டிருக்குதுகள். அதுசரி... வந்த புதுசிலை எல்லாம் சோக்காத்தான் இருந்தது. போகப்போகத்தானே சொந்த இருப்போட சுகம் தெரியுது. எலி வளையெண்டாலும் தனி வளை வேண்டாமோ? 'புறொப்பிளம் சோல்ட்'டானா இந்த சொகுசு வாழ்க்கை(?) பறிபோய் மூட்டை முடிச்சை கட்டவேண்டி வந்தாலும் வந்துடுமோ எண்டதும் சிலபேருக்கு பெரும் கவலையா இருக்குது. என்ன செய்யிறது.... ஆருடைய கவலை தீரப்போகுதெண்டதைத்தான் காலம் உணர்த்திக் கொண்டு வருகுதே.

காடு, மலை, ஆறெல்லாம் தாண்டித் தான் பெரும்பாலும் இந்த நாடுகள் வழியை அகதியளா நுழைஞ்சனாங்கள். அந்த சோகக் கதையளைச் சொல்லப்போனா நாள்க்கணக்கா சொல்லிக் கொண்டே இருக்கலாம். ஆளாளுக்குத்தான் ஒவ்வொரு விதம்விதமான அனுபவக் கதையளை வைச்சிருக்கிறோமே. உப்பிடி வந்ததுகளிலை எத்தனையோ இடைவழியளிலை விமானத்திலையும், கடலிலையும், ஆத்திலையும் எண்டு அழியுண்டு போட்டுதுகள். ஆனால் உதுகளை எல்லாம் தெரிஞ்சு கொண்டும் இன்னும்தான் அண்ணா... வா..., தம்பி... வா..., அக்காவா, தங்கச்சி... வா... எண்டு கூப்பிட்டுக் கொண்டிருக்கிறம். ஏழுமுறை தோற்றாப்பிறகும் விடாமுயற்சியா சிலந்தி வலை பின்னுறதை? பாத்து எட்டாவது தடவையா போர்தொடுத்து வெண்ட ஒரு அரசன் மாதிரி நாங்களும் எத்தனை முறை வந்து வந்து திருப்பி அனுப்பினாலும், அடாது மழை பெய்தாலும் விடாது குடைபிடிப்பம் எண்டு முயற்சி மட்டும் ஏதோ ஒரு வழியாலை செய்து கொண்டுதான் இருக்கிறம். அந்த 'ரூட்'டாலை அனுப்பிறது. சரிவராட்டி இந்த 'ரூட்'டாலை, அதுவும் இல்லாட்டி இன்னொரு 'ரூட்'டாலை எண்டு மாறிமாறி அனுப்பிறது. மாசக்கணக்கா சிலவேளை வருசக்கணக்கா இழுபட்டு வந்து சேருங்கள். உப்பிடி இழுபடுறதாலை சிலவேளை விமானம் ஏறேக்கை ஒருத்தரா ஏறியிருந்தாலும் வந்திறங்கேக்கை ரெண்டுபேரா, மூண்டுபேராயும் வந்து இறங்குவினம். இங்கை அவையளின்ரை வரவை எதிர்பார்த்து காத்திருக்கிறவைக்கு 'நாமம்'தான். ஏஜென்சி எண்டு நடாத்திறவை அவையளுக்கு வழியிலையே வாழ்க்கை(யை) கொ(கெ)டுத்துடுவினம். உந்த 'ஏஜென்சி'மாருடைய திருவிளையாடல்கள் எத்தனையோ பயத்தினாலையும், மிரட்டலினாலையும் மறைக்கப்பட்டு போனாலும் சிலதுகள் வெளிவராமல் இல்லை. அடையாளம் தெரியாத நாடுகள் வழியை கொண்ட வைச்சு, இவையள் பண்ணுற கொடுமையான வெறியாட்டங்களாலை பாதிக்கப்பட்டவையளை பற்றி எத்தனையோ கதையள் வந்து கொண்டுதானிருக்குது.

# நாய் கடிக்கும் கவனம்

**எங்கடை இனமாய் இருந்து கொண்டு 'ஏஜென்சி' நடத்திறம் எண்ட பேரோடை? தங்களைத் தட்டிக்கேக்க யாருமில்லை எண்ட துணிவிலை? பூனையில்லா வீட்டுக்கு எலிக்காவடி எடுக்கும் இந்த காமுக வல்லூறுகள் நடாத்திற வெறியாட்டங்களை ஆர் அடையாளம் காட்டப்போறது?**

இப்பிடித்தான் அண்மையிலை ஒரு சம்பவம். தனக்கு பேசின பிள்ளையொண்டை புருசன்காரர் வெளிநாட்டுக்கு அழைச்சிருக்கிறார். வழக்கம்போலை 'ஏஜென்சி'காரர் பாங்கொக், சிங்கப்பூர், மொஸ்கோ எண்டொரு நாட்டுக்கு கொண்டந்து இறக்கிப் போட்டார். இவ்வளவும் லேசான காரியம் தான். எனித்தானே பெரும் போராட்டங்களை தாண்டி அவையவையள் போய்ச்சேர வேண்டிய நாடுகளுக்கு போகவேணும். ஆனால் அதுக்கு முதல் அங்கை தங்கி நிற்கிற காலங்களிலை 'ஏஜென்சி'காரர் எங்கட பொம்பிளைப் பிள்ளையளைப் படுத்திற பாட்டை வார்த்தையளிலை சொல்ல முடியாது பாருங்கோ. பெடியள் தரவழியெண்டா சந்தர்ப்பம் கிடைக்கிற போதெல்லாம் அனுப்பி வைச்சிடுவினம். பொம்பிளைப் பிள்ளையள் எண்டால் அவையளின்ரை ஆசையளுக்கு தீனியான பின்னாலைதான் அனுப்பி வைக்க முயற்சியே செய்வினமாம். இப்பிடி எத்தனையோ அந்த கழுககளின்ரை தீனிக்கு இரையாகி சீரழிக்கப்பட்டு அழிஞ்சும் போயிருக்குதுகள். சிலதுகள் அதுகளோடையே வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு, குடும்பங்களையும் உறவுகளையும் இழந்துபோய் நிக்குதுகள். அவையளின்ரை வழிக்கு வராதவையை வருசக்கணக்கா வைச்சு இழுத்தடிச்சு வாழ்க்கையே வெறுத்து, மனம் நொந்துபோன நிலையிலைதான் அனுப்பி வைப்பினமாம். அதுவும் இங்கினை இருக்கிறவை 'ஏஜென்சி'யை மாத்தப்போறம் எண்டு கொடுக்கிற ஆய்க்கினையளாலை தானாம்.

இப்பிடித்தான் அந்த பிள்ளையை ஒரு (ஏஜென்சி) மிருகமொண்டு அலங்கோலப்படுத்த நினைச்சிருக்கு. அதுக்கு அந்த பிள்ளை சம்மதிக்கேலை எண்டவுடனை வல்லுறவுக்கு உட்படுத்திற அளவுக்கு போயிருக்குது! தெரியாத நாடு, புரியாத மொழி ஆரிட்டை போய் சொல்லுறது? பொறுமையா இங்கை வந்து சேந்த பின்னாலை நடந்த உண்மையை புருசனிட்டை சொல்லிப்போட்டு தன்ரை வாழ்க்கையை முடிக்கிறதுக்கு தயாரானபோதுதான் புருசன் தடுத்து நிறுத்தி, இப்ப இணைஞ்சு வாழுகிறார். உப்பிடியான கழுகுகளுக்கு மத்தியிலை இப்பிடியான இளைஞர்கள் இருக்கிறது மனசுக்கு எப்பன் நிம்மதியைத்தான் தருகுது.

கடிநாய் வளக்கிறவை வீட்டுப்படலையிலை 'நாய் கடிக்கும் கவனம்' எண்டு எழுதி தொங்க விடுறவை. அப்பிடிப் போட்டிருந்தால் ஒண்டு - உள்ளுக்கை வரவேண்டாம், இல்லாட்டி பாதுகாப்போட வாருங்கள் எண்டுதான் அர்த்தம். உப்பிடியான 'ஏஜென்சி'மார் இருக்கிற இடங்களிலையும் இப்பிடியொரு பலகையை மாட்டித்தான் வைக்க வேணும். நாட்டிலைதான் அந்நியப்படையள் ஆறுவயசு குழந்தைப் பிள்ளையிலை இருந்து வயசுபோனவை வரைக்கும் வயது வேறுபாடின்றி வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலையளும் செய்து கொண்டிருக்கிறாங்கள் எண்டா, எங்கடை இனமாய் இருந்து கொண்டு 'ஏஜென்சி' நடத்திறம் எண்ட பேரோடை? தங்களைத் தட்டிக்கேக்க யாருமில்லை எண்ட துணிவிலை? பூனையில்லா வீட்டுக்கு எலிக்காவடி எடுக்கும் இந்த காமுக வல்லூறுகள் நடாத்திற வெறியாட்டங்களை ஆர் அடையாளம் காட்டப்போறது?

எங்கட சமுதாயத்தை சீரழிக்க எங்களுக்குள்ளேயே ஊடுருவி வளரும் இந்த 'விஷச் செடியள் சமூகத்தின் முன் கட்டாயம் துகிலுரியப்பட்டு அழிக்கப்பட்டே ஆகவேணும்.


**அருமைத்தம்பி**

# நினைவஞ்சலி

**8ம் ஆண்டு**
வீரவேங்கை றோய்
**சிற்றம்பலம் மகேந்திரராஜா**
*(மயிலிட்டி)*
**வீரமரணம்: 31.12.1990**



**5ம் ஆண்டு**
வீரவேங்கை கலைஞன் (ரகீம்)
**சுப்பிரமணியம் சத்தியசீலன்**
*(மயிலிட்டி)*
**வீரமரணம்: 11.11.1993**



**எம் தானைத் தலைவன் வழிகாட்டலிலே**
**படை தகர்க்க சென்ற அண்ணன் - உன் வழியை**
**தம்பி இவன் தொடர்ந்தான்.**
**மாளவில்லை நீங்கள்**
**மறத்தமிழர் எம் இதயங்களில்**
**என்றென்றும் வாழுவீர்கள்.**
**வாழ்க உங்கள் புகழ்**
**மலர்க தமிழீழம்!!**

– தாய் சகோதரர்கள்

தகவல்: பிருந்தாபன் (லண்டன்)

Pub

# மரண அறிவித்தல்

**அன்னையின் மடியில்: 05.03.1966**



**மரணத்தின் பிடியில்: 02.01.1999**

## செல்வி சுதர்சினி சுப்பிரமணியம் (சுதா)

சுப்பிரமணியம் சுதர்சினி (சுதா) அவர்கள் 02.01.1999 அன்று பாரிசில் காலமானார்.

இவர் புங்குடுதீவைச் சேர்ந்த வே.க.சுப்பிரமணியம் கனகேஸ்வரி தம்பதிகளின் அன்புமகளும், சுகந்தினி (பாரிஸ்) சுதர்சன் (அப்பலோ இலங்கை), சுகிர்தன் (சுகி-கனடா), சுகுணாநந்தினி (சுகுணா-கனடா) சுகுணன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு.சார்ல்ஸ் ஜெய மோகன் யூலியன் அவர்களின் அன்பு மைத்துனியும், செல்வன் யானி, பிறிஸ்ரோன் ஆகியோரின் அன்புச் சித்தியும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் பழையமாணவியும் ஆவார். இவரது பூதவுடல் HOPITAL DE COCHIN - 12, Rue Mechain, 75014 Paris. (Mo: Saint Jacques) என்னும் இடத்தில் 02.01.1999 அன்று சனிக்கிழமை முதல் மாலை 1.30 மணி முதல் 3.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்படும்.

தகனக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இத் தகவல்களை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
தொலைபேசி: 0164663678
0615268652

*தகவல்:*
பெற்றோர் சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொனால்டோ மாதிரி ஏன் ஒரு தமிழன் வரக்கூடாது? - தீபன்

## புகலிட ஊற்றுக்கள்

**புலம்பெயர்ந்து வாழும் இளைய தலைமுறை, புகலிட நாடுகளின் பழக்கவழக்கங்களையும், கலைபண்பாடுகளையும் உள்வாங்கி, மாற்றங்கண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. புதிய பரிமாணங்களை உருவாக்கிவரும் இத் தலைமுறையினரை ஈழமுரசு அறிமுகம் செய்யவிழைகின்றது.**

சுவிஸ் - செங்காலன் பகுதியில் தனது பெற்றோர் சகோதரியுடன் வசித்து வரும் 13 வயதுச் சிறுவன் தீபன் உதைபந்தாட்டத்தில் சிறந்து விளங்குவதாகவும், வெளிநாடுகளுக்குச் சென்று விளையாடியிருப்பதாகவும் அறிந்து இப் பகுதிக்காக அவனை அணுகியபோது, அவன் 6 வயதிலிருந்து உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டுவருவதாக அவனது தாய் கூறியதைத் தொடர்ந்து தந்தை சொல்கின்றார்.

*'6 வயசிலிருந்து தொடர்ந்து இவன் FC-ST. GALLEN கழகத்தில் F-Junidren என்ற ஆரம்பப் பிரிவில இருந்து கொஞ்சங்கொஞ்சமாய்க் கூடிக்கூடி இப்ப U -13 /14 வயசில இருக்கிறார்.'*

'இவன் எப்பிடி இந்த விளையாட்டில இறங்கினான்?' கேள்விக்குத் தொடர்ந்து பதிலளித்த தாயார், *'இவர் (தனது கணவர்) ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில படிக்கேக்க Foot Ball விளையாட்டில நல்ல ஈடுபாடு இருந்தது. ஆனா இவற்றை தகப்பனுக்கு துப்பரவா விருப்பமில்லை. தாய்தான் சப்பாத்துக்குக் காசு குடுத்து விளையாட விடுறவ. இப்பிடி இருக்கேக்க இவையின்ர பள்ளிக்கூடம் யாழ்மாவட்டப் போட்டியளில வெற்றி எடுத்து வெளி மாவட்டங்களுக்கு போட்டிக்குப் போகவேண்டிவந்தது. அப்ப இவற்ர தகப்பன் விடமாட்டனெண்டு ஒரேயடியாச் சொல்லிப்போட்டார். அது இண்டைக்கும் இவருக்கு ஒரு குறையா பெரிய கவலை. அதால எங்கட மகன் தீபனாவது ஒரு நல்ல Foot Ball விளையாட்டுக்காறனா வரவேணுமெண்டு முயற்சிக்கிறம்.'*

காலச் சக்கரம் 30-40 வருடங்களுக்குப் பின்னால் ஓடி தெரிந்தது.

ஆரம்பித்த விதத்தை எடுத்துக் கூற முனைந்தபோது அமைதியாக இருந்த சிறுவன், சிறு சிரிப்புடன் ஆரம்பித்தான். *'நான் Foot Ball விளையாடுவன். ஆனா எப்பிடி கழகங்களுக்க சேருறது அதுக்கென்ன செய்யோணும்? எண்டு எங்கட வீட்டுக்காரரிட்ட கட்டட முதலாளி) அப்பா கேட்டார். அதுக்குப் பிறகு அவர் என்னையும் அப்பாவையும் நேரா FC-St. Gallen கழகத்திற்குக் கூட்டிக்கொண்டு போனார். கோச்சரிட்டை என்னைப் பற்றிச் சொல்ல அவர் சரி பாப்பம் எண்டு என்ன உடனேயே விளையாடவிட்டு ஓடவிட்டெல்லாம் பார்த்தார். பிறகு என்னட்ட சில கேள்வியளைக் கேட்டார். 'விளையாட விருப்பமா? பயிற்சிக்கு ஒழுங்காய் வருவியா?' இப்பிடி.... பிறகு எனக்கெண்டு ஒரு நேர அட்டவணையைத் தந்து கட்டாயமா ஒழுங்கா வரவேணுமெண்டு சொன்னார். அப்ப இதுக்குள்ள போனதுதான். இப்பவும் அதே Team இல தான் விளையாடுறனான்'* என்றவனிடம் போட்டிகளைப் பற்றிக் கேட்டேன்.



*'முதல் முதலில 17.08.91 அண்டைக்கு St.Gallen-Roschach க்கும் இடையில நடந்த மச்சில F-Junioren (சிறிய பிரிவு) Eggersriert என்ற இடத்திலதான், முன்னுக்கு கோலடிக்கிற வீரனா அடியெடுத்தன். அப்ப எனக்கு 6 வயசு 4 மாசம். முதல் மச்சில எனக்குப் பெரிய புளுகமோ, சந்தோஷமோ இருக்கேல்ல. ஏதோ சாதாரண ஒரு விளையாட்டு மாதிரித்தான் இருந்தது. இன்னுமொண்டு அதுகளப் பற்றி யோசிக்கிற வயசும் எனக்கு அப்ப இருக்கேல்ல எண்டு நினைக்கிறன். ஆனா இப்ப ஒவ்வொரு மச்சும் விளையாடேக்க வெல்ல வேணும், முன்னுக்கு வரவேணும், என்ர திறமைய காட்டவேணும், தமிழன் எண்ட முறையில எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்த பாவிச்சு தமிழரின்ர புகழ் உலகத்தில பறக்கவேணுமெண்டு ஆசைப்படுறன்.'*



'நீங்கள் எதிர்காலத்தில ஆரப் போல வர விரும்புறீங்கள்?' கேட்க, *'இப்ப இருக்கிற றொனால்டோ மாதிரியோ, கார்லோஸ் மாதிரியோ ஏன் புதிசா ஒரு தமிழனும் வரக்கூடாது?'* என் மீதே ஒரு கேள்விக்கணையைத் தொடுத்த இந்த சின்ன வீரனின் துடிப்பிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்யுது. ஒவ்வொரு துறைகளிலும் இப்போது பல தமிழர்கள் பிரகாசிக்கும்போது ஏன் உதைபந்தாட்டத்தில் ஒரு தமிழன் பிரகாசிக்கமுடியாது?

'சுவிசுக்குள்ள மட்டும்தான் விளையாடி இருக்கிறீங்களோ?'

*'இல்ல வெளிநாடுகளுக்கும் போய் விளையாடி இருக்கிறன். 93–94 இல ஜேர்மனியில Augsburg இல நடந்த Haunsteller Turnier போட்டியில விளையாடின்னான். 95 இல Nordstern Cup போட்டிக்காய் ஜேர்மனியின்ர Radolfzell எண்ட இடத்திற்குப் போய் விளையாடேக்க இறுதியாட்டத்தில Jahn Tuttingen அணியிட்ட 1:0 என்று கடைசி நேரத்தில தோத்திட்டம். 95 சித்திரை 28 இற்கும் வைகாசி 1 க்குமிடையில 3 நாளும் இத்தாலியில நடந்த Abano Terme போட்டில பங்கெடுத்தனான். முக்கியமாய் சொல்லுற தெண்டா 95ம் ஆண்டு ஆடி மாசம் 8ம், 9ம் திகதிகளில ஜேர்மனி Sulzberger இல நடந்த போட்டிகளில நாங்கள் நல்லாய் விளையாடி முதலாவது இடத்தை எடுத்துக்கொண்டு சந்தோஷமா திரும்பி வந்தனாங்கள். இதுகளைவிட முக்கிய வெளிநாட்டுப் பயணமாக சொல்லுற தெண்டா 94ம் ஆண்டில சுவிசில உள்ள கழகங்களுக்கிடையில Sanitas Kids Cup போட்டியில எங்கட Fc-St. Gallen அணி இறுதியாட்டத்தில Zug அணிய 4:1 எண்டு வெண்டதால எங்கள விசேசமா லீவுக்கும் பயிற்சிக்காக துருக்கிக்குக் கூட்டிக் கொண்டு போனவையள். இதைவிட நெதர்லாந்து ஒஸ்திரியா போயும் விளையாடி இருக்கிறன்.'* பயணப் பட்டியலைக் கேட்டபோது கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்ற பழமொழியே நினைவுக்கு வந்தது.

'நீங்கள் விளையாட்டுத் திடலில் எந்த நிலையில் விளையாடுகின்றீர்கள்?

*'நான் ஆரம்பத்தில முன்னுக்கு விளையாடினனான். இடையிலேயும் விளையாடினனான். ஆனா இப்ப பின்னுக்கு பாதுகாப்பு வீரனா விளையாடுறன். பின்னுக்கு விளையாடுற தெண்டால் சும்மா இல்ல. ஒராள் எந்தெந்த இடத்தில விளையாடுறதென்றத அவற்ரை நுட்பங்கள் விளையாடுற முறையளைப் பார்த்து கோச்சர்தான் முடிவெடுக்கிறது. பிறகு அதுக்கேற்ற மாதிரி பயிற்சி தருவினம். பின்னுக்குப் பாதுகாப்பு வேலை செய்யிறதெண்டால் தனிய பந்த தடுத்தால்மட்டும் போதாது. இது பிளையள் விடாம சரியான கவனமா இருக்கவேண்டிய இடம். நான் பின்னுக்கு நிண்டு பிழைவிட்டால் அது எங்கட எதிர் அணிக்கு பனால்டி கிடைக்கிறதுக்கு வழிவிட்டிடும். நல்ல அனுபவமும் நிறையப் பயிற்சியும் வேணும்.'*




1994-ம் ஆண்டு வெளியான ஒரு நாட்காட்டியில்

அடித்த கோல்கள் பற்றிய விபரங்களை அறிய முற்பட்டபோது *'93–94 இல E1 இல விளையாடி 22 கோல்கள் போட்டனான். D1 இல விளையாடி 2 கோல்கள் போட்டனான்.*

E1 D1 பற்றி அவனது தந்தையார், *'வயதடிப்படையில ABCDE என்ற பிரிவுகள் இருக்கு. அதுக்குள்ளயும் திறமையின்ர அடிப்படையில 1234... எண்டு இருக்கு. 1 எப்பவுமே அந்தந்தப் பிரிவின்ர திறமான அணியாயிருக்கும். எங்கட தீபன் வயசுப்படி E1 இலதான் விளையாடுறது. ஆனா இவன் நல்லா விளையாடுறதால சில நேரங்களில D1 இலயும் விளையாட விட்டிருக்கினம்.'* என்று விளக்கிக் கூறுகின்றார்.

தொடர்ந்த மகன் *'94–95 காலப் பகுதியில E1 இற்கு விளையாடி 92 கோல்களும், D1 இற்கு விளையாடி ஒரு கோலும் போட்டனான். இதே 94–95 இல என்ரை E1 குழுவுக்கு தலைமையேற்றும் இருக்கிறன்.'* என்கின்றான்.

'சேந்து விளையாடேக்க சுவிஸ் பிள்ளையள் உங்கள வித்தியாசமா நினைக்காட்டிக்கும் தலைவரா இருக்கேக்க உங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கேல்லயோ?'

*'அப்பிடி எல்லாம் ஒண்டுமில்ல. விளையாடேக்க விளையாட்டுத்தான் குறியாயிருக்கும். சில நேரங்களில வேற விசயங்களில பிரச்சினையள் வந்தாலும் விளையாட்டில அதில்ல. என்னைப் பொறுத்தவரைக்கும் என்ரை அனுபவத்தில அப்பிடி ஒண்டுமில்ல.*

வளர்ச்சிக்கான காரணங்களை ஆராய முற்பட்டபோது தீபனிடமிருந்து பதில்வந்தது. *'எல்லாம் அப்பாதான். அப்பா நீங்களே சொல்லுங்கோ'* தொடர்ந்த தகப்பன் *'இவனை நான் கழகத்தில சேர்த்ததில இருந்து நானுமொரு விளையாட்டுக்காரன் மாதிரித்தான் எப்பவும் இவனோடையே பயிற்சிக்குப் போய் பாத்துக் கொண்டிருப்பன். இவனிண்டை சரி பிழையளை விளங்கப்படுத்திச் சொல்லுவன். 'மச்சுகளில' இவன் விளையாடுற பக்கமாகவே நிண்டு உற்சாகப்படுத்துவன். சில வேளையளில இவன் அடிபட்டு விழுந்தாக்கூட என்ரை உணர்வுவிடாது. எலும்பு நோவப் பிறகு பாக்கலாம் விளையாடு எண்டு பெலத்துக்கத்துவன். விளையாட்டு முடிய நல்லா விளையாடினா கட்டிப் பிடித்துக் கொஞ்சிவிடுவன். பிழையள் விட்ட நேரமெல்லாம் சரியாப் பேசியிருக்கிறன்'* கூறியவர் *'பக்கத்தில உள்ளவையள் எப்பிடி விளையாடனும் எண்ட சில நுட்பங்கள தமிழில சொல்லி மற்றாக்களுக்கு விளங்காம 'அலுவலப் பாத்த' நேரங்களுமிருக்கு'* என்கின்றார்.

தனது தகப்பனார் ரட்னேஸ்வரன் தன்னுடன் வராத போட்டிகளைப் பற்றி தீபனிடம் கேட்டபோது *'நான் மச்சில கூடப் பிழையள் விடேக்க அப்பாக்குத் தெரியாமல் தப்பீட்டன் எண்டு நினைச்சாலும் வெற்றி கிடைச்ச சந்தோசப்படேக்க பங்கு போட பக்கத்தில அப்பா இல்லையெண்டு கவலைப்பட்ட நேரங்களுமிருக்கு.'*

தாயாரிடம் கேட்டபோது 'முக்கி

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)


### போராட்டம் பற்றி

*நான் ஈழத்து நிலமையில நேரடியாப் பார்க்காட்டிலும் அங்கயிருந்து வாற வீடியோக் கசட்டுகளில பாத்து அங்கத்த பிரச்சினையள கொஞ்சம் தெரிஞ்சிருக்கிறன். எங்கட மக்களுக்கு உரிமையளெல்லாம் கிடைச்சு சந்தோசமாய் வாழவேணுமெண்டு நினைக்கிறன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு: 16 - 12 - 1942



இறப்பு: 31 - 12 - 1998

## வைத்திய கலாநிதி
## ஆறுமுகம் சிவஞானமூர்த்தி
### (ஓமந்தை)

ஓமந்தை 'சுமதி தனியார் வைத்தியசாலை' உரிமையாளர் வைத்திய கலாநிதி சிவஞானமூர்த்தி அவர்கள், பிரான்சில் 31.12.1998 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், புங்குடுதீவைச் சேர்ந்த இளைப்பாறிய அஞ்சல் அதிபர் காலஞ்சென்ற ஆறுமுகம் – கனகம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னம்பலம், பொன்னம்மா [அச்சுவேலி] ஆகியோரின் அன்பு மருமகனும், வைத்தியகலாநிதி பூமணியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந், ஸ்ரீகரன், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கெஸ்ரன் ஸ்ரீராஜ், சசிகலா தவமகள் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்ற புஸ்பலீலாவதி, சிவபாதசுந்தரம் (U.K) காலஞ்சென்ற சுந்தரலிங்கம், நடேசுமூர்த்தி [இலங்கை], ராஜராஜேஸ்வரி [கனடா], கணேசமூர்த்தி [கனடா], சிறிராமமூர்த்தி (U.K), இலட்சுமணமூர்த்தி [இலங்கை], நாகநாதமூர்த்தி [சுவிஸ்], கிருஷ்ணமூர்த்தி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற சதாசிவம், கனகம்மா, காலஞ்சென்ற தங்கம்மா அன்னலட்சுமி, திருநாவுக்கரசு, பரமேஸ்வரி, மகேஸ்வரி, ரதிதேவி, சோதிஸ்வரி, மங்களேஸ்வரி, தவநிதி [சம்பியா], இராசமணி [இலங்கை], செல்லமணி [இலங்கை], காலஞ்சென்ற குருமணி, லீலாமணி [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

றொமேஷ்காந், சோனியா, சப்னா ஆகியோரின் அருமைத்தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் வியாழக்கிழமை [07.01.1999] காலை 8.30 மணிமுதல் 10 மணிவரை 2 றூமி து அபேயுல் லுமியர், 31300 துலூஸ் என்ற முகவரியில் இடம்பெற்று காலை 11.30 மணிக்கு கோர்ணபரியோ, தகனச் சாலையில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: *மனைவி, பிள்ளைகள்*
தொடர்புகட்கு: 0033561448517

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரோ..... ஈரோ... ஈரோ வந்தாச்சு

## 2002 செப்டம்பர் 3ம் திகதி

பாரிஸ் லாச்சப்பலின் தமிழ்க் கடைத்தெருவில் இருவரின் உரையாடல்......

'போனமாதச் சீட்டுக்கழிவு எவ்வளவு?'

'155 ஈரோ'

'அப்ப கழிவுக் காசு போக என்ர கட்டுக்காசில 200 ஈரோவை காசாயும் மிச்சத்தை செக்காயும் தாறன் சரியா?'

*– 2002 ஒக்டோபர் 12*

ஜேர்மனி — பின்லாந்து தமிழ் வீடுகளின் தொலைபேசி உரையாடல் ஒன்று

(ஜேர்மனியில் இருந்து) 'தம்பியின்ர பிறந்தநாளுக்கு நான் 300 ஈரோ உன்ரை பாங் எக்கவுண்டில போட்டிருக்கிறன் அக்கா! தம்பிக்கு ஏதாவது வேண்டிக்கொடு.'

*– 2002 ஒக்டோபர் ஈழமுரசு செய்தியொன்று*

ஒல்லாந்த நாட்டில் நடைபெற்ற விழா ஒன்றில் தமிழீழத் தேசிய பாதுகாப்பு நிதியாக 70,000 ஈரோக்கள் திரட்டப்பட்டுள்ளன.

என்ன விந்தை எல்லாநாடுகளிலும் ஒரே நாணய அலகு இது சாத்தியப்படுமா?

ஆம்... நிச்சயமாக!

1999 ஜனவரி 01ம் திகதி கிட்டத்தட்ட 300 மில்லியன் மக்களுக்கு புத்தாண்டுதினமாக மட்டுமல்ல தமது நாணயமாக ஈரோ வந்துவிட்ட தினமாகவும் அமைந்தது.

11 நாடுகளின் (ஜேர்மனி, பெல்ஜியம், ஒஸ்ரியா, ஒல்லாந்து, பின்லாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி, லக்ஷம்பேர்க், போர்த்துக்கல், ஸ்பெயின்) பல்வேறு நாணய அலகுகள் 1998 ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி நள்ளிரவின் பின்னர் புதிய ஈரோவில் கலந்து சங்கமமாகியுள்ளன.

ஈரோவின் தாள்களும், நாணயங்களும் உங்கள் கரங்களில் 2002ம் ஆண்டு முற்பகுதியிலேயே (ஐக்கியராச்சியம், டென்மார்க், சுவீடன் கிறீஸ் ஆகிய ஐரோப்பிய சமூக நாடுகள் விதிவிலக்கு) தவழும். அதுவரை தற்போது புளக்கத்திலுள்ள நாணயங்களே இருக்கும். ஆயினும் இப்போது நேரடியான காசு பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் இலத்திரனியல் வங்கி அட்டைகள் ஊடான கொடுக்கல்வாங்கல்களில் ஈரோ ஈடுபடுத்தப்படுகிறது.

'ஈரோ நாணயம் அமைதியான ஐரோப்பாவின் ஒரு அடையாளம்' இவ்வாறு ஈரோ பற்றி பெருமையுடன் கூறிய ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவரான டியுன்ஸ் பேர்க், ஈரோவின் பிறப்பினை முன்னிட்டு பறக்கவிடப்பட்ட நூற்றுக்கணக்கான நீலநில பலூன்களை ஈரோ நாடுகளின் நிதி அமைச்சர்களோடு பெருமையோடு பார்வையிடுகின்றார். சரி ஈரோ பிறந்துவிட்டது. அப்படியானால் உலகின் பொருளாதாரத்தில் தலைமை நாணயம் எனக் கருதப்படும் அமெரிக்க டொலருக்கு என்ன நடக்கும்?

உண்மையிலே ஈரோவின் பிறப்பு டொலருக்கு ஒரு வேண்டாத செய்திதான். இதுவரை உலகப் பொருளாதாரத்தில் 57 சதவீதமான ஒதுக்கீட்டுத்தொகை டொலரிலேயே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஈரோவின் பிறப்பு டொலர் கொண்டிருக்கும் ஆதிக்கத்தை குறைக்கப்போகின்றது என்கின்றனர். சுயாதீனமான பொருளாதார வல்லுநர்கள்.

ஆனால் அமெரிக்க சார்புநிலையாளர்களோ டொலர்தான் உலக நாணயங்களில் அரசனாக தொடர்ந்தும் இருக்கும் என தெரிவிக்கின்றார்கள்.

எல்லாம் சரி. அப்படியானால் ஐரோப்பிய சமூக நாடுகளான பிரிட்டன், டென்மார்க், சுவீடன் ஆகியவை ஈரோவில் இணையாதமை ஈரோவின் பகுதித் தோல்விதானே.....

இல்லை! ஈரோவில் இணையாதமை அந்த நாடுகள் செய்த பெரிய தவறு. குறிப்பாக பிரிட்டன் செய்தது மிகப்பெரிய தவறு என்கிறார், பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் எட்லாவேட் ஹீத் அவர்கள்.

ஆனால் ஈரோவின் பக்கம் சாய டென்மார்க் தயாராகி வருகிறது. பிரிட்டன், சுவீடன் ஆகியன ஆலோசிக்கின்றன. எதிர்காலத்தில் அவையும் ஈரோவில் குதித்துவிடும் என்கின்றனர் ஆய்வாளர்கள். இது நிச்சயமாக அமெரிக்க டொலருக்கு 'நல்ல' செய்தியே அல்ல.

அடடே... நீங்கள் கூட 'ஈரோ ...வந்தாச்சடி ரதிதேவியே' என்று முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டீர்களே.

சரி...சரி ஈரோவின் பெறுமதியை 11 நாடுகளின் நாணயங்களோடு சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| ஜேர்மன் மார்க் | – 1.96 |
| ஸ்பெயின் பெஸத்தா | – 166.39 |
| பிரான்ஸ் பிராங்க் | – 6.56 |
| இத்தாலிய லீரா | – 1936.27 |
| நெதர்லாந்து கில்டன் | – 2.20 |
| ஆஸ்திரியா சிலிங் | – 13.76 |
| போர்த்துக்கல் எஸ்குடோஸ் | – 200.48 |
| பின்லாந்து மார்க்கா | – 5.95 |
| அயர்லாந்து பவுண் | – 0.79 |
| பெல்ஜியம் பிராங்க் | – 40.34 |
| லக்ஸம்பேர்க் பிராங்க் | – 40.34 |

# பத்தும் பலதும்

## மொனிகா சுருட்டுக்கள்!

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் மொனிகா லெவின்ஸ்கி பாலியல் விவகாரத்தில் சுருட்டு மிகவும் பிரபல்யமாகி விட்டது. இதனையடுத்து கனடாவில் ஹொலிபக்ஸ் நகரில் உள்ள சுருட்டு விற்பனையாளர் ஒருவர் ஒரு குறித்த தொகை சுருட்டுக்களை விசேடமாகத் தயாரித்தார். இதற்கு அவர் வைத்த பெயர் 'மொனிகா விசேட சுருட்டுக்கள்' என்பதே. பெரும் வரவேற்பினை இச் சுருட்டுக்கள் பெற்றுக்கொண்டன. இவைகளின் விற்பனை திடீரென பெரிதாக அதிகரிக்கத் தொடங்கியது. ஆனாலும் அழகான ஒரு பெண்ணின் உருவம் சுரியாகிப் போகின்றதே என இச் சுருட்டைப் பிடித்தவர்களில் சிலர் கவலைப் பட்டார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.




## ஒரே மாதத்தில் இரு பௌர்ணமிகள் 84 ஆண்டுகளின் பின் மீண்டும்.....

ஒரு மாதத்தில் பௌர்ணமி நிலவு என்பது ஒருமுறைதான் வரும் என்பது நாமறிந்ததே. ஆனால் வான சாஸ்திரங்களின்படி 84 ஆண்டுகளுக்குப் பின் இவ்வருடம் இரண்டு மாதங்களில் இரண்டு முழு நிலவுகள் அதாவது இரண்டு பௌர்ணமிகள் ஒரு மாதத்திற்கு என்று இரண்டு மாதங்கள் அமையப்போகின்றன. அந்த வகையில் இந்தமாதம் இரண்டு பௌர்ணமிகளும் எதிர்வரும் மார்ச் மாதம் இரண்டு பௌர்ணமிகளும் தோன்றுகின்றன. ஆகையால் எதிர்வரும் மாதம் பௌர்ணமி கிடையாது. இதற்கு முன் 1915ம் ஆண்டு தான் இவ்வகையான இரண்டு முழு நிலவுகள் தோன்றின. அதன்பின் இவ்வருடம் தான் இந்த விசேடத்தைக்கொண்டுள்ளது என அமெரிக்க தென் கரோலினாவில் உள்ள கிரீன் வில்லியில் இருக்கும் பர்மன் பல்கலைக்கழக பேராசிரியர் கே. ஒட்டேவால் கூறினார்.

பூமியை சுற்றிவரும் சந்திரனின் சஞ்சார நாட்கள் பெப்ரவரி மாதத்தில் முழுமையடையாததே இந்த மாதத்தில் முழு நிலவு தோன்றுதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. 29.2 நாட்கள் முதல் 29.9 நாள்வரை சந்திரன் பூமியை சுற்றுகிறது. ஆக சராசரி 29.53 நாட்கள் எடுக்கிறது. ஒரு மாதத்தில 30 அல்லது 31 நாட்கள் இருக்கும்போது சந்திரனின் சஞ்சாரகாலம் முழு நிறைவுபெறுவதால் ஒரு மாதத்தில் ஒரு முறை பௌர்ணமி வந்துவிடுகிறது. இந்த பெப்ரவரி மாதம் முழு நிலவு இல்லாததுபோல் 1961ம் ஆண்டிலும் பெப்பரவரி மாதமும் பௌர்ணமி இருக்கவில்லை. அடுத்ததாக 2018ம் ஆண்டும் பெப்ரவரி மாதத்தில் பௌர்ணமி இருக்காதாம்.

## மூங்கில் விமானம்



இங்கே காணப்படுவது மிசேல் அபெடி என்னும் இளைஞன் தயாரித்துள்ள விமானம் ஒன்றே. இதனை Flyboo என அழைக்கப்படும் இவ் விமானம் 7.70 மீற்றர் நீளமானது. 230 கிலோகிராம் எடைகொண்ட இது முழுமையாக மூங்கிலினால் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பூனையின் விலை 210,000 பிராங்குகள்!



ஆச்சரியமாயிருக்கின்றதா! ஆசைக்கு ஒரு பூனை வாங்கி வளர்க்கலாம் என்றால் இவ்வளவு விலையா? ஆனால் உண்மைதான். இங்கே படத்தில் காணப்படுவது பெங்காலிய பூனை எனப்படும் ஒரு வகையைச் சேர்ந்த பூனையே. இவை சாதாரண பூனைகள் என்று எண்ணாதீர்கள். ஆசியாவின் காட்டுப்பூனை வகையினைச் சேர்ந்த ஒன்றிற்கும் ஆபிரிக்க சிறுத்தைப் புலி ஒன்றிற்கும் இடையே இனக் கலப்பின் மூலம் உருவாக்கப்பட்டவைதான் இவை. அமெரிக்காவில் விருத்தி செய்யப்பட்ட இவைகளில் இதுவரை 1200 பூனைகள் உலகெங்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

மிருக வைத்திய நிபுணர்கள் இந்தப் பூனைகளைப் பற்றிக் கூறுகையில் இவைகளை வீடுகளில் வளர்ப்பதென்பது மிகவும் கடினமானதென்றும், இவைகள் ஆபத்தானதென்றும், சிறுவர்கள் இப் பூனைகளால் தாக்கப்படலாம் என்றும் கூறியுள்ளனர்.

'அம்மா, பூனை எங்கள் நாயைச் சாப்பிடுகிறது' என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வீடு விற்பனைக்கு

இடம் Noisy Le Grand இரண்டு தனி அறைகொண்ட வீடு.

RER 5 நிமிடம்

தொடர்புகட்கு: 01 49 31 06 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலூஸ் நகரில் மாவீரர்நாள்

பிரான்சின் துலூஸ் மாநகரில் மாவீரர்நாள் கடந்த 29.11.1998 அன்று மிகவும் உணர்ச்சி பூர்வமாக அனுட்டிக்கப்பட்டது. மாவீரர்துயிலும் மாதிரி இல்லம் முன்னே ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு துலூஸ் வாழ்மக்கள் மட்டுமல்லாமல் மொந்தபான், அல்பி போன்ற இடங்களிலிருந்தும் தமிழ்மக்கள் வந்து மாவீரர்களுக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.

கலை நிகழ்ச்சிகள் 'மாவீரர் புகழ்பாடுவோம்' என்ற பாடலுக்கான நடனத்துடன் ஆரம்பமாகின. இக்கலை நிகழ்ச்சிகளை துலூஸ் அல்பி என்பவரும் பிரான்ஸ் நாட்டின் தென் பாகத்தில் வாழும் மக்களே முழுக்க முழுக்கத் தயாரித்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பாடலும், அபிநயமும் மாவீரர் நினைவுகளை ஆழப்பதியவைப்பனவாய் அமைந்திருந்தன.

பேச்சுக்கள், கவிதைகள், 'தங்க மாலைக் கழுத்துகளே கொஞ்சம் நில்லுங்கள்...' என்ற பாடலுக்கான அபிநயம் போன்றன வந்திருந்த அத்தனை நெஞ்சங்களையும் நெகிழ வைத்தது.

நிகழ்ச்சிகளை நிறைவு செய்யும் வகையிலே துலூஸ் தமிழ்க் கலை மன்றத்தினர் வழங்கிய 'தீர்வுப்பொதி' என்ற நாடகம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பாத்திரங்களை உயிரோட்டமாக அமைத்து நாடகத்தை எழுதி நடித்த அத்தனை கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

தேசவிடுதலை மீதும், தேசத்தின் விடுதலைக்காக தம் உயிரை ஈகம் செய்த மாவீரர்கள் மீதும் தமது அளவுகடந்த ஈடுபாட்டை இந்த மாவீரர்நாள் கலைநிகழ்ச்சிகள் மூலம் இப்பகுதி மக்கள் உறுதியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

*தொகுப்பு: ந.கோபிரமணா*

# 'கானக்குயில் 99'

## சிறந்த பாடகர்-அறிவிப்பாளர் தேர்வுகள்

சுவிற்சர்லாந்திலே இரண்டாவது தடவையாக பார்வையாளர்களின் தேர்வின் அடிப்படையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் 'கானக்குயில் 99' சிறந்த பாடகர்களுக்கான தேர்வும் 'சிறந்த அறிவிப்பாளர் 99' தேர்வும் ஒரேமேடையில் நடைபெறவுள்ளன.

இம்முறை 'கானக்குயில் 99' இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ளது. 16 வயதிற்குட்பட்டோர் ஆண் பெண் (இளம் 'கானக்குயில் 99') ஒரு பிரிவாகவும் 16 வயதிற்கு மேற்பட்டோர் ஆண் பெண். ஒருபிரிவாகவும் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடகர்களும் பாடகிகளும் அறிவிப்பாளர்களும் கீழ் உள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 28.02.99 இற்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்போட்டிக்கான விண்ணப்பப்படிவங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

SELLIAH RASAN
Boswisli Weg 10, 8180 Bulach (Zh)

மேலதிக தொடர்புகளுக்கு
**01/362 27 55 – 041/260 83 98**
**01/860 12 05**

# தமிழ்மணிப் புலவர் தேர்வு

## 1999 இற்கான விண்ணப்பங்கள் கோரல்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 1998ம் ஆண்டுக்கான தமிழ்மணிப்புலவர் பட்டத்திற்கான தேர்வு கடந்த 26, 27-ம் திகதிகளில் சுவிஸ் பேர்ன் நகரிலும் ஜேர்மனியில் ரெயின நகரிலும் நடைபெற்றது. இத் தேர்வில் மொத்தம் 26 தேர்வாளர்கள் பங்குபற்றினர். சென்னை மாணவர் மன்றம், மலேசியத் தமிழ் இலக்கியக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் 1965-ம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் இப்பாடத் தேர்வு, 1994ம் ஆண்டு முதல் ஐரோப்பாவிலும் இடம் பெற்று வருகின்றமை குறிப்படத்தக்கது.

இதேவேளை 1999ம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுச் செயலாளர் திரு. கே.ரி.கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

*வீ.ஆர். வரதராஜா*

# புகலிட நிகழ்வுகள்

## தமிழீழ நினைவோடு மிளிர்ந்த கைல்புரோன்

# தமிழாலய விழா

31.10.98 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கைல்புரோன் தமிழாலயவிழா அமைதி வணக்கத்துடன் ஆரம்பமானது. Rolland Hortling (பதில் நகரபிதா) அவர்களும் Hanspeter volz Grund Schule அதிபரும் மங்கல விளக்கேற்றினர். மாணவர்கள் தமிழாலய கீதம் இசைத்தனர். நிர்வாக உறுப்பினர் ந. யோகேந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

பேச்சுக்கள், கவிதைகள், அபிநயப்பாடல்கள், பரதநாட்டியங்கள் என்பன தமிழீழத்தை நினைவுபடுத்துவனவாக மக்கள் மனங்களை ஈர்த்துநின்றன.

வில்லிசை, நாடகம் என்பன சிறப்பாக அறிவூட்டும் அர்த்தங்களைக்கொண்டனவாக அமைந்து அவையோரின் ஆதரவைச் சுமந்து நின்றன. வீணையிசை மற்றும் பல நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கல்விப்பணிப் பொறுப்பாளரும், ஆசிரியருமான திரு.இரா நாகலிங்கம் தமதுரையிலே, தமிழாலயங்களின் நோக்கத்தையும், சேவையினையும் விரிவாக எடுத்துக் கூறினார். அடுத்ததாக உரையாற்றிய நகரபிதாவும், ஆசிரியரும் தாய்மொழி கற்றலின் சிறப்பினை எடுத்துக்கூறி தம்மை இவ்விழாவுக்கு அழைத்தமைக்கு நன்றி கூறினர். ஆசிரியர் கௌரவிப்பை திரு.இரா.நாகலிங்கமும் பரிசில்களை திரு.ஆ.விவேகானந்தனும் வழங்கிச் சிறப்பித்தனர். ஆசிரியை சுதர்சினி இராசலிங்கம் நன்றியுரை வழங்கினார்.

**தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இரண்டாவது தடவையாக**
**சுவிஸ் தழுவிய ரீதியில் நடாத்தும்**

**'கானக்குயில் 99'**

**மாபெரும் சிறந்த பாடகர்களுக்கான தேர்வும்**
**சிறந்த அறிவிப்பாளர் தேர்வும்**
**காலம்: 04.04.99 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணி**
**இடம்: Albisguetli மண்டபம் 8045 Zurich**




**எங்கும் கிடைக்கிறது**

**விரைவில்...**







*Marketed & Distributed by*
***Ayngaran Limited***
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சுப் புரட்சி 1789 - 1799

(சென்றவாரத் தொடர்ச்சி)

## நாட்டின் பொதுக் குழு

பொதுக் குழு, நாட்டின் எல்லாப் பிரதிநிதிகளும் கொண்ட மன்றம். இது 1674 முதல் கூட்டப்படவில்லை.

சேதியைப் படிக்கும் குருமார்கள் அழுகிறார்கள்— 'இது ஆனந்தக் கண்ணீர்' என்று தெரிவிக்கிறார்கள்.

மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்குகிறார்கள். மக்களுக்கு இச் சேதி பெரிய நம்பிக்கையைக் கொடுக்கிறது.

அழகர் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பும், மதிப்பும் பெருகுகின்றன. இப்பொதுக்குழு, தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும்.

இன்னல்களைக் குறைக்கும் என்று மனதார நம்புகின்றனர். மேலும், அரசர், மக்களிடம், தங்கள் குறைகளை மடல்களில் வரைந்து, தனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறார்.



பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ்

மக்கள் தங்கள் குறைகளை எழுத்தில் வடிக்கிறார்கள்.

(நாடு முழுவதிலும் எழுதப்பெற்ற 40,000 குறைகள் தாங்கிய மடல்கள் இன்றும் அரசிடம் உள்ளன. அவை, அக்காலத்திய மக்களின் உண்மையான சரித்திரச் சான்றுகளாக இன்றுந் திகழ்கின்றன.)

அவற்றில் இருந்து சில குறிப்புகள்.

'அரசே! நாங்கள் மிகவுந் துன்புறுகிறோம். வரிக்கொடுமை அதிகம். எதற்காகப் பணக்காரர்கள் வரி செலுத்துவதில்லை? அல்லது குறைந்த வரி செலுத்துகிறார்கள்? ஏன் ஏழைகள் அதிக வரி செலுத்துகிறார்கள்?'

'அரசே, நாட்டுக்கு ஒரு அரசியலமைப்பு வேண்டும்.'

'கொடுமைகளில் எல்லாம் பெருங்கொடுமை கிறித்துவ ஆண்டவர்கள் பற்றியது. அவர்கள் ஆடம்பர சோம்பேறி வாழ்வு நடத்துகிறார்கள். அவர்களிடங் குவிந்து கிடக்கும் செல்வம் மிக, மிக அதிகம். அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விதி விலக்குகள் அநியாயமானவை.'

'அரசே, நாங்கள் சாப்பாட்டில் பயன்படுத்தும் உப்பு மீதும் வரியா? இது அடுக்குமா?'

'நாங்கள் உணவென்று, தண்ணீரால் ஆன சூப்பைக் குடிக்கின்றோம். அதில் போட கறி வாங்கவோ, வெண்ணெய் வாங்கவோ எங்களிடம் வசதி இல்லை'.

'நாங்கள் தினந்தோறும் சாப்பாட்டுக்கே திண்டாடுகிறோம். இந்நிலையில், வருடத்தில் 10—15 நாட்கள் இலவசமாக, சாலைபோட எங்களைக் கட்டாயப்படுத்துவது முறையா?'

சரித்திர ஆசிரியர்கள், இக்குறைகள் அடங்கிய மடல்கள் பழைய ஆட்சி முறைக்குச் (Ancient Regime) சாவு மணி அடித்தன என்று நம்புகிறார்கள்.

1788 செப்டெம்பரில் பாராளுமன்றம் அரசர் முன் ஒரு கோரிக்கை வைக்கிறது. அதில் 1789-இல் கூட இருக்கும் பொதுக் குழுவை, 1614—இல் நடந்தது போலவே நடத்தவேண்டும் என்று கேட்கிறது.

என்ன நடந்தது 1614 இல்?

உதாரணமாக, பிரபுக்களுக்கு 100 உறுப்பினர்கள்,

குருமார்களுக்கு 100 உறுப்பினர்கள்,

மூன்றாவது வகுப்பினருக்கு 200 உறுப்பினர்கள் என்று வைத்துக்கொள்வோம். (1614-இல் நடந்த பொதுக் குழுவின் மொத்த உறுப்பினர் பற்றியோ, ஒவ்வொரு வகுப்பின் பிரதிநிதிகள் எண்ணிக்கை பற்றியோ விபரங்கள் இல்லை.)

வாக்கெடுப்பு நடந்தபோது, அனைத்து பிரபுக்களுக்கும் ஒரேவாக்கு, அனைத்துக் குருமார்களுக்கும் ஒரே வாக்கு, மிஞ்சிய அனைத்து மூன்றாம் வகுப்பினருக்கும் ஒரே வாக்கு என்ற அடிப்படையில் நடந்தேறியது.

பல முக்கிய பிரச்சினைகளில் முடிவு தேடியபோது, பிரபுக்கள்—குருமார்கள் ஒரு பக்கமும், 3-வது வகுப்பினர் எதிர்ப் பக்கமும் நின்றனர்.

1 + 1 = 2 வாக்குகள் எதிரே ஒரு வாக்கு இருந்ததால் பிரபுக்கள்—குருமார்கள் விருப்பங்கள் எல்லாம் ஏற்கப்பட்டன.

இந்தத் திட்டம் அநீதியானது. ஏன்?

நாட்டின் மக்கள் தொகையில் நூற்றுக்கு இருவர் கொண்ட பிரபுக்களுக்கும்-குருமார்களுக்கும், 100 + 100 = 200 இடங்கள்.

நாட்டின் நூறு மக்களில் 98 பேரைக் கொண்ட மூன்றாவது வகுப்புக்கும் 200 இடங்கள் என்பது முறை அற்றது.

இதையும்விட முறைகேடானது,

100 க்கு 1 வாக்கு (பிரபுக்கள்), 100 க்கு 1 வாக்கு (குருமார்கள்)

200-க்கும் 1 வாக்கு (3-ம் வகுப்பினர்) என்பது.

இந்த அநீதி முறையை மீண்டும் பாரிஸ் பாராளுமன்றம் கோருகிறது என்றதும் மூன்றாவது வகுப்பினரிடையே ஏமாற்றமும், எரிச்சலும் தோன்றுகின்றன.

இவர்கள் அரசர் முன் எதிர்க்கோரிக்கைகள் இரண்டை வைக்கின்றனர். தங்களுக்கு இதுவரை இருந்த பிரதிநிதிகளின் எண்ணிக்கையை இரட்டிக்க வேண்டும் என்பதும், 1614 இல் நடந்ததற்கு மாறாக, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு என்ற அடிப்படையில் வாக்கெடுக்க வேண்டும் என்பதும் இக்கோரிக்கைகள்.

அரசர், அவர்களது முதல் வேண்டுகோளை ஏற்கிறார், அவர்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை இரட்டிக்கிறது.

ஆனால், ஒவ்வொரு பிரதிநிதிக்கும் ஒரு வாக்கு என்ற கோரிக்கை பற்றி ஒரு முடிவும் எடுக்க மறுக்கிறார்.

மூன்றாவது வகுப்பினர் மத்தியில் ஏமாற்றமே நிலவுகிறது.

பிரபுக்களின் 285 பிரதிநிதிகளுக்கும் ஒட்டு மொத்தமாக ஒரு வாக்கு,

மூன்றாம் வகுப்பினரின் 300, (பின்னர் 621) பிரதிநிதிகளுக்கும் ஒரே வாக்கு என்றால் என்ன செய்ய முடியும்? என்ன பெறமுடியும்?

3-வது வகுப்புப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் புர்சுவாக்கள்.

அதிலும் சட்டம் பயின்றவர்கள்.

இவர்கள், முதல் இரு வகுப்பினரின் சதியை முறியடிப்பது எப்படி என்று சிந்திக்கின்றனர்.

3-ம் வகுப்பினரின் இரண்டாவது கோரிக்கை நியாயமானதே என்று சில பிரபுக்களும், சில குருமார்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

குறிப்பாக, சீயெஸ் (Sieyes) என்ற பாதிரியார்,

மூன்றாம் வகுப்பின் நிலையைச் சுருக்கமாக சித்தரிக்கிறார் மூன்று கேள்விகள், மூன்று பதில்கள் மூலம்.


'மூன்றாவது வகுப்பு என்றால் என்ன? —யாவும், 'அது இதுவரையில் அரசியலில் வகித்த பங்கு என்ன? —ஒன்றும் இல்லை.

'அது என்ன கேட்கிறது? —தனக்கும் ஒரு பங்கு கேட்கிறது.

இப்படி நாட்டில் பல கருத்துக்கள் வலம் வந்துகொண்டிருக்க, பொதுக்குழு கூடும்நாள் நெருங்குகிறது.

(தொடரும்)

# தென்னாசியாவின் அணுகுண்டு பரீட்சைகளும் - போட்டிகளும்



**பனிப்போர்க் காலத்தில் பிரதான இரு வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் மேற்கொண்ட அணுப் பரிசோதனைகளைப் பற்றி கடந்த இதழில் பார்த்தோம் இந்த இதழிலே ஏனைய மூன்று நாடுகளின் அணு பரிசோதனை பற்றிப் பார்க்கலாம்.**

அணு ஆயுதங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் பிரதான நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் தனது முதலாவது அணுப் பரிசோதனையை 1960ல் தொடங்கி இன்றுவரை 210 சோதனைகளை மொத்தமாக நடாத்தியுள்ளது.

1974ம் ஆண்டு பிரான்ஸ் அதிகூடிய சோதனைகளாக 10 அணுவெடிப்புக்களை நடாத்தியது. பிரான்சின் அணுச் சோதனைகளில் 17 அல்ஜீரியாவில் நடாத்தப்பட்டன. பிரான்ஸ் தனது இறுதிச் சோதனையை 1996-ம் ஆண்டு நிகழ்த்தியது. அடுத்ததாக ஐக்கிய ராச்சியத்தை எடுத்துக்கொண்டால் (பிரித்தானியா) மொத்தமாக 45 அணு வெடிப்புக்களை நடாத்தியுள்ளது. 1952ம் ஆண்டு முதலாவது அணுச் சோதனையூடாக தனது அணு ஆயுதத்துறைக்குள் புகுந்த பிரித்தானியா தனது நாட்டிலே அன்றி அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள தனது பரிசோதனைக் களங்களிலே அணு வெடிப்புக்களை நிகழ்த்தியது. அமெரிக்காவில் 24 நிலக்கீழ் அணு வெடிப்புக்களையும், அவுஸ்திரேலியாவில் 12 அணு வெடிப்புக்களையும் பிரித்தானியா நிகழ்த்தியது. 1991ம் ஆண்டு



பேராசிரியர் இல்குப்பிள்ளை

**1993ம் ஆண்டு தென்னாபிரிக்கா தான் இரகசியமாக 6 அணுக் குண்டுகளைத் தயாரித்ததாகவும் ஆனால் அவை அழிக்கப்பட்டதாகவும் அறிவித்தது. மேற்குலக நாடுகள் சில, தென்னாபிரிக்காவின் இந்த அறிவிப்பை சிறுபிள்ளைத் தனமானது எனக்கூட கருதின.**

தனது இறுதி அணுச் சோதனையை இது நிகழ்த்தியது. இவை இரண்டு நாடுகளையும் தவிர அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் சீனாவின் பரிசோதனைகளை நோக்கினால் 1964ம் ஆண்டு முதலாவது பரிசோதனையூடாக அணு ஆயுத துறைக்குள் பிரவேசித்த சீனா இன்றுவரை மொத்தமாக 45 பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் 23 நிலத்திற்கு மேலேயும் 22 சோதனைகள் நிலத்தின் கீழேயும் மேற்கொள்ளப்பட்டன. சீனாவின் பிரதான சோதனைக் களமாக 'லொப்னோர்' விளங்கியது. சீனாவின் அணுச் சோதனைகள் 1996-ம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானிய, சீனா ஆகிய நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட அணுப் பரிசோதனைகள் 98.2 வீதத்தை மொத்தமாகப் பிடித்துக்கொண்டன. அப்படியானால் மிகுதி 0.2 வீதமான சோதனைகளை யார் நடாத்தியதென்ற கேள்வியொன்று எழுமல்லவா? அதற்கான பதில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலேயே தங்கியுள்ளன. இவ் இரு நாடுகளும் 512 மெகா தொன் எடையுள்ள சோதனைகளை நடாத்தியுள்ளன.

1996-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா ஆகிய நாடுகள் அணுச்சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் தமது அணுச் சோதனைகளை முடிவுக்குக்கொண்டு வந்தன. இந்த அணுச்சோதனைத் தடை ஒப்பந்தமானது 1954ம் ஆண்டு முன்மொழியப்பட்டபோதிலும் அது நடைமுறைக்கு வருவதற்கு மிக நீண்ட காலம் எடுத்தது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர்கூட (1996-ம் ஆண்டு) சீனா சில அணுப் பரிசோதனைகளைச் செய்திருந்தது. அதாவது ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் இறுதி நேரம்வரை சீனா தனது அணுக் கனவிலேயே திளைத்திருந்தது. ஆனால் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இவ் ஒப்பந்தத்தில் இன்னும் கைச்சாத்திடவில்லை. அதனால்தான் 1998ம் ஆண்டு அணுப் பரிசோதனைகளை அவை நடாத்த முடிந்தது.

அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் ஏழு நாடுகளைத் தவிர அணு ஆயுதம் இன்னொரு நாட்டிடமும் உண்டென பலராலும் கருதப்படுகிறது. அந்தநாடு எது என்பது ஒன்றும் பெரிதான இரகசியமல்ல. இஸ்ரேல்தான் அந்நாடாகும். பல வருடங்களிற்கு முன்னரே இஸ்ரேல் தனது அணுப் பரிசோதனைகளை நாட்டிற்கு வெளியேயுள்ள இரகசிய சோதனைக் களத்தில் நிகழ்த்தியதாக சொல்லப்படுகிறது. ஆனாலும் இஸ்ரேல் இதுவரை உத்தியோக பூர்வமாக இது குறித்து எதுவும் சொல்லவில்லை. இஸ்ரேலின் கதை ஒருபுறமிருக்க தென்னாபிரிக்காநாடும் அணு ஆயுத கனவைக் கொண்டிருக்கும் ஒரு நாடென்பது மறுப்பதற்கில்லை. 1993ம் ஆண்டு தென்னாபிரிக்கா தான் இரகசியமாக 6 அணுக்குண்டுகளைத் தயாரித்ததாகவும் ஆனால் அவை அழிக்கப்பட்டதாகவும் அறிவித்தது. மேற்குலக நாடுகள் சில, தென்னாபிரிக்காவின் இந்த அறிவிப்பை சிறுபிள்ளைத் தனமானது எனக்கூட கருதின. தற்பொழுது அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு இலக்காகும் ஈராக்கூட அணுக்கனவைக் கொண்டிருக்கிறது என்று ஒரு சந்தேகம் மேற்குலகிற்கு உண்டு. ஆயினும் ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி கழகம் ஈராக்கின் கனவு நனவாகுவதற்கு இடம் கொடுப்பதில்லை என விடாப்பிடியாக இருக்கிறது. வளைகுடா போரின் பின்னர் ஈராக் மீது அமெரிக்கா கழுகுக் கண்ணர்க நோக்குவதும் இதற்கொரு காரணம். இந்த நாடுகளை விடுத்து வடகொரியாவும், அணுஆயுத அபிவிருத்தித்துறையினைக் கொண்டிருக்கிறது என்பது மறுக்கமுடியாதது. அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பமும் மூலப்பொருட்களும் வடகொரியாவிடம் உண்டு என்பது பல தரப்பினரின் கருத்து.

(மேற்கூறப்பட்டவையே சர்வதேச ரீதியில் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகளும் அவற்றின் சோதனை விபரமும் ஆகும். இத்துடன் இரண்டாம் பாகம் முடிவுக்குக் கொண்டுவரப்படுகிறது. மறு இதழில் 3-ம் பாகம் ஆரம்பமாகும்.)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ம் ஆண்டு நினைவு வணக்கம்

வீர ஜனனம்:
16.10.1978



வீர மரணம்:
09.01.1997

## லெப். நித்தியகலா

பரந்தன் - ஆனையிறவுச்சமரில் வீரச்சாவு

**சுந்தரலிங்கம் சிவாந்தினி**

(வளலாய், அச்சுவேலி)


வளலாய் மண்ணில் நீ வந்துதித்தவேளை
புது உறவு ஒன்று வந்ததென்று உருகி
மழலை உன் மேனி ஆரத்தழுவி
தங்கை என்ற உறவின் தனித்துவத்தைத்தான் உணர்ந்தோம்
உன்னை நாம் உணரவில்லை...

மழலைமொழி பேசி மகிழ்வித்து
கேள்விக் கணையால் எம்மைத்துளைத்து
புத்திக் கூர்மையால் நிமிர்ந்தபோது
எம் தங்கை என்று பெருமிதம்தான் கொண்டோம்
உன்னை நாம் உணரவில்லை...

அமைதியாய் அனைத்தையும் நீ உணர்ந்து
அன்பு மொழிபேசி நியாயம் இதுவென்று கூறி
மெல்ல நியாயத்தை நிலைநாட்டத்துடித்து
மௌனத்தில் அவற்றை நீ அலசிய போதும்
உன்னை நாம் உணரவில்லை...

சுதந்திரம் சுக்கு மிளகல்ல என்றபோதும்
சிறு கிளியும் சிறகடித்துப் பறக்குது என்றபோதும்
தமிழர் மட்டும் தலைகுனியும் நிலை ஏன் என்று
வினவியபோதும்
போராளியாய் நீ களம் புறப்பட்டபோதும்
உன்னை நாம் உணரவில்லை
ஆயினும் உன்னை உணரத்துடித்தோம்

களம் பல சென்று வென்று
விழுப்புண் பல பெற்று
வீரவேங்கையாய் வலம்வந்து
நாம் வாழ நீ(ங்கள்) போராடி
விடுதலையை வரித்து
விதையாய் நீ(ங்கள்) வீழ்ந்தபோதுதான்
உன்னை நாம் உணர்ந்தோம்
உன்னை மட்டும் உணரவில்லை
உண்மையையும் கூடவே உணர்ந்தோம்
தங்கையே வீரவணக்கம்!!



தகவல்: தயா - 0181 5748108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியில் நடந்த புளோரன்ஸ் வெள்ளப்பெருக்கு
## (The Florence Floods)

1966ம் ஆண்டு இலை உதிர் காலம், காலநிலை மிகமிக மோசமாக இருந்தது. மழையும் புயல்க்காற்றும் தொடங்கியதால் போலந்து, ஜேர்மனி, ஹொலண்ட், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் உட்பட எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் சிறுசிறு பாதிப்புகள் ஏற்பட்டபோதும், இத்தாலியில்தான் மிகப்பெரிய சேதம் ஏற்பட்டது.

எப்போதும் கூடுதலாக வெள்ளப் பெருக்கினால் பாதிப்படைவதற்கு அந் நாட்டின் அமைப்பும் ஒரு காரணமாகும். அங்கு தொடங்கிய கொடிய புயல் திகதி 'அர்னோ' (ARNO) எனும் கடல் கொந்தளித்து அடுத்துள்ள கிராமமக்களையும், பொருட்களையும், விவசாயங்களையும் அழித்தது. அங்குள்ள மக்கள் பயத்தினால் முடிந்த அளவு அயல் நாட்டுக்கு ஓடிச்சென்றனர்.

எல்லாமாக 17 பொதுமக்கள் இறந்ததாகவும் 4500 மக்கள் வீடுகளை இழந்தாதகவும், '40.000 மோட்டார் வண்டிகள் சேதமாக்கப்பட்டதாகவும், 18.000 கடைகள் சேதமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. சில இடங்களிலுள்ள எண்ணை தாங்கிகள் உடைந்து பெறுமதி மிக்க வரை

### வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் வறுகளும்

**– கவிதா –**

காற்றினாலும், மழையினாலும் வானத்திலிருந்து கடல் கீழ் விழுவது போன்று இரைச்சலுடன் மழை பொழிந்து இரண்டு நாட்கள் தொடர்ந்தன. 6 மாதங்களாக மழை தொடர்ந்து பெய்தால் எவ்வளவு வெள்ளப் பெருக்கு ஏற்படுமோ அதே அளவு வெள்ளம் 24 மணித்தியாலங்களில் ஏற்பட்டது. அத்துடன் மலைகளில் படிந்திருந்த பனிக்கட்டிகள் கடுமையான, சூடான காற்றின் வேகத்தினால் கரைந்து அந்த நீரும் கடலில் கலந்ததால் கடலின் நீர்அலை வேகம் கூடி அடுத்துள்ள காடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. அங்குள்ள சிறிய கற்பாறைகள், மண், பெருந் தொகையான மிருகங்கள் எல்லாம் அடுத்துள்ள நகரங்கட்கு வீசப்பட்டன.

கிராமங்களும் மோட்டார் வாகனங்களும் வெள்ளத்தினால் மூழ்கின. வீதிகளும், புகையிரதப் பாதைகளும், பாலங்களும், உடைந்தன. வீசப்பட்ட சிறிய பாறைகளாலும், மற்றும் உடைந்த் பொருட்களாலும் நிரப்பப்பட்டு கடல் நீர் வெளியேற்றப்பட்டு அதன் பின் வெள்ளம் சேர்ந்து மிகப் பெரும் அழிவை ஏற்படுத்தியது.

அங்கு 4000 கடைகளில் சேர்த்து வைக்கப்பட்ட பொருட்களும், தனியார்களின் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டன. விவசாயிகளின் விவசாய நிலம் கூடுதலாகப் பாதிக்கப்பட்டது. அது மாத்திரமன்றி மீண்டும் அதே வருடம் நவம்பர் மாதம் 4ம் யப்பட்ட சித்திரங்கள் அழிக்கப் பட்டதுடன் அங்கிருந்த மிகப் பிரசித்திபெற்ற 'உவ்விசி' (UFFIZI) எனும் ஓவிய அரங்கம் முற்றாக அழிக்கப்பட்டது. 130.000 மிக உயர்ந்த வேலைப்பாடுகள் கொண்ட சித்திரங்களும் அழிந்தன. 800 நகர சபைகள், 22.000 பண்ணைகள், பல்லாயிரக் கணக்கான வீடுகள் இல்லாது போயின. 50.000-க்கும் மேற்பட்ட மிருகங்கள் கொல்லப்பட்டதுடன், 1000க்கும் மேற்பட்ட வாகனங்கள் (Tractors) சேதமடைந்தன. 575 மில்லியன் லீரா நஷ்டம் என கணக்கிடப்பட்டது.

இறுதிக் கணக்கெடுப்பில் இறந்தோர் தொகை 112 ஆக அதிகரித்ததாக அறிவிக்கப்பட்டது.

2 வாரங்களின் பின் அங்கிருந்த மக்கள் வீடுகளை இழந்த மக்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் கடினமாக உழைத்தனர். வியாபாரத் துறையில் முன்னேறினர். நாட்டைத் துப்புரவு செய்து பழைய நிலைக்கு உருவாக்கினர்.

அங்குள்ள மக்கள் அரசாங்கத்தின் உதவியை எதிர் பார்க்காமல் தாங்களே உழைத்து நாட்டை முன்னேற்றினர். வெளியேறிய மக்கள் எல்லோரும் ஒரு வருடத்தின் பின்னர் தங்கள் நாட்டுக்குத் திரும்பினர். அவர்களின் கடுமையான உழைப்பினாலும் முயற்சியினாலும் ஓவியக் கூடங்கள், நூல் நிலையங்கள், தொல் பொருட்காட்சிச் சாலை என்பன உருவாக்கப்பட்டு நாடு பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.


**சிவாசினி வாகன சேவை**
**Chivashini Transport**

**வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை**

தொடர்புகட்கு: ஜெயா

0614616984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04

டிஸ்னி றெஸ்றோறன்ட்



Pub


காலத்தைப் பதிவுசெய்து
[illegible] எழுதுவது

# சாவின் அப்பாலும் வாழ்வோம்

ஒருபுறம் நீர்; ஒருபுறம் தீ நதியினுள் வெள்ளம்: கதையினில் நெருப்பு. வாழ்வு இருபுறமும் வற்றாத ஜீவநதியாய் ஓடுகின்றது.

இவற்றினிடையே நம் வாழ்வின் அர்த்தம்தான் என்ன? **உண்டு, உடுத்து, உறங்கிச் சீவிப்பது மாத்திரம்தானா?**

நம் வாழ்வின் அர்த்தம் மிகுந்த கணங்களை அதற்காகத்தான் செலவழிக்கப்போகின்றோமா?

நாம் வாழ்வின் அர்த்தத்தை இப்பொழுதே, இந்தக் கணமே தீர்மானித்தாகவேண்டிய கட்டாயத்திலும், கட்டத்திலும் நாம் வாழ்கின்றோம்.

நாளை என்பது மற்றுமொருநாளே. நாட்கள் வந்து வந்து கழிகின்றன. அவற்றில் நாளை தீர்மானிப்போம் என்போம்.

நாளை இன்னுமொருநாள் வரும். முதலாம் திகதி செய்வோம் என்போம். முதலாம் திகதி வியாழக்கிழமையாக இருக்கும்.

**'கள்ளவியாழன் கழுத்தறுக்கும்.'**

சரி திங்கட்கிழமை ஆரம்பிப்போம் என்போம். அதற்கு ஏதோ சாட்டிருக்கும். நாங்கள் நாட்களை ஒத்திப்போடுகின்றோம், நாட்களை ஒத்திப்போடுவதனால் எமது வாழ்வையே ஒத்திப்போடுகின்றோம். இதனால் வாழ்வின் வசந்தங்களையே இழந்துவிடுகின்றோம்.

**'வரம்கொடுக்கும் தேவதைகள்**
**வந்தபோது தூங்கினேன்**
**வந்தபோது தூங்கிவிட்டு**
**வாழ்க்கையெல்லாம் ஏங்கினேன்.'**

நாட்களை நாம் கைநழுவ விட்டால், இப்படி ஏங்கும் நாட்களே, எமக்கு வந்துசேரும். வருவதற்கிடையில், இப்போதே இந்தக் கணத்திலேயே நம் வாழ்வு எது என்று நாமே தீர்மானிப்போம்.

நம் வாழ்வை நாம் சற்றாவது ஒழுங்குபடுத்தவேண்டாமா?

காற்றுக்குச் சருகுகள் எத்துப்படும். காற்றுக்கு தீபத்தின் சுடர் ஆடிவிடும், அணைந்தும்போகும்.

காற்றுக்கு எத்துப்படும் சருகாய் ஆடிவிடும் தீபத்தின் சுடராய் நம் வாழ்வையும் வீசிவிடுவதா?

காற்றுக்கு அள்ளுப்படும் சருகுகள் போல நம் வாழ்வையும் ஆக்கிவிடுவதா?

நம் வாழ்வை நம்வசப் படுத்துகிறோம். நம் வாழ்வை நாம் தீர்மானிப்போம்.

நானே ராஜா, நானே மந்திரி, நானே சேவகன். நானே தலைவன், நானே தொண்டன், நானே ஆண்டான், நானே அடிமை

யாருக்கும் நான் ராஜாவாக இருக்கவேண்டாம், சேவகனாகவும் ஆகவேண்டாம், யாருக்கும் நான் ஆண்டானாகவும் இருக்கவேண்டாம். அடிமையாகவும் போகவேண்டாம்.

மேலாக யாருக்கும் மனிதர்களாக இருப்போம். யாரையும் மனிதர்களாகப் பார்ப்போம், மதிப்போம்.

நம் வாழ்வும் அதன் அர்த்தமும் அதனை அடியொற்றிப்போகட்டும். நம் சாவும், அதன் ஆழமும் அதனை விதந்தேற்றிப் பேசட்டும்.

வாழ்வின் அர்த்தம் பற்றிப் பேசுகையில் சாவு பற்றிய வார்த்தைகள் எதற்கு என்று கேளாதீர். தன் சாவு பற்றி சங்கடப்படுவதற்கு ஒன்றுமே இல்லை.

சாவு நிச்சயம். சர்வ நிச்சயம். நம் தேசம் என்றாலோ அகால மரணங்கள்தான் அதிகம்.

அதனிடையேயும் வாழ்தல் பற்றியே நாம் அதிகம் யோசிக்கின்றோம்.

**'கற்களிடையேயும் ஒரு பூ**
**மலர்ந்துள்ளதே'**

இன்னும் ஒன்று சொல்லப்போனால், சாவுக்கும் அப்பாலான வாழ்வு பற்றியே இப்போதெல்லாம் நம் சிந்தனை செல்கின்றது.

**'அன்று பிறந்து இன்று இறப்பதுள்**
**ஆனதன்று நம் மானிடவாழ்வுகாண்**
**அப்பனே மகனாகி வளர்ந்து உயிர்**
**ஓய்தல் அற்று உயர்வொன்றினை**
**நாடலே உண்மை'**

ஓம் அதுவே உண்மையானது.

மரணத்துள் வாழ்கிறோம் என்பதற்கும் அப்பால் மரணத்தின் பின்னான வாழ்வே எம்குறி.

**'நான் இங்கே சூழ்வேன், சுழல்வேன்,**
**சுமப்பேன், சுவைத்திருப்பேன்**
**வாழ்வேன் மடியும்வரை'**

என்றுபாடினார் மகாகவி. 'மடியும்வரை வாழ்வேன்' என்று பாடிய மகாகவி மரணத்தின் பின்னும் வாழ்கின்றார்.

வாழ்வின் இறுதிமூச்சு மரணமே. மரணத்திற்கு அப்பாலும் வாழ எழுதல் எங்ஙனம் சாத்தியம்? என்றும் சிலர் கேட்கலாம்.

கொய்யப்பட்ட மலர்களும் மணம் வீசும். இல்லையா?

மரம் வீழ்ந்தால், விறகாகிக் கரியாகும்வரை நின்றெரியும். இல்லையா?

சந்தனக்கட்டை உரஞ்சும்தோறும் உயிர்க்கும். மணம் தரும். அதனை மறுப்பீரோ?

முற்றுப்புள்ளிக்கு அப்பாலும் கவிதை அர்த்தமும், முழுமை பெறுவதில்லையா?

மரணம் எப்படி வாழ்வின் முடிவாகிப்போய்விடும்?

புத்தரும், யேசுவும், முகம்மதுநபியும் மகாத்மாகாந்தியும் இப்போதும் நம்கூட வாழ்கிறார்கள். இவர்களது வாழ்வு இறவாத வாழ்வல்லவா?

மார்கஸ், ஏங்கல்ஸ், லெனின், மாசேதுங் இவர்கள் தம் சொல்லாலும், செயலாலும் இப்போதும் நம்மிடையே வாழ்கிறார்கள். இல்லையா?

கற்பனைக்கும் எட்டாத கவி வல்லமை படைத்தோர் பலர் நம்மிடையே வாழ்வது நமக்குத் தெரியாததா?

இப்போதும் நம் தாய்த்தேசத்தில் தம் துணிச்சலான வாழ்வினால், நெஞ்சாரம் மிக்க செயலினால், எவருக்கும் வளைந்துகொடுக்காத தலைமைப் பண்பினால் எப்போதும் கைவிடப்படமுடியாத இலட்சியத்தினால், சாவுக்கும் அப்பாலான வாழ்வினைத் தேர்ந்திருக்கிறார்கள். நம்புதல்வர்கள். மண்ணின் மைந்தர்கள்.

நம் வாழ்வை அர்த்தம் செறிந்ததாக ஆக்குவோம், சொல்கின்றோம்.

சொல்வதிலும் செயல் வலிதல்லவா? சொல்லிவிட்டுச் செயல் செய்தவரே வீரர் ஆயினர்; தலைவர் ஆயினர்.

செயலற்றுச் சொல்லிக்கொண்டா நாமும் இருக்கப்போகின்றோம்.

சிந்திப்போம். செயற்படுத்துவோம்.

நாம் செய்வது என்னவெனில், விமர்சிப்பதில் நாட்களை வீணாக்குகின்றோம். விமர்சித்தல் பாவமல்ல. அது ஆக்க பூர்வமாய் அமைதல்வேண்டும். செயலின் முனைப்பைக் கிள்ளி எறிய, அழித்துவிட முயல்கின்றோம். 'உது சரிவராது' என்ற ஒற்றைச்சொல்லால் அப்படியே தூக்கி எறிஞ்சு விடுகின்றோம். மோதி, மிதித்து, நசுக்கி, துவம்சமாக்கிவிடுகின்றோம்.

இவற்றிலிருந்து நாம் விடுபட்டாக வேண்டும்.

நம் முன்னே பெருங்கடல் விரிந்து கிடக்கின்றது. அதனைக் கடந்து பார்க்கவேண்டும்.

நம்முன்னே காட்டாறு பாய்ந்து ஓடுகின்றது. அதனுள்ளே புகுந்து வெளிவரவேண்டும்.


நம்முன்னே நெருப்புச்சுவாலைவிட்டு எரிகின்றது. அதனைத்தாண்டிப்போக வேண்டும்.

வாழ்தல்; அதற்காக அனைத்தையும் வசப்படுத்தல்; வாழ்தல் அர்த்தம் நிறைந்து இலட்சியம் நோக்கியதாக அமைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி நேரத்தில் இங்கிலாந்து வெற்றி

மெல்போர்னில் நடந்துமுடிந்த அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4வது டெஸ்ட் போட்டியில் முதலில்



ஸ்ரீவ் வோவ்

துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரிவாட்டின் 107 ஓட்டங்களாலும் நிதான ஆட்டக்காரன் ராம்பிரகாசின் 63 ஓட்டங்களாலும் 270 வரை நகர்ந்தது. பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலியா எதிர்பார்ப்பை சிதறடிக்காத வகையில் இங்கிலாந்து ஓட்ட எண்ணிக்கையைக் கடந்து 340 ஓட்டங்களுக்கு விரைந்தது. உதவித் தலைவர் 'ஸ்ரிவ் வோவ்' 122 ஓட்டங்களை தனது பங்காகக் குவித்தார். மீண்டும் கிடைத்த துடுப்பாட்ட சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து வீரர்கள், 'ஸ்ரிவாட்', 'குசைன்', 'கிக்' அரைச் சதங்களாக முறையே 52, 50, 60 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்தின் 244 ஓட்டங்களுக்குத் துணையானார்கள். 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றிபெறுவதுடன் தொடரையும் தமதாக்கும் சந்தர்ப்பத்தில் ஆடிய அவுஸ்திரேலியா ஒரு கட்டத்தில் 3 விக்கட்டுக்களை மட்டும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, கெட்லியின் சிறந்த பந்துவீச்சினால் 162 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இறுதி 4 விக்கட்டுக்கள் 14 பந்துகளில் கழற்றப்பட்டதற்கு பங்காற்றிய கெட்லி 60 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுக்களை வீழ்த்தினார். மயிரிழையில் 12 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இங்கிலாந்து தொடரை 2:1 என்று ஆக்கினாலும் வெற்றிபெற முடியாதுள்ளது.

# தொடரை வெற்றிகொண்ட தென்னாபிரிக்கா

முதல் இரு டெஸ்ட் போட்டிகளையும் வெற்றிகொண்ட தென்னாபிரிக்கா மூன்றாவது டெஸ்டை மேற்கிந்திய தீவுகளுடன் எதிர்கொண்டு முதலில் மேற்கிந்திய தீவுகளை அபாரமாக ஆடவிடாது 198 ஓட்டங்களுக்குள் தடுத்தது. அணித் தலைவர் லாறா 51 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்கா றேடஸ்சின் 87 ஓட்டங்களுடன் 312 ஓட்டங்களை அடைந்தது. மேற்கிந்திய பந்துவீச்சாளர் றோஸ் 7 விக்கட்டுக்களை மடக்கிப் போட்டார்.

ஈடாடிய நிலையில் இரண்டாவது இனிங்சை தொடர்ந்த மேற்கிந்திய தீவுகள் சந்திரபோலின் 75 ஓட்டங்களாலும் லாறாவின் 79 ஓட்டங்களாலும் 259 ஓட்டங்களை எட்டிய போதும் வெற்றிக்கான அறிகுறி தென்படவில்லை. மிக இலகுவான வெற்றி இலக்கான 146 ஓட்டங்களை ஒரு விக்கட் இழப்புடனும் கிறிஸ்ரனின் ஆட்டமிழக்காத 71 ஓட்டங்களுடனும் பெற்ற தென்னாபிரிக்கா 5 போட்டிகள் தொடரை முதல் மூன்று போட்டிகளுடனும் வெற்றிகொண்டது.

# டெண்டுல்கர் அசாரால் தடுக்கமுடியாத தோல்வி

முதல் டெஸ்ட் போட்டி மழையினால் நடைபெறாது போனதால் மிகவும் எதிர்பார்ப்புடன் ஆரம்பமான நியூசிலாந்து இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையிலான இரண்டாவது முதலில் துடுப்பாடிய இந்தியா, 'சைமன் டூலி'ன் ஓய்வுக்குப் பிந்திய பந்துவீச்சில் 7 விக்கட்டுக்களை இழந்ததோடு, 208 ஓட்டங்களுக்கு மேல் எடுக்கவும் முடியவில்லை. அனுபவமான அணித் தலைவர் மட்டும் 103 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து றாஸ், அஸ்ரல், வெலோறி ஆகியோரின் அரைச் சதங்களால் முன்



மக்மிலன்

னணிக்குச் சென்று 353 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னைய தவறைத் திருத்திய விதத்தில் ஆடிய இந்தியா, இளம்புயல் டெண்டுல்கரின் 113 ஓட்டங்களால் 356 ஓட்டங்களைப் பெற்றது. 211 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற வேண்டிய நியூசிலாந்து அனில் கும்பிளேயின் சுழற்பந்து வீச்சுக்கு ஆரம்பத்தில் சுழன்றாலும், மக்மிலானும் கர்னஸ்ஸும் நிதானமாக ஆட்டத்தை நகர்த்தி முறையே 74, 61 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கட்டுக்களால் நியூசிலாந்துக்கான வெற்றிக்கு வழிவகுத்தனர்.

# சாம்பிராஸ் விலகிய 'அவுஸ்திரேலிய ஓப்பன்'

நடைபெறும் முக்கிய டென்னிஸ் போட்டிகளில் ஒன்றும், வருட முதற் பகுதியில் நடைபெறவுள்ளதுமான 'அவுஸ்திரேலிய ஓப்பன்' போட்டிகள் திட்டமிட்டபடி ஜனவரி 18-லிருந்து ஜனவரி 31 வரை விக்ரோரியா மாநிலத்திலுள்ள மெல்போர்ன் நகரில் நடைபெறவுள்ளது. ஆண்கள், பெண்கள், இரு பாலாரிலும் சிறந்த முன்னணிப் போட்டியாளர்கள் கலந்துகொள்கிறார்கள். ஆனால், ஆண்களுக்கான 'நம்பர் 1' வீரர் சாம்பிரஸ் போட்டியிலிருந்து விலகுவதாக சென்ற வாரம் அறிவித்திருக்கிறார். 1994, 1997 போட்டிகளை வெற்றிகொண்ட சாம்பிரஸ் கடந்த 5 வருடங்களில் முக்கிய டென்னிஸ் போட்டியொன்றை



பீற் சாம்பிரஸ்

தவற விடுவது இதுவே முதல் முறையாகும். அத்தோடு 'நம்பர் 1' ஸ்தானத்தையும் இழக்கும் சாத்தியக்கூறுகளும் தென்படுகிறது. ஓய்வு தேவையென காரணம் காட்டும் சாம்பிராசுக்கு இது நிரந்தர ஓய்வாகக்கூடப் போய்விடலாம்.

தொகுப்பு:
பொன். தாமோதரம்

## கடை விற்பனைக்கு

Aubervilliers Quatre Chemins மெற்றோவுக்கு அருகாமையில் உள்ள மளிகைக்கடை விற்பனைக்கு உண்டு

**தொடர்புகட்கு:**
*T.P: 0607185901 / 0141713470*

## கிரிக்கட்

1999ம் ஆண்டு கோடை காலத்தில் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படும் வீரர்கள் சிலரை கிழமைக்கு ஒருவர் வீதம் அறிமுகம் செய்யும் வரிசையில் அடுத்து வருபவர் பாகிஸ்தான் அணியின் வளர்ந்து வரும் நட்சத்திரம் சக்லன் முஸ்ராக்.

### சக்லன் முஸ்ராக் (SAQLAIN MUSHTAQ)



அண்மைக் காலங்களின் தலைமை உட்பட பல வழிகளிலும் ஆட்டம்கண்டு வரும் பாகிஸ்தான் அணிக்கு சிறந்த ஒருநாள் பந்துவீச்சாளருக்கு முஸ்ராக் கிடைத்திருப்பது சற்று நிம்மதியான விடயம். சிந்து மாகாண தலைநகர் லாகூரில் 27 நவம்பர் 1976-இல் பிறந்த அவர் தனது 19வது வயதில் சிறீலங்காவுடனான ஆட்டத்தில் ஒருநாள், மற்றும் டெஸ்ட் போட்டிகளினூடு உலகிற்கு அறிமுகமானார்.

வலதுகர பந்துவீச்சாளரான இவர இதுவரை 17 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 65 விக்கட்டுக்களை வீழ்த்தினார். இறுதியாக நடைபெற்ற சிம்பாவேயுடனான போட்டியில் தனது சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாக 32 ஓட்டங்களுக்குள் 5 விக்கட்டுக்களை வீழ்த்தினார். டெஸ்ட் போட்டிகளில் பெரும் சாதனை எதையும் படைக்காவிட்டாலும் ஒருநாள் போட்டிகளில் சாதனைகள் படைத்து வருகிறார். 88 ஒருநாள் போட்டிகளில் பங்கு கொண்டு 176 விக்கட்டுக்களை சாய்த்திருக்கிறார். சிறந்த பந்துவீச்சாக 29 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்கள் வீழ்த்தியதைக் குறிப்பிடலாம். முரளிதரன் போன்று `Off spin' பந்துவீச்சாளராக இருந்தாலும் ஒருநாள் பந்தயங்களில் முரளிதரனையே மிஞ்சிவிட்டார். தற்போது இருக்கும் சிறந்த `Off spin' பந்து வீச்சாளர்கள் என்றால் இவர்கள் இருவருமே என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும்.

முரளிதரன் தான் சிறந்த `Off spin' பந்துவீச்சாளர் என்று வாதிட முற்படுபவர்கள், முஸ்ராக்கின் ஒருநாள் சாதனைகள் சிலவற்றை அறிந்துகொண்டால், ஒருநாள் போட்டிகளுக்கு சிறந்தவர் யார் என்பதை மிக இலகுவாக அடையாளம் கண்டு விடுவார்கள்.

100 விக்கட்டுக்களையும், 150 விக்கட்டுக்களையும் மிகக் குறைந்த போட்டிகளில் கைப்பற்றியவர் நுஸ்ரக். வருடமொன்றில் கூடிய விக்கட்டுக்களை வீழ்த்திய பந்துவீச்சாளராக தன் பெயரைப் பதித்தவரும் இந்த முஸ்ராக்கே ஆவர். அத்துதோடு மூன்று விக்கட்டுக்களை தொடர்ச்சியாக `Hat-trick' ஒருமுறை பெற்றுமுள்ளார். இவை அனைத்தும் ஒருநாள் போட்டிகளின் பந்து வீச்சு சாதனையாக இருக்கும்போது, டெஸ்ட் போட்டிகளின் சாதனையாக இருக்கும்போது, டெஸ்ட் போட்டிகளின் சாதனை ஒன்றும் முஸ்ராக்கிடம் உண்டு. ஆனால் அது துடுப்பாட்ட சாதனையாகும். 1996ம் ஆண்டு சிம்பாவேக்கு எதிரான போட்டி ஒன்றில் வசிம் அக்கிரத்துடன் இணைந்து 8ம் விக்கட் இணைப்பாட்டமாக உலக சாதனை படைத்ததாகும்.

இன்னும் 6 மாதங்களுக்குள் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கெடுப்பார் என எதிர்பார்க்கப்படும் முஸ்ராக்குக்கு இங்கிலாந்து மைதானங்கள் மிகவும் பழக்கப்பட்டவை. இங்கிலாந்தின் பிரபல்யமான Surrey கழகத்திற்காடிய இவரால் ஒவ்வொரு மைதான அமைப்பு நுணுக்கங்களும் பந்துவீச்சு செயற்பாடுகளும் நன்றாகத் தெரிந்திருக்கிறது. இவரைத் தவிர பாகிஸ்தானின் மற்றைய முன்னணிப் பந்துவீச்சாளர்களான வசிம் அக்ரம், விக்கார் யுனாஸ் கியோரும் இவ் விடயத்தில் பரீட்சயமானவர்கள். ஆனால், அவர்கள் இருவரும் வேகப் பந்துவீச்சாளர்கள். மொத்தத்தில் பாகிஸ்தான் வேக, சுழல் பந்துவீச்சாளர்களுக்கு இங்கிலாந்து மைதானங்கள் எந்த அளவுக்கு கைகொடுக்கப் போவது என்பதை அறிய முன்பு முஸ்ராக்கின் சுழல்பந்துவீச்சிற்குள் இன்னும் எத்தனை சாதனைகள் சுழலப் போகின்றது என்பதுதான் முக்கியம். சென்ற வருடம் சுழல்பந்தால் இங்கிலாந்தில் கொடிகட்டியவர் முரளிதரன் என்றால் இந்த வருடம் முஸ்ராக்கா என்பது மிகப்பெரிய கேள்வி.

**தொகுப்பு:**
**பொன். தாமோதரம்**

## அறிவித்தல்

தமிழ்ச் சிறார்களின் நலன்கருதியும், தமிழ் மக்களின் விளையாட்டுத் தரத்தை வளர்க்கும் முகமாகவும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் விளையாட்டுப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக, பூப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களின் பயிற்சிகளுக்கான மைதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் மாலை 6.00 மணியிலிருந்து 8.00 மணி வரையிலும், மாதத்தில் முதல் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும் 30, Rue Louis Lumiere, 75020 Paris–ல் அமைந்திருக்கும் Stade de Lumiere மைதானத்தில் பயிற்சிகள் நடைபெறும்.

மேலதிக விபரங்கட்கு: 01 43 58 11 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.61 | 1.66 | 0.18 | 0.75 |
| பிராங்பேட் | 1.64 | – | 2.79 | 0.30 | 1.24 |
| லண்டன் | 0.59 | 0.35 | – | 0.11 | 0.44 |
| பாரிஸ் | 5.53 | 3.35 | 9.36 | – | 4.15 |
| சூரிச் | 1.32 | 0.81 | 2.28 | 0.24 | – |
| பம்பாய் | 42.60 | 25.88 | 70.71 | 7.57 | 32.12 |
| கொழும்பு | 68.15 | 41.41 | 113.12 | 12.33 | 51.39 |

(23ம் பக்கத் தொடர்ச்சி)

### றொனால்டோ.....

*யமா படிச்சு நல்ல நிலைக்கு வர வேணும். இவன் இப்பகூட நல்லாப் படிப்பான். விளையாட்ட நான் தடுக் கேல்ல. ஆனாலும் படிப்பை நல்லப டியா தொடர வேணுமெண்டதே என்ர விருப்பம்.'* சொல்லியவரை இடைம றித்து *'இவவுக்கு வெற்றி தோல்வி யில அக்கறையில்ல. மச்சால வந்த வுடன தம்பிக்கு ஒண்டுமில்லத் தானே எண்டு அணைச்சுக்கொள் ளுறதோட இவவின்ரை அலுவல் சரி.'*

தந்தை கூறுகின்றார் தனது தம்பி நன்றாக விளையாடி முன்னேற்றம டைய வேணுமெண்டு விரும்பும் அதேநேரம் அவனுடன் கூடவே வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று போட்டிகளைப் பார்க்க ஆசைப்படு வதாக அவனது சகோதரி கூறுகின் றார்.

தீபனின் எதிர்காலம் பற்றி தந் தையிடம் கேட்டபோது *'இங்க எவ் வளவு திறமையா விளையாடினா லும் தேசிய மட்டத்திற்கு எடுக்க மாட்டாங்கள் எண்டு என்ரை சிநே கிதன் சொன்னான். ஆனா விளை யாட்டில அப்பிடியில்ல. ஊரில நல்ல விளையாட்டுக்காரரா இருந்த கன பேர் இங்கேயிருக்கினம். அவை யன் தங்கட பிள்ளையளுக்கும் ஊக் கம் குடுத்து பெரியவிளையாட்டு வீ ராக்கினா எங்களுக்கும் பெருமை. அது எங்கட இனத்திற்கும் பெருமை. எங்கட நாட்டில நிறைய உபகரணப் பிரச்சினை, தொழில் நுட்பப் பிரச்சினை யெல்லாம் இருக்குது. இதுகளைத் தீர்த்து எங்கட நாட்ட முன்னேற்றுவ தற்கு எங்கள மாதிரி புலம்பெயர்ந்து வாழுறனாங்கள் நாங்க வாழுற நாடுகளில இருந்து கொஞ்சமாவது ஏதாவது படிச்சுக்கொண்டு போக வேணும். இந்த வகையில என்ர மகன ஒரு நல்ல விளையாட்டு வீர னாக்கி பாக்கவேணுமெண்டு விரும்பிறன்.'* என்கின்றார்.

1994ம் ஆண்டு மாவட்ட ரீதியா கச் வெளியிடப்பட்ட நாட்காட்டியில் இவர்களது உதைபந்தாட்ட குழு வின் படமும் இவர்களது பெயர்க ளும் வெளிவந்திருந்தது குறிப் பிடத்தக்கது. உதைபந்தாட்டத்தில் தீபன் தனது திறமைகளை வெளிக் காட்டி பிரகாசிக்கவேண்டுமென்று ஈழமுரசு வாழ்த்துகின்றது.

**– போகேஸ்**

(23ம் பக்கத் தொடர்ச்சி)

### உலகம் மறந்துவிட்ட.....

சர்வதேச மத்தியஸ்தத்தை நாடு வதற்கான முயற்சிகளை மேற் கொள்வதில் அரசாங்கமோ அல்லது விடுதலைப் புலிகளோ அக்கறை காட்டாமல் இருப்ப துமாகும் என்று அந்த இராஜ தந்திரி கூறினார்.

சிறீலங்கா போர் அடிப்படை யில் உள்நாட்டு மயப்படுத்தப் பட்டுவிட்டது. இப்போர் ஒரு உட்பிரச்சனை. இருதரப்பிலும் உள்நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டியது என்பதே பொது வான அபிப்பிராயமாக இருக்கி றது என்று ஆசிய நாட்டு இராஜ தந்திரி ஒருவர் தெரிவித்தார்.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### 'தரசர'....

தலைமை வகித்துள்ளார்.

'புலிபாய்ந்த கல்' பகுதியில் வைத்து இந்த இராணுவ நடவ டிக்கை விடுதலைப் புலிகளால் முறியடித்து திருப்பி அனுப்பப் பட்டுள்ளமை ஜனக பேரேரா விற்கு கிடைத்த அவமானம் எனவும் கருதப்படுகிறது.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்புப்....

ஆனால் இவ்வாறான கட்டுப் பாடுகள் எதுவும் விதிக்கும் நோக்கம் தமக்கு இல்லையென பெண்கள் விவகார அமைச்சுத் தெரிவித்ததையடுத்து கொழும் புப் பெண்களின் பதட்ட நிலைமை தற்பொழுது தணிந் துள்ளது.

### ஈழமுரசு சிறப்பிதழ்

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுடன் ஈழமுரசு தனது ஐந் தாவது அகவையில் நுழைகின்றது. எனவே, அடுத்த இதழ் பல்வேறு சிறப்புக் கட்டுரைகளை உள்ளடக்கி சிறப்பிதழாக வெளிவரவுள்ளது.

## இது குசும்புங்கோ

★ ம.தி.மு.க என்றால் என்ன? வைகோ என்றால் யார்?

- *'ம.தி.மு.க புலிகளை ஆதரிப்பதற்காக நீங்கள் கவலைப் படுகிறீர்களா?' என இந்திய பத்திரிகையாளர் ஒருவர் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவை கேட்டபொழுது.*

★ முல்லைத்தீவு தவிர்ந்த நாட்டின் அனைத்துப் பகுதிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ளதால் மல்லாவிதான் தற்பொழுது பிரபாகரனின் பாதுகாப்பு வலயமாக உள்ளது.

- *தினமின*

★ யுத்தத்தின் நோக்கத்தை மறந்து பிரபாகரன் தனது பாது காப்பை பலப்படுத்துவதால் புலிகள் இயக்கத்தை சேர்ந்த 36 தளபதிகள் எதிர்த்துள்ளனர். அதனால் அவர்கள் புலிகளி னால் கொல்லப்பட்டுள்ளனர்.


- *திவயின*

★ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் 60 பேர் ஆயு தங்களுடன் தலைமறைவாகி விட்டனர். புலிகளின் முக்கிய இராணுவ இரகசியங்கள் அவர்களுக்கு தெரியும். இதனை பாதுகாப்புப் படைகளிடம் கூறிவிடக்கூடும் என்பதால், புலிக ளின் தலைவர் பிரபாகரன் மிகுந்த கலவரங்களுக்கு உள்ளா கியுள்ளார்.

- *சிலுமின*

## மரண அறிவித்தல்

பிறப்பு: 05.04.1934



உதிர்வு: 30.12.1998

### வைத்திலிங்கம் புலேந்திரன்

வட்டு மேற்கு வட்டுக்கோட்டை தமிழீழத்தை பிறப்பிடமாகவும், பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் புலேந்திரன் அவர்கள் 30.12.1998இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தங்கமுத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற குமாரவேலு, நாகமுத்து தம்பதிகளின் மருமக னும், செல்வப்பவோன் அவர்களின் அன்புக்கணவரும், புவனேந்திரன் (நோர்வே) கலியுக வரதன் (இலங்கை), சுமந்திரன் (பிரான்ஸ்), காலஞ் சென்ற வீரவேங்கை புவனேந்திரசோதி (மரியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணவேணி, லோஜினி ஆகியோரின் மாமனாரும், மயூ ரன், ஜெயதர்சன், சுபாகரன் ஜோதினி (நோர்வே), சுலோஜனன், கீர்த் தனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும்;

காலஞ்சென்ற மாசிலாமணி, மகாலிங்கம், குருகுலம், பாலாமணி, தேவராசா, வேலும் மயிலும், மதியாபரணம், நீலாவதி, ஞானம்மா (இலங்கை), பஞ்சநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதர ரும், கனகாம்பிகை அம்மா (பிரான்ஸ்), காந்தூரம்மா (இலங்கை), பூலோகசுந்தரம்பிள்ளை (இலங்கை), தெய்வேந்திரம்பிள்ளை (இலங்கை), முருகையா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 11.01.99 அன்று பாரிசில் Funerarium 95, rue Marcel Sembat, 93430 Villeteneuse (Mo: Porte Paris இலிருந்து பஸ் இலக்கங்கள் 168, 268 - தரிப்பிடம்: rue Pierre Curie) எனும் முகவரியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

*தகவல்: பிள்ளைகள்*

புவனேந்திரன் (நோர்வே), சுமந்திரன் (பிரான்ஸ்), கலியுகவரதன் (இலங்கை)


மேலதிக விபரங்களுக்கு: 01 48 66 91 32

Pub

## மரண அறிவித்தல்

(இறுதிச் சடங்கு)

தோற்றம்: 28.12.58



மறைவு: 25.12.98

### திரு. ஜோசையேசுராஜா (தாடி)

**இளவாலை**

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும், பாரிசை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. ஜோசை யேசுராஜா 25.12.98 அன்று பாரிசில் காலமானார்.

இவர் காலம் சென்ற திரு. ஜோசை, திருமதி.ஜோசை ஆனாசி அவர்களின் அருமைப் புதல்வனும், மேரி அஞ்சலாவின் (ஆசிரியை, சின்னத்திரேசாள் மகா வித்தியாலயம், கரம்பொன்) அன்புக் கணவரும், சிறிஸ்ரா, எனெஸ்லின் ஹென்றி, யசிந்தா, சலோமை ஆகியோரின் அருமைச் சகோதரரும், ஞா. செல்வரட்ணம், மாளின், வின்னராஜா, பற்றிக் செல்லையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைத் திருப்பலி Eglise du Sacre Coeur. 104. rue du Docteur Bauer. 93400 Saint Quen என்னும் முகவரியில் அமைந்துள்ள தேவாலயத்தில் 06.01.1999 பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் Cimetiere Communal, 93400 Saint Quen-ல் அமைந்திருக்கும் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

*தகவல்:*

**ஹென்றி** (0143075956)

(இறுதிக்கிரியை நடைபெறும் இடத்திற்கு வரும் பாதை Mo: Clignancourt இலிருந்து 166 அல்லது 255-ம் இலக்க பஸ் எடுத்து இரண்டாவது தரிப்பிடம்)

AMV

IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

KING Telecom
தமிழ் ஈழம் இலங்கை இந்தியா 45 32
King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்
92, Rue de Bellville, 75020 Paris (M°: Pyrenees)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96
33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tél.: 03 44 55 41 59 Fax: 03 44 55 42 51
www.kingtelecom.com.


# உலகம் மறந்துவிட்ட ஒரு போர்

## - ராய்ட்டர்

சிறீலங்கா இனநெருக்கடியின் விளைவாக மூண்டபோர் நீண்டகாலமாக தொடருவதால் உலகம் அதுகுறித்துப் பெரிதும் அக்கறைப்படுவதாக இல்லை என்று இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளார்கள். உண்மையில் எவருமே அக்கறைப்படுகிறார்கள் இல்லை என்றே நான் கருதுகிறேன். நீண்டகாலமாக இப்போர் இழுபட்டுக்கொண்டே போகிறது. இதனால் உலக வெகுஜன தொடர்புசாதனங்கள் கரிசனை காட்டுவதாக இல்லை. சர்வதேச தாக்கங்களும் இல்லை என்று மேற்குலக இராஜதந்திரி ஒருவரும் தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் உலக அரங்கில் வேறுபாடு எதையும் காணவில்லை. சிறீலங்கா ஹசாவோ (பலஸ்தீனியா) அல்லது கொசோவாவோ இல்லை, என்று இன்னொரு மேற்குலக இராஜதந்திரி கூறினார். அரசியல் தீர்வொன்று காணப்படுவதற்கான அறிகுறி தென்படாத பட்சத்தில் சிறீலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான போர் அடுத்தவருடமும் தீவிரமாகத் தொடரும் என்று ஏனைய இராஜதந்திரிகள் கூறுகின்றார்கள்.

இந்த வருடத்தைப்போலவே 1999லும் அதே பிரச்சனைகள் தோன்றும். போர் தொடரும். புலிகளிடம் இருந்து நிலத்தினை படையினர் கைப்பற்றினாலும் அதனால் எதுவுமே முடிவுக்கு வரப்போவதில்லை என்று முதலாவது இராஜதந்திரி கூறினார்.

சிறீலங்காவிலே போரில் கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள், இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை முன்னாள் யூக்கோசிலேவியாவில் நேரும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையிலும் எவ்வளவோ கூடுதலானதாகும். ஆனால் சிறீலங்கா மீது சர்வதேச கவனம் திரும்பவில்லை. நீண்டகாலமாகப்போர் தொடருவதால் சற்று அசௌகரியம் அடைந்திருக்கும் சிறீலங்கா, அதுபற்றி பெரிதாக பேசாமல் மௌனமாக இருக்கவே விரும்புகின்றது. சர்வதேச கவனம் திரும்பாததற்கான இன்னொரு காரணம்,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புலிகளின் பதுங்குகுழிகளுக்கே உலகவங்கி உதவி

## - சிறீலங்கா இராணுவம்

வடக்கு கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் உலக வங்கி சுமார் நாலரைக்கோடி ரூபா செலவில் மேற்கொள்ளவுள்ள நீர்ப்பாசன புனரமைப்பு திட்டத்தினை சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கடுமையாக எதிர்ப்பதுடன் விடுதலைப்புலிகளுக்கு பதுங்கு குழிகளை அமைக்கவே உலகவங்கியின் திட்டம் உதவப்போகிறது எனவும் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் சீமெந்து, இரும்புக் கம்பிகள் போன்ற கட்டட மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பதுங்கு குழிகளை புலிகள் அமைப்பார்கள். இதனை கண்காணிக்க முடியாத நிலை அரசிற்கு ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் உலகவங்கி அதிகாரியின் குழுவொன்று புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குச் சென்றபோது விடுதலைப்புலிகள் இக்குழுவை வரவேற்று உபசரித்து அனுப்பினர். அதன் பின்னர், இக்குழு இராணுவ அதிகாரிகளைச் சந்தித்தபோது இராணுவதரப்பு உலக வங்கியின் மேற்படி திட்டத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் உலக வங்கி தற்போது தனது திட்டத்தை செயற்படுத்த முன்வந்துள்ளது.

# சிறீலங்காவில் புதிய கூட்டுநடவடிக்கை பணியகம்

இதுவரைகாலமும் சிறீலங்காவின் இராணுவக் கட்டமைப்பில் கூட்டு நடவடிக்கை கட்டளைப்பணியகமாகச் செயற்பட்ட பகுதி ஜனவரி 6ம் திகதி முதல் கூட்டு நடவடிக்கைப் பணியகமாக மாற்றப்பட்டுள்ளது. புதிய பணியகத்தின் இணைப்பாளராகவும் முப்படைகளினது வழிநடத்துனராகவும் அண்மையில் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் ரொஹான் தளுவத்த இருப்பார் எனவும் அரசு அறிவித்துள்ளது. முன்னர் இவ்வாறான பணியகம் அமைக்கப்படுவது தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை சில எதிர்ப்புக்களைத் தெரிவித்ததையடுத்து சில மாற்றங்களுடன் புதிய கூட்டு நடவடிக்கைப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளது.

# கொழும்புப் பெண்களின் பதற்றம்

குட்டைப் பாவாடைகள், இறுக்கமான காற்சட்டைகள், ஆகியவற்றை பெண்கள் அணிவது ஜனவரி மாதம் 1ம் திகதியிலிருந்து தடை செய்யப்படும் என கொழும்பில் நிலவிய வதந்தியால் இளம்பெண்கள் பெரும் பதற்றத்திற்குள்ளானார்கள். இவ்வாறான உடை அணிபவர்கள் மீது 1000 ரூபா அபராதம் விதிக்கப்படும் எனவும், சிறீலங்காவின் கலாச்சார அமைச்சு பெண்கள் விவகார அமைச்சு ஆகியன இணைந்தே இதனை மேற்கொள்ள இருப்பதாகவும் முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தச் செய்திகளால் கொழும்புப் பெண்கள் பதற்றமடைந்ததுடன், அலுவலகங்களில் இதுபற்றியே ஆர்வத்துடன் பேசிக்கொண்டார்கள்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வன்னியில் அதிசயக் குழந்தை

இரு தலைகள், நான்கு கைகள், நான்கு கால்கள் உடைய அதிசயக்குழந்தை வன்னி மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் பிறந்துள்ளது. இக்குழந்தை பிறந்தபின் சுமார் 10 மணித்தியாலங்களே உயிருடன் இருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கோழிச்சண்டை விபரீதமானது

மட்டக்களப்பு மகிலூர்முனை கிராமத்தில் பத்மநாதன் என்பவர் தனது கோழிகளை திருடிவிட்டதாக அவரது சகா ஒருவர் குற்றம்சாட்டினார். இதனைப் பொறுக்கமுடியாத பத்மநாதன் தன்னைக் குற்றஞ்சாட்டியவருடன் கடும் சண்டையில் ஈடுபட்டார். பத்மநாதனின் கோபாவேசமான பதிலால் ஆத்திரமுற்ற கோழி உரிமையாளர் அருகிலிருந்த சிறீலங்கா அதிரடிப்படை முகாமிற்கு சென்று பத்மநாதனை விடுதலைப் புலி என குற்றஞ்சாட்டியுள்ளார். உடனடியாக மகிலூர் கிராமத்துக்குச் சென்ற அதிரடிப்படையினர் அங்கு பத்மநாதன் தனது கிராமத்துக்குள் நுழைவதைக் கண்டனர். பத்மநாதன் தன் கையில் கொண்டு சென்ற கைத்தடியை ஏகே 47 என எண்ணி அதிரடிப்படையினர் பத்மநாதனைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

# 'தரசர' தலைமை ஜனக பெரேரா

மட்டு கிரான் முகாமிலிருந்து தொப்பிக்கல காட்டுப் பகுதியை நோக்கிய 'தரசர' இராணுவ நடவடிக்கைக்கு சிறீலங்காவின் சிரேஷ்ட இராணுவ தளபதியான ஜனக பெரேரா

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

பாரிஸ் லாசப்பலில்
தர்ஷனா உணவகம்

நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org